T. 1614

வெளியீடு—சசரு

1614

# தமிழ்ப் புலவர் வரிசை

## இரண்டாம் புத்தகம்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

கழக வெளியீடு-சசரு

# தமிழ்ப் புலவர் வரிசை

## இரண்டாம் புத்தகம்

ஆசிரியர் :
திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை

*All Rights Reserved*

*Published by*
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD., ::
TIRUNELVELI & MADRAS

Printed at The Progressive Printers Madras for
P. I. C. No. Ms. 95-B. 500 Copies—11-'47

# பதிப்புரை

"பண்டைப் புலவர் பதினொருவர் செய்தியெலாம்
கண்டுதமிழ் ஓம்பல் கடன்."

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடாஉழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணுக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும்.

அம் முறையில் "தமிழ்ப் புலவர் வரிசை இரண்டாம் புத்தகமாக" இது வெளிவருகின்றது. மூன்றும் புத்தகம் முதலியவும் தொடர்ந்து வெளிவரும்.

இதன்கண், ஒட்டக்கூத்தர் முதல் சிதம்பர அடிகள் ஈருகப் பதினொருவர் வரலாறுகளும் பரவை வழக்காக வழங்கும் கதைகளும், பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய முறையில் சொல்லப் பெற்றிருக்கின்றன.

இதனையும் முதற்புத்தகம் போலவே, ஆசிரியர்களும், மாணுக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றுப் புலவர் பெருமக்கள்பால் செய்யவேண்டிய நன்றியை நிறைத்து எங்களை ஊக்குவார்களாக.

எங்கள் வேண்டுகோளின்படி இதனை ஆக்கித் தந்த திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

## பொருளடக்கம் பக்கம்


| | | | |
|---|---|---|---|
| க. | ஒட்டக்கூத்தர் | .... | 1 |
| உ. | சயங்கொண்டான் | .... | 14 |
| ந. | பட்டினத்து அடிகள் | .... | 16 |
| ச. | பொய்யாமொழிப் புலவர் | .... | 31 |
| ரு. | அருணகிரிநாத அடிகள் | .... | 45 |
| சூ. | வில்லிபுத்தூரார் | .... | 60 |
| எ. | அதிவீர ராம பாண்டியர் | .... | 70 |
| அ. | இரட்டைப் புலவர்கள் | .... | 78 |
| கூ. | காளமேகப் புலவர் | .... | 91 |
| க0. | குமரகுருபரர் | .... | 110 |
| கக. | சிதம்பர அடிகள் | .... | 133 |

# தமிழ்ப் புலவர் வரிசை

## இரண்டாம் புத்தகம்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

### க. ஒட்டக்கூத்தர்

"கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்" என்று அறிஞராற் சிறப்பித்துப் பேசப்பெற்ற ஒட்டக்கூத்தர் பிறந்த இடம் இன்னதெனப் புலப்படவில்லை. செங்குந்தர் குலத்திற் பிறந்தவரென்பது மட்டும் கேட்கப்படுகிறது. செங்குந்த குலத்தினர், தமக்குச் சிவபிரான் கூறுகிய வீரபத்திரரே மூலகாரணரென்று மொழிவர். ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன் முதியவனாக அரசாட்சி செய்திருந்த காலத்தில் அவனுடைய அவைக்களப் புலவராக அமர்ந்திருந்தார். விக்கிரம சோழன் விண்ணுலகேகியபோது தன் மகன் குமார குலோத்துங்கனைக் கூத்தர் ஆதரவில் விட்டுப் பாண்டியன் மகளைத் தன் மகனுக்குத் திருமணஞ்செய்து வைத்துப் பக்கத்துணையாகவும் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தான். விக்கிரம சோழன் காலமானபிறகு சில காலம்வரை கூத்தரே அரச காரியங்களைப் பார்த்துக்கொண்டிருந்து குமார குலோத்துங்கன்

தக்கநிலை யடைந்தபோது அவனிடம் அரசை ஒப்பு வித்துத் தாம் அவனுக்குப் பக்கத்துணையாக நின்று எல்லாக் காரியங்களையும் இனிது நடத்தினர்.

ஒட்டக்கூத்தர் கலைமகளின் திருவருளைப் பெற்றவரென்றும், அவருக்கு ஒட்டக்கூத்தர் என்று பெயர் வருதற்குக் காரணம், வெட்டப்பட்ட தலை மீண்டும் உடலோடு ஒட்டி உயிர் பெறுமாறு செய்தமையே என்றும், ஒரு வரலாறு கூறப்பெறுகிறது. அது வருமாறு :—

ஒரு காலத்தில் செங்குந்தர்கள் ஒன்றுகூடி ஒட்டக்கூத்தரிடத்திற்கு வந்து நமது குலச்சிறப்பைப் பாராட்டி ஒரு நூல் செய்யவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். அதற்குக் கூத்தர் நாம் அவ்வாறு பாடினல் நமக்கு யாது பரிசு தருவீர்களென்று கேட்டார். 'வேண்டிய பொருள் தருகிறோம்' என்றார்கள் செங்குந்தர்கள். "பொருள் நமக்கு வேண்டியதில்லை ; அரசனளித்த பொருள் வேண்டியவரை நமக்கிருக்கிறது. நம்முடைய குலத்திலே பிறந்த தலைப்பிள்ளைகளின் தலைகள் எழுபது தருவீர்களாயின் நமது ஆயுதமான ஈட்டியைக் குறித்து 'ஈட்டி யெழுபது' என்று ஒரு நூல் இயற்றுவேன்" என்றார் கூத்தர். கூத்தர் கூறியதைக் கேட்ட செங்குந்தர்கள் "இஃதேது, கிணறுவெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக இருக்கிறதே" என்று எண்ணியவர்களாய் மெல்ல ஒவ்

வொருவராக நழுவத் தொடங்கினர். கூத்தர் அவர்களை நிறுத்திக் குலத்தின் வழிவழிப் பெருமை யையும் வீரத்தையும் விளக்கமாக எடுத்துரைத் தார். கூத்தர் கூறியதைக் கேட்ட அளவில் செங்குந்தர்களுக்கு வீரமும் மானமும் உண்டா யிற்று. தங்கள் தங்கள் கையாலேயே தங்களு டைய தலைப்பிள்ளைகளின் தலையை அறுத்துக் கொண்டுவந்து கூத்தரின் முன்னே குவித்தார்கள். கூத்தர் அத்தலைகளை யெல்லாம் கொண்டுபோய் அரண்மனை வாசலில் ஓர் அரியணைபோல் அடுக்கச் செய்தார். அக்கூத்தைக் கண்ட கொற்றவன் கூத்தரைக் கூவி, 'கூத்தரே! இஃதென்ன கூத்து' என்றான். அஃது இன்னும் சிறிது பொழுதில் விளங்குமென்றார் கூத்தர். பிறகு அத்தலைகளாலாய இருக்கைமீது அமர்ந்திருந்து 'ஈட்டி யெழுபது' என்னும் நூலைப் பாடி முடித் தார். இறுதியில் அரியணையாகவுள்ள அத்தலைக ளெல்லாம் அவ்வவற்றிற்குரிய உடலோடு போய்ச் சேர்ந்து உயிர்பெற்றெழுமாறு கலைமகளை யுளத் தெண்ணி,

கலைவாணி நீயுலகில் இருப்பதுவும்
 கல்வியுணர் கவிவல் லோரை
தலையாகக் காப்பதுவும் அவர்நாவில்
 வாழ்வதும்சத் தியமே யன்றோ?
சிலைவாண னுவிருந்தா யிரம்புயங்கள்
 துணிந்துமுயா சீவ னுற்றான்
தலையாவி கொடுத்திடுஞ்செங் குந்தருயிர்
 பெற்றிடநீ தயைசெய் வாயே

என்னும் செய்யுளைப் பாடினர். அவ்வளவில் அத் தலைகளெல்லாம் அவ்வவற்றிற்குரிய முண்டங்களோடு சென்று ஒட்டிக்கொண்டு உயிர்பெற்றன.*

குமார குலோத்துங்கனுக்கு ஒட்டக்கூத்தரே தமிழாசிரியராவர். குலோத்துங்கனும் கவி பாடுவதிலே சிறந்த ஆற்றலுடையவனாக விருந்தான். அவனுக்கு முடிசூட்டு விழா நடைபெற்றது. அப்போது கூத்தர் தம் மாணவனாகிய அரசனைச் செய்யுளால் வாழ்த்த எண்ணி,

ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையில் தரித்த பிரானென்பர்.................

என்று பாடிய அளவில், தன்னுடைய ஆசிரியராகிய ஒட்டக்கூத்தர் தன்னைப் புகழ்ந்து பாடுதல் தக்கதாகாதெனா எண்ணியவனாய்,

—சித்தாவம்

பாடுங் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென்றே யெனைச் சொல்லுவரே

என்று அப்பாட்டினை முடித்தான். ஒட்டக்கூத்தர் கல்வியறிவிற் சிறந்து விளங்கினாராயினும் அவருடைய உள்ளத்திலே ஆணவமாகிய பெருமிதம் மட்டும் அகலாதிருந்தது. அரைகுறையாகக் கல்வி கற்றவர்கள் அந்நாளில் புலவரெனப் பெயர்தாங்கி அரசனுடைய இடத்திலே பரிசு பெறுவதற்கு வருவார்களாயின் ஒட்டக்கூத்தர் அவர்களை மடக்கிக்கொண்டு பல கேள்விகளைக் கேட்பார். தக்க விடை யளிக்காதவர்களுடைய தலைகளுக்கெல்லாம்

* இவ்வரலாறு வேறுவிதமாகவும் இயம்பப் பெறுகிறது.

வந்தது கேடு. அவர்களை யெல்லாம் சிறையில் அடைத்து வைத்திருந்து கலைமகள் விழாக் காலத்திலே கலைமகளுக்குப் பலியிட்டு விடுவார். அரசனும் அவர் மாட்டுக் கொண்டிருந்த அன்பால் அத்தீய செய்கையைத் தடை செய்யவில்லை. அதனால் அக்காலத்தில் போலிப் புலவர்களைக் காண்பது அருமையினும் அருமையாயிற்று. புலவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளத் தொடங்குவோரும் ஒட்டக்கூத்தரிடம் வந்து அவர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் விடையளித்து அவராலேயே அறிஞரென்னும் சிறப்புப் பெயரையும் அடைவர். அவர் அரைகுறை அறிஞர்களைக் கொலைபுரிந்தா ரென்பது "இரண்டா முடிந்துதலை இறங்கப்போட்டு, வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை" யென்னும் செய்யுளடிகளாற் பெறப்படுகிறது.

புகழேந்தியாரைச் சிறையில் அடைத்து வைத்திருந்த காலத்திலும் பல அரைகுறை யறிவாளிகள் கூத்தரிடம் வந்து அகப்பட்டுச் சிறையிலடைக்கப் பெற்றிருந்தனர். புகழேந்திப்புலவர் அவர்களை யெல்லாம் உயிர்பிழைக்கச் செய்யவேண்டும் என்னும் எண்ணத்துடன் அவர்களுள், ஒரு குயவன், ஒரு கம்மாளன், ஒரு வண்ணான், ஓர் அம்பட்டன், ஒரு வேளாளன் ஆகிய ஐவரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு நன்றாகக் கல்வி கற்பித்து வந்தார். வழக்கம்போல் கலைமகள் விழாக்காலம் வந்தது. வழக்கப்படி பலியிடுவ

தற்குக் கூத்தர் அவர்களை யழைத்துக் கேள்விகள் கேட்கத் தொடங்கினர். முதன் முதலில் குயவன் கூத்தருக்கு முன்னுற் சென்று மிடுக்காக நின்றான். அவனைக் கண்டதும் கூத்தர் இறுமாப்புடன்,

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
ஆனை முன்வந் தெதிர்த்தவ னாடா?

என்று கேட்டார். அதற்கு அக்குயவன்,

கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானை யும்பண்ணு மங்குசப் பையல்யான்

என்று பதிலிறுத்தான். ஒட்டக்கூத்தர் தம்மை யானை யென்று சொன்னதற்கு அதனை அடக்கும் அங்குசத்தைச் சுட்டிக்காட்டி, அங்குசப் பையல் என்றும், அவனுடைய குலத்தைச் சுட்டி அம்+ குசப்பையல் என்றும் அவன் விடையளித்தது கூத்தருக்கு நாணத்தைத் தந்தது. அவர் அவனை அப்பாற் போகச்செய்து இரண்டாவது ஆளை அழைத்தார். நாவிதன் (அம்பட்டன்) வந்து நின்றான். அவனைப் பார்த்து,

விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலவிலக்க
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின் றாய்பொட்டை யாய்புகல்வாய்

என்றார் கூத்தர். அதற்கு அம்பட்டன்,

கண்பொட்டை ஆயினும் அம்பட்டன் நான்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயும் திடுக்கிடப் பாடுவனே

என்றான். கூத்தர் அவனையும் அனுப்பிவிட்டு மூன்றாவதாளை அழைத்தார். கருமான் வந்து நின்றான். கூத்தர் அவனைப் பார்த்து 'நீ யார்?'

என்று சுருங்கிய சொல்லால் கேட்டார். அதற்கு அக்கம்மாளன்,

செல்வன் புதல்வன் திருவேங் கடவன் செகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொன்ன பேரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே

என்று பாட்டாற் பதிலளித்தான். அவனையும் அனுப்பிவிட்டு நான்காவதாளை யழைத்தார். வேளாளன் வந்து விறைப்பாக நின்றான். கூத்தர் அவனை நோக்கி, 'பெரிய பாவலராகிய எமக்கு முன்னே சிற்றறிவாளனாகிய நீ வந்து நிற்பது தகுமா?' என்று வினவினார். அதற்கவ் வேளாளன்,

கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூதலமேழ்
காக்கின்ற மன்னன் கவியொட்டக் கூத்தநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிய பாவலரே

என்று விடையிறுத்தான். அவர்களது கூற்றை யெல்லாம் கேட்ட ஒட்டக்கூத்தர் இவைகளெல்லாம் புகழேந்திப் புலவரால் நேர்ந்தன வென்றறிந்து கொண்டு, எல்லோரையும் விடுதலை செய்துவிட்டுப் புகழேந்தியாரை மட்டும் விடுவியாமல் சிறையிலேயே வைத்திருந்தார்.

புகழேந்திப் புலவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்குஞ் செய்தி அரசிக்குத் தெரிந்தது. அரசன் அந்தப்புரம் வரும்போது கதவை யடைத்துத் தாள்போட்டுக்கொண்டிருந்தாள் அவள். அரசன்

சென்று பார்த்தான். கதவைத் திறக்குமாறு எவ்வளவோ கூறியும் பதில் இல்லை. ஒட்டக் கூத்தரை அனுப்பி, அரசியின் சீற்றத்தைத் தணித்துக் கதவைத் திறக்கச் செய்யச் சொன்ஞன். கூத்தர் அந்தப்புரத்திற்குச் சென்று,

இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்திழையைக்
குழையொன் றிரண்டு விழியணங் கேகொண்ட கோபந்தணி
மழையொன் றிரண்டுகை மானு பரணனின் வாயில் வந்தால்
பிழையொன் றிரண்டு பொறுப்பதன் ருேகடன் பேதையர்க்கே

என்னும் பாவைப் பாடினர். முன்னரே கூத்தர் மீது மிகுந்த சீற்றமாயிருந்த அரசி, 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று கூறி, முன்போட்டிருந்த ஒரு தாழ்ப்பாளோடு இன்னுமொரு தாழ்ப்பாளையும் போட்டாள். இச் செய்தியை அறிந்த அரசன், புகழேந்திப் புலவரை யழைத்து அவரை யனுப்பினன். புகழேந்திப் புலவரும் அரசியின் அந்தப்புரத்திற்குச் சென்று,

"நானே யினியுன்னை வேண்டுவ தென்னை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய இரவி குலாதிபன் வாயில்வந்தால்
தானே திறக்குநின் கைத்தல மாகிய தாமரையே"

என்னும் பாவினைப் பாடினர். தன் ஆசிரியராகிய புகழேந்தியார் பாட்டிற்கு மகிழ்ந்த அரசி உடனே கதவைத் திறந்து ஆசிரியரை வணங்கினள். (இவ்வாறன்றிப் புகழேந்தியார் வரலாற்றிற் கூறிய படி அரசனே புலவரைச் சிறையில் நின்றும்

* இப்பாடல்கள் மாறியும் வழங்குகின்றன.

விடுதலை செய்தான் என்றும் வரலாறு வழங்குகின்றது.)

ஒருபோது ஊரிலிருந்த பெண் ஒருத்தி புகழேந்திப் புலவரைப் புகழ்ந்தும் ஒட்டக்கூத்தரை யிகழ்ந்தும் பேசினாள். ஒட்டக்கூத்தர் அச்செய்தியை அரசனுக் கறிவித்தார். அரசன் அப்பெண்ணை அழைத்து அவ்வாறு கூத்தரை இகழ்ந்து பேசக் காரணம் யாதென்று வினவினான். அப்பெண் அரசனைப் பார்த்து, 'உனது குடைக்குள் அடங்காதவை இவ்வுலகத்தில் இரண்டிருக்கின்றன. அவை இன்னவை யென்று எவர் உரைக்கின்றனரோ அவரே உயர்ந்தவராவர். அவை யின்னவை யென்றும் அதனை இவ்விரு புலவர்களுள் எவர் அறிந்திருக்கின்றார் என்பதையும் நான் அறிவேன்' என்றாள். அரசன் புலவர்கள் இருவரையும் பார்த்து, 'எனது குடைக்குள் அடங்காதவைகளாக உள்ள இரண்டு யாவை? அதனை உரைமின்' என்றான். ஒட்டக்கூத்தர் ஒன்றும் தோன்றாமையினால் வாளா விருந்தார். புகழேந்திப் புலவர் அரசனை நோக்கி, 'உலகம் முழுவதும் பரந்து விரிந்துள்ள நினது சீர்த்தியும், உன் தோள்களை விரும்பும் மாதருடைய காதலும் உனது குடைக்குள் அடங்காதனவாம்' என்றறிவித்தார். புகழேந்தியாரின் பதிலைக் கேட்டு அரசனும் அவையினரும் உள்ளங் களித்தனர். ஒட்டக்கூத்தரோ இப்பொருள் நமக்கு விளங்காமற் போயிற்றே என்று நாணியிருந்தார்.

ஒருநாள் அரசனுடைய யானை யொன்று காற் சங்கிலியை அறுத்துக்கொண்டு அரசன் முதலிய அனைவரும் இருந்த அவையை நோக்கி வந்தது: அப்போது ஒட்டக்கூத்தர் பாண்டியர்களை இழித்தும் சோழர்களை உயர்த்தியும் பேசும் தமது வழக்கப்படி,

இன்னங் கலிங்கத் திகல்வேந்தர் உண்டென்றோ
தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா உன்றன் அயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு

என்னும் செய்யுளைச் சோழனைப் பார்த்துப் பாடினார். உடனே புகழேந்திப் புலவர்,

தென்னவன் தென்னர் பெருமான் திருமதுரை
மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னிநா
டாவிக்கும் வேந்தாம் அபயன் குலமகளிர்
தாலிக்கும் ஒன்றே தளை

என்னுஞ் செய்யுளைப் பாடி ஒட்டக்கூத்தர் பாடலைக் கண்டித்தார்.

ஒட்டக்கூத்தர் சிவநெறிச் செல்வர். தேவார திருவாசகங்களைப் பயின்றவர். பாடல்களை எவரேனும் தவறுடன் படித்தால் சீறிச் சினப்பார். ஆள் கைக்கு அகப்பட்டால் அடித்தும் விடுவார். அவர் ஒருநாள் தம்முடைய வீட்டிலே இருக்கும் போது சங்கமர் ஒருவர் திருஞானசம்பந்தருடைய தேவாரப் பாடலைப் பிழையுறப் பாடிக்கொண்டு ஐயமேற்க வந்தார். அவர் பிழையுடன் பாடுதலைக் கண்ட கூத்தர் கூற்றுவன்போற் சீறி,

அச்சங்கமரின் கன்னத்தில் பளீரென்று ஓரறை கொடுத்தார். அச்சங்கமர் அகவைமுதிர்ந்தவ ராதலின் அவ்வறையைத் தாங்கமாட்டாமல் அவ் விடத்திலேயே விழுந்து இறந்துவிட்டார். கூத்தர் அச்சங்கமர் இறந்ததைக் கண்டு அஞ்சி, அந்தோ! என்ன காரியஞ் செய்துவிட்டோம். கொலை வினைக்கு ஆளானேமே யென்று வருந்தி அரச னிடஞ் சென்று நிகழ்ந்ததைக் கூறி அங் கிருந்தார்.

சங்கமர் இறந்த செய்தி அவர் உறைந்திருந்த மடத்திற் கெட்டியது. உடனே மடத்திலிருந்த சங்கமர்களெல்லாம் திரண்டு கூடினார்கள். சங்க மரைக் கொன்ற கூத்தரைக் கொன்று பழிக்குப் பழி தீர்க்கவேண்டுமென்று முடிவு செய்தார்கள். கூத்தர் அரசனிடம் சென்றிருப்பது தெரிந்தது. அனைவருஞ் சேர்ந்து அரசன் அவைக்குச் சென் றார்கள். (அரசன் தன் மகனை அனுப்பிவைத்த தாகவும் ஒரு வரலா றுள்ளது) கூத்தர் வருவது வரட்டுமென்று தேறிக் குலோத்துங்கனிடம் சொல்லிவிட்டுச் சங்கமர்களுடன் சென்றார்.

ஒட்டக்கூத்தர் கொலைக் குற்றத்திற்காகச் சங்கமர்களோடு சென்றபின் அரசன் கூத்தருக்கு யாது தீங்கு நேருமோ என்று அஞ்சிக்கொண் டிருந்தான். அச்சமயத்தில் ஔவையார் தற்செய லாக அங்கு வந்தார். குலோத்துங்கன் கூத்த ருக்கு நேர்ந்த விபத்தைக் கூறி வருந்தினான். அதற்கு ஔவையார்,

நாட்டிற் சிறந்தவ ரெல்லா நடுங்க நராதிபர்முன்
பூட்டுசிம் மாதன ராயிரத் தெண்மர்க்கும் போனவுயிர்
மீட்ட கவிச்சக்ர வர்த்திக்கிங் கோர்சங்க மேசனுயிர்
கூட்டுவ தோவரி தையா குமார குலோத்துங்கனே

என்னும் பாடலால் அவனைத் தெளிவடையச் செய்தார். கூத்தரை யழைத்துக்கொண்டு கொல்லுவதற்குச் சென்ற சங்கமர்கள் ஓராற்றருகில் செல்லும்போது பொழுது போயிற்று. சங்கமர்கள் இன்றிரவு இங்கிருந்து நாளைக்கு அழைத்துக் கொண்டு போய்க் கொல்லுவோம் என்று முடிவு செய்து மாலைக்கடன் கடவுள் வழிபாடு முதலியன செய்யத் தொடங்கினர். கூத்தரும் கடவுள் வழிபாடு முதலியவற்றைச் செய்து முடித்துவிட்டு ஆற்றங் கரையிலிருந்த காளி கோவிலுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக்கொண்டார். கூத்தர் கோவிலுக்குள் புகுந்து தாளிட்டுக் கொண்டதை யறிந்த சங்கமர்கள் பெருஞ் சீற்றத்துடன் கோவிலைச் சூழ்ந்து கொண்டிருந்தனர்.

ஒட்டக்கூத்தர் தம்மை அவ்வாபத்தினின்றுங் காப்பாற்றுமாறு அக்காளியை வேண்டிக் கொண்டார். காளி ஒட்டக்கூத்தருக்குத் தோன்றி, 'வீரபத்திரக் கடவுள்மீது ஒரு நூல் பாடுக' என்று கூறினாள். ஒட்டக்கூத்தர் 'என்னிடம் ஏடும் எழுத்தாணியும் இல்லை. நான் பாடுகிறேன்; நீயே எழுதுவாயாக,' என்று கூறித் தக்க யாகப் பரணி என்னும் பரணி நூலைப் பாடினர். அந்நூல் எண்ணூறு செய்யுளால் ஆகியது. மடத்தில்

இறந்து கிடந்த சங்கமரும் உயிர்பெற்றெழுந்தார். அச் செய்தியை அறிந்த சங்கமர்கள் ஒட்டக்கூத்தரைப் போற்றி மகிழ்ச்சியுடன் தங்கள் மடத்திற் கழைத்துக் கொண்டு திரும்பினர். கூத்தரும் விரைந்து குலோத்துங்கன் அவைக்குச் சென்று அவனைக் களிப்பித்தார். பின்னர் அப்பரணி அரங்கேற்றஞ் செய்யப்பெற்றது. சங்கமர்களும் ஒட்டக்கூத்தருக்குத் தக்க பரிசுகள் அளித்தனர்.

ஒட்டக்கூத்தர் நீண்டநாள் வாழ்ந்திருந்து இறைவன் திருவடியை அடைந்தார். கூத்தரின் பிரிவைப் பற்றி ஒரு புலவர்,

நூற்றெண் பதின்காதம் நுங்கு நறுந்தமிழின்
ஏற்றமினி யென்னு மியலுமே—போற்றும்
புவிராசர் யாரும் புகழுமொட்டக் கூத்தக்
கவிராசன் காட்சியிலாக் கால்

என்று வருந்திப் பாடினார்.

கூத்தர் திருநெய்த் தானத்து இறைவனைப் பற்றிப் பாடியது,

விக்கா வுக்கா வித்தா விப்போய்
விட்டால் நட்டார் சுட்டூர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சூ
ழப்பா டத்தி வெப்பா டப்பூண்
நெக்கா டச்சா னத்தா டப்போ
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

# ௨. சயங்கொண்டான்

'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்று அறிஞர்களால் போற்றி யுரைக்கப்பட்ட சயங்கொண்டான் என்பவர் தீபங்குடி என்னும் ஊரில் தோன்றியவர். இவருடைய குலம் பிள்ளைப் பெயர் முதலிய வரலாறுக ளெவையும் விளக்கமாகப் புலப்படவில்லை. கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டிலே அரசாட்சி புரிந்திருந்த இராசேந்திரன் என்னும் கங்கைகொண்ட சோழன் மகளாகிய மங்காதேவிக்கும் சளுக்கிய இராச இராசனுக்கும் பிறந்த விசயதரனது அவைக்களப் புலவராக அமர்ந்திருந்தார் சயங்கொண்டான். தென்னாட்டுப் புலவர் பலர் போந்து புரிந்த சொற்போரின் கண்ணே சயங்கொண்டான் வெற்றி பெற்றமையின், அவரது இயற்பெயர் மறைந்து இப்பெயர் நிலைபெறுவதாயிற்று.

விசயதரன் வட கலிங்கர்மீது சென்று போரிட்டு வெற்றிமாலை யணிந்து தன்னூர் சேர்ந்தவுடன் தன் அவைக்களப்புலவராகிய சயங்கொண்டாரை நோக்கி, 'நானும் சயங்கொண்டான் ஆயினேன்' என்று நவின்றான். விசயதரன் கூறியதைக் கேட்ட புலவர், 'சயங்கொண்டான் சயங்கொண்டான்மீது பரணிபாடுவான்' என்று கூறினார். பின்னர்க் கலிங்கத்துப்பரணி என்னும் நூலினைச் சயங்கொண்டானாகிய விசயதரன்மீது பாடிப் புலவர் குழுவும் புரவலனும் அமர்ந்த அரங்

கின் கண்ணே அரங்கேற்றுதல் செய்தார். விசய தரன் பரணியின் இனிமையையும் அருமையையும் நன்குணர்ந்து அறிஞர் பெருமானாகிய சயங்கொண் டானுக்குத் தக்க பரிசிலளித்தான்.

சயங்கொண்டாரின் பரணிப் பாடல்கள் எல்லாம் சுருங்கச்சொல்லல் முதலிய பத்தழகும் நிறைந்தனவாய் விளங்குகின்றன; சொல் நயமும் பொருள் நயமும் பாடல்தொறும் விளங்குகின்றன. பாக்கள் பெரும்பாலும் சந்த இன்பம் மிகுந்துள் ளன. போர்க்கள வருணனைகள் பல கற்பார்க்கு மகிழ்ச்சியை அளிக்கத்தக்கவைகளாக அமைந் துள்ளன. குறிப்புப்பொருள் இறைச்சிப்பொருள் உள்ளுறையுவமம் முதலியன ஆங்காங்கு காணப் பெறும். சொல்லுக்குப் பஞ்சப்படுதலை இவர் அறியார். செய்யுள்கள் ஒவ்வொன்றும் ஆற்றோட் டம் போலத் தங்குதடையின்றிச் செல்லுகின்றன. ஒரு பொருளைப்பற்றிக் கூறுமிடத்து, அப்பொருள் கற்பார் உள்ளத்தின்கண் ஓவியம்போல் அமை யத்தக்க திறமையுடன் பாடுவதில் இவர் இணையற்ற வர். பாலைநிலத்தைப்பற்றி இவர் பாடியதைக் கற்கும்போது அந்நிலத்தன்மையைக் கற்போர் அனுபவிப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்படும். செந் தமிழ் உலகில் வழங்கும் பரணி நூல்கள் பலவற்றி னும் கலிங்கத்துப்பரணியே தலைசிறந்த நிலையில் விலைமதித்தற்கரிய தன்மையுடன் வீறுபெற் றிலங்குகின்றது. இத்தன்மையினால்தான், 'பரணிக் கோர் சயங்கொண்டான்' என்று பிற்காலப்

புலவர் ஒருவர் சயங்கொண்டானைப் போற்றுவாராயினர்.

## ந. பட்டினத்து அடிகள்

'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆருந் துறப்ப தரிதரிது' என்று அருமையாகப் பாராட்டப் பெற்றவர் பட்டினத்து அடிகள். சோழ வளநாட்டில் பலவகை நலங்களாலும் வளங்கொழித் திலங்கியது காவிரிப்பூம் பட்டினம் என்னும் கவின்பெறு மூதூர். அம்மூதூரின் கண் சிவநேசர் என்னும் பெயருடையார் ஒருவர் தம் வாழ்க்கைத் துணைவியாகிய ஞானகலாம்பை என்னும் மாதரசியோடு இல்லற வாழ்க்கையை இனிது நடத்திக்கொண்டிருந்தார். அவர் தம்முடைய பெயருக் கேற்பச் சிவபெருமானிடத்தும் அவனடியாரிடத்தும் அளவிலாப் பேரன்புகொண்டு விளங்கினர். அச்சிவநேசருக்கு இறைவன் திருவருளால் முன்னர் ஒரு பெண் மகவும் பின்னரோர் ஆண்மகவும் பிறந்தன.

ஆண்மகவிற்குத் திருவெண்காடர் எனத் திருப்பெயர் அளித்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தனர். திருவெண்காடர் உரிய காலத்திலே கல்விப்பயிற்சி முதலியன செய்விக்கப்பெற்று நல்லொழுக்கத் திற்கு ஒரு நிலைக்களனாக விளங்கிநின்றார். அவருக்குச் சிவபூசனை திருக்கோயில் வழிபாடு ஆகிய வகைகளிலே இயற்கையாகவே உள்ளம் படிந்

திருந்தது. ஆகவே சிவபூசனை அடியார் பூசனை ஆகியவற்றை மிகுதியாகச் செய்துவந்தார்.

மணத்திற்குரிய காலத்தை யடைந்ததும் அந் நகரத்தில் தங்கள் குலமரபிற் கொத்து விளங்கிய சிவகலை என்னும் மாதைத் திருவெண்காடருக்கு இருமுதுகுரவரும் மணஞ்செய்து வைத்தனர். திருவெண்காடரும் இல்லாளுடன் இல்லறத்தை இனிது நடத்திக்கொண்டிருந்தார். முப்பத்தைந்து ஆண்டுகள் நிரம்பியும் திருவெண்காடருக்கு மகப் பேறு வாய்க்கவில்லை. திருவெண்காடரும் அவருடைய முன்னோரும் திருவிடை மருதூரில் எழுந் தருளிய இறைவனையே தங்களுடைய வழிபடு கடவுளாகக் கொண்டவர்கள். எனவே திருவெண் காடர் தமது மகப்பேற்றுக் குறையைத் தீர்த்தருளு மாறு இடைமருதிறைவனை இடைவிடாதுபோற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார். திருவெண்காடர் அவ் வாறிருக்கும் நாளில் திருவிடைமருதூரில் சிவசருமர் என்னும் ஆதிசைவப் பார்ப்பனர் ஒருவர் தம் மனைவியாகிய சுசீலையோடு இறைவன்மாட் டன் புடையவராய் மிகுந்த நல்லியல்போடு விளங்கியிருந் தார். அடியார் பூசனை முதலிய காரியங்களிலே அச்சிவசருமர் தம்முடைய செல்வத்தையெல்லாம் செலவிட்டு வறுமைப்பிணியினுல் வாடியிருந்தார்.

இடைமருதில் எழுந்தருளிய இறைவன் சிவ சருமருடைய கனவிலும் அவருடைய மனைவியார் கனவிலும் தோன்றி, 'யாம் திருக்கோவிலின்

அருகேயுள்ள வில்வமரத்தடியில் ஒரு சிறு குழவியாக எழுந்தருளியிருப்போம். எம்மை நீவிர் எடுத்துச்சென்று காவிரிப்பூம் பட்டினத்தில் மகவின்றி வாடும் திருவெண்காடரிடம் அளித்து எம்முடைய நிறைக்குத் தக்க பொன்னைப்பெற்று உம்முடைய வறுமையைப் போக்குவீர்களாக' என்று கூறி மறைந்தருளினர். சிவசருமரும் அவருடைய மனைவியாரும் தத்தங் கனவுகளை ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டு நம்மைப்பிடித்த தீயவறுமையைத் தொலைக்க இறைவன் தம்மையே விற்கப் பணித்தாரே என்று வருந்தித் தேறினர். மற்றை நாட்காலை வில்வமரத்தடியைப் போய்ப் பார்க்கையில் கனவில் கண்டபடி குழந்தை காணப்பட்டது. இறைவன் கட்டளைப்படி இருவரும் அக்குழவியை எடுத்துக்கொண்டு காவிரிப்பூம் பட்டினத்தையடைந்தனர்.

அதற்கு முன்னரே இறைவன் திருவெண்காடர் கனவிலும் அவருடைய மனைவியார் கனவிலும் தோன்றிக் குழந்தையின் நிறைக்குத்தக்க பொன்னளித்துக் குழந்தையைப் பெற்றுக் கொள்ளுமாறு கட்டளையிட்டிருந்தார். ஆகவே, சிவசருமர் வருகையை எதிர்நோக்கியிருந்த திருவெண்காடர் சிவசருமரையும் அவருடைய மனைவியாரையும் வரவேற்றுப் போற்றினர். குழந்தையைப் பெற்ற திருவெண்காடர் அதன் நிறைக்குத் தக்கபடி பொன்னளித்தற் பொருட்டு ஒரு பெரு நிறைகோல் கொணர்ந்து நாட்டினர். ஒரு தட்டில்

குழந்தையை இட்டார். மற்றொரு தட்டில் பொன்னை யிட்டார். சிவசருமருக்கு மிகுதியாகப் பொருள் அளிக்க விரும்பிய இறைவன் எவ்வளவோ பொருளையிட்ட விடத்தும் பொருளிட்ட தட்டு மேலெழுந்தே நிற்குமாறு செய்தார். பின்னர் சிவ சருமரின் வேண்டுகோளினால் இருதட்டுஞ் சமமாக நிலைத்துநின்றன.

சிவசருமரும் அவர் மனைவியாரும் பொருளைப் பெற்றுக்கொண்டு சென்றனர். திருவெண்காடர் அக்குழந்தைக்கு 'மருதவாணர்' என்று இடை மருதிறைவன் பெயரையே இட்டுச் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் அவ்வக்காலங்களிற் செய் தார். மருதவாணர் வளர்ந்து பதினாறுண்டு நிரம்பப் பெற்ற காலையில் ஒருநாள் ஒரு பெட்டியைத் தம் தாயாரிடம் கொடுத்துத் தந்தையாரிடம் அளிக்கு மாறு கூறி மறைந்தருளினார். திருவெண்காடர் அப்பெட்டியை வாங்கித் திறந்து பார்த்தார். அத னுள் ஒரு காதற்ற ஊசியும் ஓலையும் காணப் பெற்றன. ஓலையை யெடுத்துப் படித்துப் பார்த் தார். 'காதற்ற வூசியும் வாராது காணும் கடை வழிக்கே' என்று எழுதப்பெற்றிருந்தது. அவ்வள வில் திருவெண்காடருக்கு மெய்யறிவு விளங்கியது. தம்முடைய எல்லாப் பொருள்களையுஞ் சூறையிடு மாறு ஊரினர்க் குரைத்துத் தாம் ஊர்ப்பொது மண்டபத்தின் கண்ணே சென்று தங்கி யிருந்தார். அதுகாலை உறவினரும் ஊராரும் திருவெண் காடரை யண்மி அவ்வாறு துறவியாகப் போதல்

தக்கதன்று என்று அறிவுரை கூறினர். திருவெண்காடர் அவர்களை நோக்கி,

மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயின்மட்டே
இனமான சுற்றம மயானமட் டேவழிக் கேதுதுணை
தினையா மளவெள்ளளவா கிலுமுன்பு செய்த தவம்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்று மகிழ்வதெல்லாம்
கேடுண் டெனும்படி கேட்டுவிட் டோமினிக் கேண்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்டன் அடியார் நமக்குத் துணையுமுண்டே.

என்பனபோன்ற பல பாடல்களைக்கூறி அவர்கட்கெல்லாம் நல்லறிவு கற்பித்தனர். திருவெண்காடர் துறவு பூண்டதையும் செல்வஞ் சூறை போதலையுமறிந்த அரசன் திருவெண்காடருடைய காரியக்காரராகிய சேந்தனாரைச் சிறைப்படுத்திச் செல்வம் சூறைபோதலையும் தடுத்தான். திருவெண்காடர் தங்கியுள்ள இடத்திற்குச் சென்று நின்று அவரைக்கண்டு, 'இக்கோலம் கொண்டதனால் நீவிர் கண்ட பயன் யாது?' என்று வினவினன். திருவெண்காடர், அரசனை நோக்கி, 'நீவிர் நம்மிடத்தையடைந்து நின்று பேசவும் நாம் உட்கார்ந்துகொண்டே பதிலுரைக்கவும் பெற்றதே கண்ட பலன்' என்று கூறினர். அப்பதிலைக் கேட்ட அரசன் நாணி அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

திருவெண் காடராகிய பட்டினத்தடிகள் உடனே வேற்றூர் செல்லாமல் தம்முடைய சொந்த ஊராகிய காவிரிப்பூம் பட்டினத்திலேயே பித்தரைப்போன்றும் பேயரைப்போன்றும் பாலரைப்

போன்றும் திரிந்துகொண்டிருந்தார். குப்பைமேடு சாக்கடை முதலிய இடங்களிலும் சிறிதும் மாறுபாடில்லாது படுத்திருப்பார். பசிப்பிணி யுண்டாய போது விரும்பிய வீடுகட்குச் சென்று கையையே கலமாகக்கொண்டு உணவினையேற்று உண்பார். பட்டினத்தடிகளின் உயர்நிலைமையை ஊரினரும் உறவினரும் நன்கு உணர்ந்துகொள்ளவில்லை. அடிகள் பித்தங்கொண்டுள்ளாரெனப் பிழைபட வெண்ணினர்கள். அடிகள் இருத்தலால் தமக்கு இழிவேற்படுமென்று எண்ணி அடிகளை நஞ்சூட்டிக் கொல்ல முயன்றார்கள். அடிகள் உடன்பிறந்தாள் நஞ்சுகலந்த ஒட்டப்பம் ஒன்றைச்சுட்டு அடிகளுக்குக் கொடுத்தாள். அதனை யுணர்ந்த அடிகள், 'தன்வினை தன்னைச்சுடும் ஒட்டப்பம் வீட்டைச் சுடும்' என்று கூறி உடன் பிறந்தாளின் வீட்டு இறப்பில் செருகினர். அவ்வளவில் அவ்வீடும் அருகிலிருந்த வீடுகளும் உயிர்ச்சேத மில்லாது தீக் கடவுளுக்கு இரையாயின.

அடிகள் தம் தாயாருடைய இறுதிக் கடன்களைத் தாமே செய்து முடிப்பதாக உறுதி கூறியிருந்தாராதலின், தாயாருடைய முடிவுநாளைப் பார்த்துக்கொண்டு பக்கத்தூர்களில் சுற்றிக் கொண்டிருந்தார். அடிகளின் தாயார் இறந்தவுடன் அவ்வம்மையின் உடலை உறவினர் சுடலைக்குக்கொண்டு சென்று எரித்தற்கு ஆவன செய்து கொண்டிருந்தனர். தாயார் இறந்தமையை யறிந்த அடிகள் விரைந்து சுடலையைக் குறுகினர்.

அடிகளின் வருகையைக் கண்ட உறவினர் அஞ்சி அப்பாற் சென்றனர். அடிகள் அவர்கள் அடுக்கி யிருந்த சிதையைச் சிதைத்து அப்புறப் படுத்தி விட்டு வாழை மரத்தின் துண்டங்களைக் கொணர்ந்து தாயாருக்குச் சிதையாக அடுக்கி உடலைச் சிதையின்மேற் கிடத்தினர். தாம் எதிரே நின்று கொண்டு,

ஐயிரண்டு திங்களா அங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி.
அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்—உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே எனவழைத்த வாய்க்கு.

என்னும் பல பாடல்களைக் கூறியபின்,

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே

என்னும் பாடலைக் கூறியவுடன் உடல் தீப்பட் டெரியலாயிற்று; அப்பொழுதுஞ் சில பாடல்களைக் கூறினர். பின்னர் உடல் முழுவதும் எரிந்தபின்

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ—சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரங்கிடந்
தென்னையே ஈன்றெடுத்த தாய்

என்பன முதலிய பாடல்களைப் பாடிக்கொண்டு பின்னர் ஊருக்குட் சென்று ஊரினரையும் பார்த்துச் சில பாடல்கள் கூறினர். பின்னர் ஊரை விட்டு நீங்கித் திருவிடை மருதூரை யடைந்தார். ஆங்கெழுந்தருளியுள்ள இறைவன்மீது திருவிடை மருதூர் மும்மணிக்கோவை என்னும் நூலைப் பாடிப் போற்றினர். சிலகாலம் ஆங்கிருந்தபோது பல திருப்பதிகட்கும் சென்று இறைவனை வழிபட வேண்டும் என்னும் எண்ணம் இறைவனருளால் உண்டாகியது. எனவே, அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூரை யடைந்தார். அப்போது அங்கிருந்த ஒரு சிறுவன் தன்னுடைய பழவினைப்பயனால் பட்டினத்தடிகளின் பெருமையை யுணர்ந்து மிகுந்த அன்புடன் தொண்டுசெய்து வழிபட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குத் திருமணம் நிகழலாயிற்று. அச்சிறுவனும் அவனுடைய உற்றார் உறவினரும் திருமணத்திற்கு எழுந்தருளி மணமக்களை வாழ்த்தியருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். அவர்கள் வேண்டுகோளின்படி அடிகளும் திருமணத்திற் கெழுந்தருளி,

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலமொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையில் கால்நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே

என்று வருவதுரைத்து வாழ்த்திக் கூறியருளினர். பின்னர்ப் பல விடங்களையடைந்து ஆங்காங்கு எழுந்தருளிய இறைவனைப்போற்றி வழிபட்டுக் கொண்டு கொங்கு நாட்டை யடைந்து ஓர் ஊரில் தங்கியிருந்தார். ஒருநாள் இரவில் பசி நோய் மிகுந்தது. ஒரு மூடனுடைய இல்லத்தின் வாயிலை யெய்திக் கை தட்டினர். அவ்வில்லத்து மூடன் அடிகளைக் கள்வனென்றோ காமக்கள்வனென்றோ தவருகக் கருதினன். ஒரு குறுந்தடியைத் தூக்கிக் கொண்டு வந்தான். அத்தடியால் பட்டினத்தடிகளை ஒறுக்கத் தொடங்கிவிட்டான். அடிகளோ எதற்கும் வாய் திறவாது, 'சிவ சிவ' என்று செப்பிய படியே நின்ருர். அடிகளைப் பெரியாரென்றுணர்ந்த அயல் வீட்டான் ஓடோடியும் வந்து தடியனை விலக்கித் தடுத்தான். அடிகளைத் தன் இல்லத்திற்கு அழைத்துச்சென்று அமுது படைத்துப் போற்றினன். அப்போது அடிகள்,

> *பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
> காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
> சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்
> சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே.
>
> இருக்குமிடந் தேடி என்பசிக்கே யன்னம்
> உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்—பெருக்க
> அழைத்தாலும் போகேன் அரனேயென் தேகம்
> இளைத்தாலும் போகேன் இனி

---

*பூணும் - அணியும். பணி - அணிகலன். சேண் - விண் சாணும் - சாண் வயிற்றையும்.

என்பன முதலிய பாடல்களைப் பாடிக்கொண்டு அந்நாட்டை நீங்கித் துளுவ நாட்டை யடைந்தார். கோகரணஞ்சென்று இறைவனை வணங்கிப் பின் உஞ்சேனை மாகாளத்தை யடைந்து ஆங்கெழுந் தருளிய இறைவனைப் போற்றி வழிபட்டுக்கொண்டு அந்நகரத்தை யடுத்த புறங்காடொன்றில் இருந்த பிள்ளையார் கோவிலில் நிட்டை செய்துகொண் டிருந்தார். அந்நாளில் அந்நகரத்தைப் பத்திரகிரி மன்னன் என்பவன் அரசாட்சி செய்துகொண் டிருந்தான். அவன் வீடு பேற்றிற்குரிய நன்னிலை மிகுதியும் கிட்டப்பெற்றிருந்தான். அக்காலை கள்ளர்கள் பலர் பத்திரகிரியரசன் அரண்மனையில் களவாடச் சென்றனர். செல்லும்போது காட்டுப் பிள்ளையார் கோயிலை யடைந்து பிள்ளையாரைப் பார்த்துத் தங்களுக்குக் காரியம் நன்கு கைகூட வேண்டும் என்றும், அவ்வாறு கூடினால் அப்பிள்ளை யார்க்கோர் அணிகலம் அளிப்பதாகவும் வேண்டிக் கொண்டு சென்றனர். அவர்கள் வேண்டுகோள் நிறைவேறியது. களவு செய்தவிடத்தில் தக்கபடி பொருள்கள் அகப்பட்டன. மீளும்போது காட்டுப் பிள்ளையாரை மறக்காமல் விலையுயர்ந்த ஒரு மாலையை எடுத்துப் பிள்ளையார்மீது போட்டுவிட்டுச் சென்றனர். அக்காலம் இருள்மிக நிரம்பியிருந்த படியால் கள்வர்கள் போட்ட மாலை பிள்ளையாருக் கருகே நிட்டை செய்துகொண்டிருந்த பட்டினத் தடிகளின் திருக்கழுத்தில் விழுந்தது. கள்வர்கள் அதனைப் பாராமல் விரைந்து சென்று விட்டனர்.

மற்றைநாட் காலையில் களவுபோன செய்தி வெளியாகியது. காவலர்கள் பல பக்கங்களிலும் தேடிக்கொண்டு காட்டுப்பிள்ளையார் கோயிலை யடைந்தனர். ஆண்டு அடிகள் கழுத்தில் விலையுயர்ந்த மாலையுடன் தம்மை மறந்திருக்கும் நிலையைக் கண்டனர். அக்காவலர்கள் அடிகளைக் கள்வர்கள் தலைவன் என்று எண்ணிக்கொண்டு பலவகைத் தொல்லைகள் செய்யலாயினர். அடிகள் எல்லாவற்றிற்கும் வாய்மூடி மௌனியாகிச் 'சிவ சிவ' என்று கூறிக்கொண்டிருத்தலைக் கண்ட சிலர் இவர் மிகப் பெரியவர்போலும் என்று எண்ணி அரசன் முன்பு அழைத்துச்சென்று நிறுத்தினர். சில காவலர் அடிகள் தாம் கள்வர்கட்குத் தலைவன் என்று சாதித்தனர். உள்ளங் கலங்கியிருந்த பத்திரகிரி மன்னன் அடிகள் பேசாதிருத்தலைக்கண்டு கள்வன்தான் போலும் என்று எண்ணிக்கொண்டு, 'இக்கள்வனைக் கழுவி லேற்றுக' என்று கட்டளையிட்டான். காவலாளரும் அடிகளைக் கழுவிலேற்றுவதற்காகக் கழுமரத் தருகிற் கொண்டுபோய் நிறுத்தினர். அடிகள் கழுமரத்தைக் கண்டதும் புன்னகைசெய்து,

என்செய லாவ தியாதொன்று மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே.

என்னுஞ் செய்யுளைப் பாடியருளினர். அவ்வளவில் அக்கழுமரந் தீப்பற்றிக்கொண்டு எரியலாயிற்று.

காவலர்கள் விரைந்தோடி அரசனிடம் கழுமரம் எரியுஞ் செய்தியைக் கூறினர். அரசன் விரைந்து ஓடிவந்து பட்டினத்தடிகளின் அடிகளில் அடியற்ற பனைமரம்போல் வீழ்ந்து நெடிது நேரம் அவ்வாறே கிடந்தான். பின்னர் எழுந்து அடிகளைப் பலவாறு பணிந்து தன்னுடைய தவற்றினைப் பொறுத்துத் தனக்குத் திருவருள் புரியவேண்டுமென்று வேண்டிக் கொண்டான். அடிகள் அரசனுக்குத் திருவருள் செய்து வீடு பேற்றிற்காம் மெய்ம்மொழியையும் உரைத்து, 'நீ திருவிடை மருதூரையடைந்து ஆங்குறைவாயாக' வென்று கட்டளையிட்டருளினர். பத்திரகிரி மன்னனும் பற்றறத்துறந்து திருவிடைமருதூரை யடைந்து மேலைக் கோபுரவாசலில் தங்கியிருந்தான். பட்டினத்தடிகள் காசி இராமேசுவரம் முதலிய சிவப்பதிகளைப் போற்றி வழிபட்டுக் கொண்டு மீண்டுந் திருவிடைமருதூரை யடைந்து கீழைக்கோபுர வாயிலில் தங்கியிருந்தார்.

பிறகு திருவெண்காடு சென்று அங்குத் தங்கியிருந்தார். அப்போது முன்னர் அரசனால் சிறையிடப்பட்ட சேந்தனருடைய மனைவியும் மகனும் அடிகளை யடைந்து அடிகளில் வீழ்ந்து வருந்தினர். அடிகள் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் யாவர்? உங்களுக் குற்ற துன்பம் யாது? என்று வினவியருளினர். அவர்களும் தாங்கள் யாவரென்பதைக் கூறிச் சேந்தனரைச் சிறையினின்றும் விடுவிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அடிகள் மிகவும் வருந்தி,

மத்தளை தயிருண்டானும் மலர்மிசை மன்னினானும்
நித்தமுந் தேடிக்காணு நிமலனை யமுதமூர்த்தி
........................சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளைநீக்கி யென்முன் காட்டுவெண் காட்டுளானே.

என்று ஒரு பாவினைப் பாடினார். இறைவனுணை யாற் பிள்ளையார் சேர்ந்தனார்க்கு வேந்தனாரிட்ட விலங்கை முறித்துத் துதிக்கையால் தூக்கி அடிகள் முன் விட்டருளினார். சேந்தனாரும் உலக நிலைமையை உள்ளவாறுணர்ந்து உண்மைப்பொருளையுணரும் பக்குவ நிலையை யடைந்திருந்தார். அடிகள் அச் சேந்தனார்க்குத் திருவருள்செய்து மெய்ப்பொருளை யுணர்த்தி, 'நீ திருத்தில்லைக்குச் சென்று காட்டு விற கொடித்து அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு அடியார் பூசனைசெய்து வாழ்வாயாக' வெனப் பணித்தருளினார். சேந்தனாரும் அடிகள் கட்டளைப்படி அவ்வாறே சென்றார்.

அடிகள் பின்னர்ச் சீகாழியை யடைந்து இறைவனைப் போற்றித் **திருக்கழுமல மும்மணிக்கோவை** என்னும் நூலினைப் பாடிப் பின்னர்த் திருத்தில்லையை யடைந்தார். அங்குக் கூத்தப்பிரானைப் போற்றிப் பணிந்து, **கோயிநான்மணிமாலை** என்னும் நூலினைப் பாடியருளினார். நினைமின் மனனே என்னும் அகவற்பாவினையும் தனிப்பாடல்கள் சிலவற்றையும் அவ்வப்போது பாடியருளினார். பின் திருத்தில்லையை விட்டுப் புறப்பட்டுப் பல திருப்பதிகளையும் வழிபட்டுக்கொண்டு காஞ்சியை அடைந்தார். ஆங்குள்ள இறைவனைப் போற்றி வழிபட்டார். திரு

வேகம்ப முடையார் திருவந்தாதி, திருவேகம்ப மாலை, கச்சித்திரு அகவல் முதலியவைகளைப் பாடியருளினார். அங்கிருந்து புறப்பட்டு வழியிலுள்ள திருப்பதிகளையெல்லாம் போற்றிக்கொண்டு, 'இறுதியில் திருவொற்றியூரை யடைந்தார். அவ்வூர்க் காட்சி அவருக்குப் பெருஞ்சிவத்தன்மையை உண்டாக்கியது. அதனால்,

வாவியெல்லாந் தீர்த்தம் மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்க ளெல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர்.

என்னுந் திருப்பாடலைப் பாடினார். மற்றும் பல திருப்பாடல்களையும், முதல்வன் முறையீடு அருட்புலம்பல் முதலியவைகளையும் பாடினார்.

ஒற்றியூர் இறைவன் அடிகளார்க்குக் கரும்பாகக் காணப்பட்டான். அக்கரும்பின் தன்மையை விளக்கப் புக்க அடிகள், ஒற்றிக்கரும்பு கண்டம் கரியது. கண் மூன்றுடையது. உலகத்தைப்போல் அழகியது. தொண்டர் உடலானது உருகும்படியாக இனிப்பது என்னும் பொருள்களை அமைத்து,

கண்டங் கரியதாம் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு

என்று பாடியருளினார். அடிகளுக்கு உடல் மறையுங் காலம் நெருங்கியது. அவர் ஊர்ப்புறத்தே ஆன்

நிரைமேய்க்குஞ் சிறுர்களோடு பலவகையாக விளையாட்டயர்ந்துகொண்டிருந்தார். சிறுவர்களை நோக்கிக், 'கழுத்தளவு என்னைப் புதைத்து விடுங்கள்; நான் உடனே மேலே வந்துவிடுகிறேன்' என்பர். சிறுவர்களும் அவ்வாறே செய்ய, அடிகளும் உடனே யாதொரு முயற்சியுமின்றிக் குழியை விட்டு மேலெழுந்து விடுவர். அவ்வாறு பலமுறை விளையாடல் புரிந்துகொண்டிருக்கும்போது, ஒரு முறை தம்மைப் புதைத்தவுடன் ஒரு பெரிய சட்டியினுல் தமது தலையை மூடச்செய்தார். சிறுவர்களும் அவ்வாறே மூடினர். முன் தடவைகளைப் போல அடிகள் இப்போது மேலே எழும்பவில்லை. ஐயங்கொண்ட சிறுவர்கள் சட்டியைத் தூக்கித் தலையை நோக்கினர். தலைக்குப் பதில் சிவலிங்கமிருந்தது. அவ்வியத்தகு செயலைக் கண்ட இளஞ் சிறுர் மருண்டு அச்சமும் வியப்புங்கொண்டனர். ஊருக்குள் ஓடோடியுஞ் சென்று அப்புதுமையை அறிவித்தனர். மக்கள் திரண்டுவந்து அடிகளாரின் அருட்குறியைப் போற்றிப் புகழ்ந்து பூசனை புரியலாயினர். அச்செய்தி காவிரிப்பூம் பட்டினத்திற்கும் எட்டியது. அங்குள்ளாரும் திருவொற்றியூரையடைந்து அடிகளைப் போற்றி வழிபட்டனர். பின்னர் அவ்விடத்தில் திருக்கோயில் முதலியன அமைக்கப்பெற்று இன்றளவும் பூசனை முதலியன புரியப்பட்டு வருகின்றன.

# ச. பொய்யாமொழிப் புலவர்

பொய்யாமொழிப் புலவரின் இயற்பெயர் மறைந்துபோயிற்று. அவர் ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்குமுன் தொண்டை நாட்டிலே செங்காட்டங் கோட்டத் துறையூரிலே பிறந்தார். அவ்வூருக்கருகி லிருந்த வைரபுரம் என்னும் ஊரில் இலக்கியக் கல்வி பயின்றுகொண்டிருந்தார். அக்காலத்திய வழக்கப்படி மாணவர்கள் ஆசிரியரின் வீட்டு வேலைகளையும் பார்ப்பதுண்டு.

வைரபுரத்து ஆசிரியருடைய கம்பு விளைந்த கழனியொன்றுக்கு ஒருநாள் பொய்யாமொழியார் காவலாகச் சென்றார். நண்பகற் போதில் நல்ல வெப்பம் வீசியது. கம்பங்கொல்லையை ஒட்டி வயிரபுரத்துக் காளி கோயிலும் அமைந்திருந்தது. அக்கோயி லருகி லிருந்த வேப்பமரம் ஒன்றின் நிழலில் அமர்ந்திருந்த பொய்யாமொழியார் வெப்பத்தின் கடுமையால் களைத்து உறங்கிவிட்டார். அவர் உறங்கத் தொடங்கியவுடன் வைர புரத் தலைவனாகிய காளிங்கராயனுடைய குதிரை யொன்று வந்து கம்பங்கொல்லையை மேயத் தொடங்கியது. காளிங்கராயன் குதிரை கம்பங் கொல்லையை மேய்வது காளியம்மையின் அருளாற் பொய்யாமொழிப் புலவருக்குக் கனவுக் காட்சி யாகப் புலப்பட்டது. உடனே பொய்யாமொழி யார் உறக்கம் நீங்கியோடி அக்குதிரையை விரட்டினார். கம்புச் சுவையையும் அதன் தாட்சுவையை

யும் இனிது உண்டு கொண்டிருந்த அக்குதிரை பொய்யாமொழியார் விரட்டியதைப் பொருட்படுத்த வில்லை. அது தன் விருப்பப்படியே தின்றுகொண் டிருந்தது.

பொய்யாமொழியாருக்கோ ஆசிரியரின் கம் பங்கொல்லையழிவு பெருஞ்சீற்றத்தை யுண்டுசெய் தது. வசை பாடியாவது அக்குதிரையைக் கொல்லக்கவேண்டுமென்று முடிவுகட்டியவராய்க் காளியை வணங்கி,

> வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே !
> ஆய்த்த மணலில் அணிவரையில்—காய்த்த
> கதிரை மாளத் தின்னும் காளிங்க ராயன்
> குதிரைமாளக் கொண்டு போ.

என்றொரு வசை கவியைப் பாடினார். உடனே அக்குதிரை துள்ளி வீழ்ந்து துடித்து மாண்டது. இவ்வியத்தகு செயல் மாணவராகிய பொய்யா மொழியாருக்கே வியப்பை விளைவித்தது. அவர் விரைந்து ஓடித் தம்முடைய ஆசிரியரிடம் நடந் ததை நவின்றார். அக் கணக்காயர் கடுகிவந்து கம்பங் கொல்லையைக் கண்டார். அவருக்குக் குதிரையைப் பார்த்ததும் குலைநடுக்க மெடுத்து விட்டது. அந்தோ! கம்பங்கொல்லை அழிந்தாலும் குற்றமில்லை. காளிங்கராயன் குதிரையைக்கொன்ற குற்றம் வந்து நேர்ந்ததே. அவன் நம்மை என்ன செய்வானோ என்று அஞ்சி நடுங்கினார். ஆசிரிய ருடைய அச்சத்தைக் கண்ட பொய்யாமொழியார் பாட்டின் இறுதியடியை மாற்றிக், "குதிரை மீளக்

கொண்டு வா'' என்று பாடினர். அக்கணமே அப் பாய்மா துள்ளியெழுந்து பாய்ந்தோடிப் போயிற்று. இந்நிகழ்ச்சியைக் கண்ட ஆசிரியர் மேலும் இறும்பூதடைந்து தம் மாணவரின் செயற் கருஞ் செய்கையைப் புகழ்ந்து,

"பொதியில் அகத்தியனைப் பொய்யா மொழியாய்ச்
சிதைவில்புல வர்சிகா மணியாய்த்—துதிசேரும்
செங்காட்டங் கோட்டத் துறையூ ரெனுந்தலத்தில்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்''

என்று ஒரு வெண்பாப் பாடினர். அன்றுமுதல் மாணவருக்குப் பொய்யாமொழிப் புலவரென்னும் புதுப் பெய ருண்டாகி இயற்பெயர் மறைந்தது. வயிரபுரக் காளியம்மையின் திருவருட் பெருக்கால் கல்விப் பெருக்கும் நன்குண்டாயிற்று. நாளடைவில் பொய்யாமொழியாரின் மெய்யான புலமை நாற்றிசைகளிலும் நன்கு பரவிற்று. அறிஞரை அரசர்களும் செல்வரும் பெரிதும் போற்றினர்.

பொய்யாமொழியார் இறைவன் ஒருவன் மாட்டே தனிப் பேரன்பு கொண்டார். இறைவனின் மறுவடிவக் கூறுகளாகிய பிள்ளையார் முருகன் முதலிய தேவர்களைக்கூட அவர் கனவிலும் கருதமாட்டார். ஒரு கடவுளே பல வடிவாக விளங்கும் உண்மையை முருகக் கடவுள் பொய்யாமொழியாருக்குப் புலப்படுத்த எண்ணினர். ஒரு நாள் புலவரின் கனவில் தோன்றி, 'நம்மீது ஒரு கவி இசைப்பாயாக'வெனக் கூறி மறைந்தருளினர். விழித்தெழுந்த புலவர், கோழியைப்போற்

றும் யான் அதன் குஞ்சையும் போற்றுவேனே என்று எண்ணி இகழ்ச்சியாக விருந்துவிட்டார். முருகக் கடவுளோ புலவருடைய ஆணவ மலத்தை அகற்றி ஆட்கொள்ளுதற்குத் தக்க காலத்தைப் பார்த்திருந்தார்.

ஒருநாள் புலவர் சேய்மையிலுள்ள ஓர் ஊருக்குச் சென்றுகொண்டிருந்தார். வழியிற் பாலைநிலங் குறுக்கிட்டது. அந்நிலத்திற் சென்று கொண்டிருந்தார். அந்நிலம், வழிப்பறித் துண்ணும் வேடர்கள் வழிச்செல்வாரிடத்தில் கவரத்தக்க பொருளில்லையாயினும், அவர்களைக் கொன்று அவர்களுடைய உயிர் துடித்தலை விளையாட்டாகப் பார்க்கும் கொடுமையை யுடையது. நீரும் நிழலும் அற்றது. இத்தன்மையால் அந்நெறிக்கண் மக்கள் இயக்கம் மிக வருமையாக விருக்கும். பொய்யாமொழிப் புலவர் அவ்வழியாகச் செல்லுங் கால், முருகவேள் கையின்கண் வில்லும் அம்பும் உடைய வேடுவனாக எதிர்ப்பட்டார். அவர் பொய்யாமொழிப் புலவரை அதட்டி, 'நில்' என்று கட்டளையிட்டார். புலவரும் அஞ்சி நடுநடுங்கியவ ராக நின்றார். முருகவேடன் பொய்யாமொழி யாரைப் பார்த்து, 'நீ யார்? உன்னிடம் உள்ளன யாவை? கைப்பொருளிருப்பின் வை கீழே' என்றார். புலவர் முருக வேடனை நோக்கி, 'ஐய! நான் ஓர் அறிஞன். என்னிடம் கல்விப்பொருளே யன்றிப் பிறிதொரு பொருளும் இல்லை. என் பெயர் பொய்யாமொழிப் புலவன் என்றார்.

முருகவேடன் புலவரைநோக்கிப், 'புலவனையின் பாட்டுக்கள் இயற்றுவாயோ' என்று கேட்கப் புலவரும் 'இயற்றுவேன்' என்றார். அவ்வாறாயின், 'உடன்போக்கின் போது நற்றாயிரங்கலாக ஒரு செய்யுள் என் மீது இயற்றுக! என் பெயர் முட்டை' என்றார். முருகவேடன் கூறியதைக் கேட்ட பொய்யாமொழியார் வேடன் கல்வி நலங் கனிந்தவனாகக் காணப் பெறுகிறான். இவன் நம்முயிரை வவ்வுதல் செய்யானென்று உள்ளத்தில் எண்ணியவராய்,

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கினைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேன் முட்டைக்குங் காடு.

என்று ஒரு பாடலைப் பாடினார். முருகவேடன் பொய்யாமொழிப் புலவரைப் பார்த்து நகைத்து, 'ஓ புலவ! நீ பொய் ஆம் மொழிப் புலவனாக விருக்கின்றாய். எவ்வாறெனின், பல்லாண்டுகள் நீர் பெறாதொழியினும் காய்ந்து போதலற்ற கள்ளியே கதிரோன் கொடுமையால் எரிந்து பொன்போற் பொறிபறந்து கொண்டுள்ள கானலில், சிறிது வெய்யிலைத்தானும் பொறாத கருவேலின் முட்கள் கிடத்தல் எவ்வாறு கூடும்? ஆதலின் நின்பாட்டுப் பொருட் குற்றத்தின்பாற் பட்டதாயிற்று. நின் மீது யான் ஒரு செய்யுள் செய்கிறேன். அதனைக் கேட்பாயாக' என்று கூறி,

விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங் கொண்டல்
பெய்யாத கானகத்தில் பெய்வளையுஞ் சென்றனளே
பொய்யா மொழிப் பகைஞர் போல்

என்னும் பாட்டைக் கூறினார். பின்னர் புலவரை நோக்கிக், 'குஞ்சுபெரிதா' அன்றி முட்டை பெரிதா?' என்று ஒரு கேள்வியைக் கேட்டார். குஞ்சே பெரிதென்றார் புலவர். "முட்டையைப் பாடிய நீ, முன்னர்க் 'கோழியைப் பாடிய வாயால் அதன் குஞ்சையும் பாடேன்' என்று எண்ணியது வியப்பன்றோ," என்று நகைத்து மறைந்தருளினார். இஃது அறுமுகன் திருவிளையாடல் என்பதை அறிந்த புலவர், அதுமுதல் தம்முடைய கடவுண் மாறுபாட்டுக் கொள்கையைக் கைவிட்டுத் திருந்திய பண்பினரானார்.

பாண்டிமா நாட்டின்கண்ணுள்ள தஞ்சாக்கூர் என்னும் ஊரில் ஒரு செல்வர் இருந்தார். அவர் அறிவு நலனும் செல்வநலனும் ஒருங்கே அமையப் பெற்றவர். அவர் பெயர் 'தஞ்சைவாணன்' என வழங்கிநின்றது. அவர் பாண்டிய மன்னன் ஒருவனிடம் அமைச்சராக அமர்ந்திருந்தார். அறிவுந்திருவு மொருங்கேயமைந்த அத்தஞ்சை வாணன்மீது பொய்யாமொழியார், அகப்பொருட் டுறைகட் கிலக்கியமாக இந்நாளில் அமைந்துள்ள அரியகோவையைப் பாடிக்கொண்டு சென்றார். புலவர் சென்ற ஞான்று தஞ்சைவாணர் அரச காரியமாக அகன்றிருந்தார். அவர் வருதற்குச்

சின்னாளாகுமென் றறிந்த அறிஞர் திரும்பவெண்ணினர். தஞ்சைவாணர் மனைவியும் தஞ்சை வாணனைப்போல் அறிவுநலஞ் சிறந்தவள். அம் மாதரசி தன் தலைவன்மீது அமைந்த கோவையைத் தானே கேட்டுப் பரிசளிக்க எண்ணினள். தன் னுள்ளக்கிடக்கையைப் பொய்யாமொழியாருக்குப் புலப்படுத்தினள். புலவரும் பாவையின் வேண்டு கோளின்படி கோவையை அரங்கேற்றுதல் செய் தார். செய்யுளின் செம்மையை யுணர்ந்த சேயிழை ஒவ்வொரு பாவின் முடிவிலும் ஒவ்வொரு பொற் றேங்காயைப் புலவர்முன் உருட்டினள். அரங் கேற்றம் இனிது முடிந்தது. அறிஞர் பரிசு பெற்றுச் சென்ற சின்னாள்களில் அமைச்சர் ஊரை யடைந்தார். பாவை கோவைச் செய்தியைப் பகர்ந்தாள். வாணர் கோவையை வாங்கிப் படித்துப் பார்த்தார். மனைவி தக்கபடி பரிசளிக்க வில்லை யென்று கோவையின் பெருமை விளக் கிற்று. வாணர் புலவரிடத்திற்கு ஓராளை அனுப் பினர். பெற்ற பரிசுடன் வந்துபோக வேண்டு மென்று தெரியப்படுத்தினர். புலவர்க்கு ஐயம் ஏற்பட்டது. மனைவியளித்த பரிசு அதிகமென்று எண்ணிப் பாதியைப் பிடுங்கிக் கொள்வதற்கே வாணர் வரச்சொல்லுகிறார் போலு மென்று எண் ணியவராய்த் தஞ்சைவாணனைச் சென்றுகண்டார். தஞ்சைவாணர் பரிசுப் பொருளாகிய தேங்காயை வாங்கி வைத்துக்கொண்டு மீண்டும் கோவையை அரங்கேற்றுமாறு கூறினர்.

தஞ்சைவாணர் முன்பு கோவை இரண்டாந் தடவையாக அரங்கேற்றம் தொடங்கியது. ஒவ்வொரு பாவின் முடிவிலும் வாணர், முக்கண்களிலும் மும்மணி பதித்த பொற்றேங்காயை உருட்டினர். வாணர் மாட்சியைக் கண்ட பாவாணர் இன்பக்கண்ணீர் பெருக்கினர். அரங்கேற்றுதலும் இனிது முடிந்தது.

பொய்யாமொழியார் நாடெங்கும் சுற்றித் திரிந்த காலத்தில் ஒருகால் திருக்கானப் பேர் என்னும் காளையார் கோவிலை யடைந்தார். அங்கு இறைவனைப் போற்றி வழிபட்டுத் தெருவிற் போகும்போது மழைபெய்யத் தொடங்கிற்று. ஒரு வீட்டிற்குச் சென்று மழைக்குத் தங்கினர். அஃதொரு கணிகை வீடு. அவ்வீட்டில் ஒரு கணிகை இருந்தாள். அக்கணிகையினுடைய தமக்கை, தாய், பாட்டி, அக்கணிகை ஆகிய நால்வருமே பிறவிக் குருடராக விருந்தனர். புலவர் மழைக்கொதுங்கி யிருக்கையில் அக்கூத்தியர் நால்வரும் இல்லத்தினுள் தட்டித்தடுமாறிப் போய்வந்து கொண்டிருந்தனர். அவர்களுடைய செய்கையைக் கண்ட புலவர் கூத்தியைக் கூப்பிட்டு வினவினர். அந்நால்வரும் பிறவிக் குருடரென்று தெரிந்தது. மனதிரங்கி,

கூத்தாள் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாள் தன்
மூத்தாள் முகத்தில் முழுநீலம்—மூத்தாள் தன்
ஆத்தாள் முகத்தில் அரவிந்தம் ஆத்தாள் தன்
ஆத்தாள் முகத்திலிரண் டம்பு''

எனவோர் அரிய செய்யுளைப் பாடினர். உடனே அந்நால்வருக்கும் கண் பார்வை நன்கு தெரியத் தொடங்கியது. அந்நால்வரும் பொய்யாமொழிப் புலவரின் கைம்மாறற்ற பேருதவிக்குப் பெரிதுங் களித்துப் புலவரைப் போற்றி வழிபட்டனர். புலவர் அவ்வூர்விட்டு வேறு பலவூர்களுக்குச் சென்றுவிட்டுச் சில ஆண்டுகள் சென்றபின் திரும்பவும் திருக்கானப்பேரை யடைந்தார். பழைய நினைவுக ளுண்டாயின. தம்மாற் கண்பெற்ற கூத்தியர்கள் எந்நிலையி லுள்ளார்கள்? பார்த்து வருவோமென்றெண்ணி அக்கூத்தியர்களின் இல்லத்தை யடைந்தார். கூத்தியர்களில்லம் ஒரு சிறு அரண்மனைபோற் காணப்பட்டது. அவர்கள் கண் பெற்றபின் பெருஞ்செல்வத்தை யடைந்து பெரிதும் இறுமாந்திருந்தனர். இல்லத்தையடைந்த பொய்யா மொழியார் கதவைத் தட்டினர். தங்களுக்குக் கண்ணளித்த தெய்வந்தான் கதவைத் தட்டுகிற தென்பதை யறியாத கணிகையர் விரைவிற் கதவைத் திறக்கவில்லை. கதவு திறக்கத் தாமதமா தலைக் கண்ட புலவர் வெகுண்டு, 'பழைய குருடி கதவைத் திறடி' என்று கூறினர். கூத்தியர் நால்வரும் பழையபடியுங் குருடிகளாகி மூலையி லுட் கார்ந்தனர். 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தலரிது' என்னும் பொய்யாமொழியார் மெய்யுரை பொய்யாகுமோ? அவர்கள் கதவைத் திறந்து பார்த்தபோது புலவரைக் காணவில்லை. அவர் போனதிக்குத் தெரியாது போய்விட்டார்.

மதுரைக்குச் சென்ற பொய்யாமொழிப் புலவர் சொக்கநாதப் பெருமானை வணங்கிக் கோயிலில் இருந்தபோது, அப்போது மதுரையை ஆண்டிருந்த வணங்காமுடிப்பாண்டியன் இறைவழி பாடு செய்தற்குக் கோயிலுக்கு வந்தான். அவன் தன் பெயருக்கேற்ப மனிதர் எவரையும் வணங் கான். ஆணவம் மிகுதியும் உடையவன். சிலர், பொய்யாமொழிப் புலவரின் பெருமையை அவனுக் குத் தெரியப்படுத்தினர். அவர்கள் கூறியதைக் கேட்டும் பாண்டியன் புலவரைச் சிறிதும் மதியாது, நீர் உண்மையில் பொய்யாமொழிப் புலவராயின், இதோ இச்சங்கத்திலிருக்கும் சங்கப் புலவர்களின் உருவங்களெல்லாம் தலையசைக்கும்படி ஒரு பாட்டுப் பாடும் பார்க்கலாம்' என்றனன். புலவர்,

உங்களிலே யானொருவ னொவ்வுவனோ வொவ்வேனோ
திங்கள் குலனறியச் செப்புங்கள்—சங்கத்தீர்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழும் ஒக்குமோ
ஏடெழுதா ரேழெழுவீ ரின்று

என்று ஒரு வெண்பாப் பாடினர். உடனே சங்கப் புலவர் உருவங்களெல்லாம் தலையை அசைத்தன. மேலும் பாண்டியன், 'முன்பு சங்கப்புலவர் வீற் றிருந்த சங்கப்பலகை பொற்றாமரையில் மூழ்கிக் கிடக்கிறது. அது மிதக்கும்படி ஒரு பாட்டுப்பாடும்,' என்றனன். அதற்குப் புலவர்,

பூவேந்தர் முன்போற் புரப்பார் இலையெனினும்
பாவேந்தர் உண்டென்னும் பான்மையால்—கோவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
வீற்றிணையே சற்றே மித.

என்னுஞ் செய்யுளைப் பாடினர். உடனே சங்கப் பலகை மேலே தோன்றி ஒரு கணம் மிதந்து மறைந்துவிட்டது. இவ்வியத்தகு செய்கைகளெல்லாம் நடந்துங்கூட வணங்காமுடி மாறன் உள்ளம் மாறிப் புலவரைப் போற்றவில்லை. வெகுளியுடன் வெளியேறினர் புலவர்.

இந்நிகழ்ச்சிகள் முழுவதும் அரசிக்குத் தெரியலாயின. அவள் அரசனுக்கு யாது தீங்கு நேருமோ என்று அஞ்சினள். வில்லம்பைவிடச் சொல்லம்புக்கு மிகவும் அஞ்சுபவள். அறிவு நிறைந்தவள். அவள் மாறுகோலம் அணிந்து விரைந்துசென்று புலவர் ஏறிச்செல்லும் பல்லக்கினைச் சிறிது தூரம் தாங்கிச்சென்றாள். இச் செய்தி பொய்யாமொழியாருக்குத் தெரிந்தது. அவர் அம்மங்கையினுடைய கற்புடைமையையும் பொற்புடைமையையும் மிகவும் பாராட்டி உள்ளங் கனிந்து,

உமையாளும் நீயும் ஒருங்கொப்பீர் ஒப்பீர்
உமையாளுக் கங்குண்டோர் ஊனம்—உமையாள்தன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியன்நின்
ஆகந்தோய்ந் தாண்டான் அரசு.

என்று புகழ்ந்து பாடி, அரசியை அனுப்பிச் சென்றார்.

பொய்யாமொழியார் பலவிடங்கட்கும் பலகால் அலைந்து அலுத்துப்போனர். இறுதியில் ஓரிடத்தில் அமைதியாகக் காலங்கழிக்க வேண்டுமென்று எண்

னினர். சோழ நாட்டில் சோழ மன்னனுக்கு அந்நாளிலே அமைச்சராகச் சீநக்க முதலியார் என்பவர் அமர்ந்திருந்தார். அவர் அறிவும் திருவும் நிறைந்தவர். அறிஞரைப் பெரிதும் போற்றுபவர். அவர் பொய்யாமொழிப் புலவரின் பெருமைகளை யெல்லாம் கேள்விப்பட்டிருந்தாரே யன்றி நேரிற் பார்த்தவரல்லர். அவரைச் சென்று கண்டார் பொய்யாமொழிப் புலவர். ஒருவரை யொருவர் தழுவி மகிழ்ந்து பிரியா நண்பர்களா யினர் இருவரும். ஒருவரைவிட் டொருவர் பிரியார். புலவர் உண்ணல் உடுத்தல் உறங்கல் முதலிய எல்லாமே சீநக்கர் மாளிகையில்தான். ஒருநாள் அரண்மனைக்குச் சென்ற சீநக்கர் இரவில் வெகு நேரமாகியும் வரவில்லை. அவரை யெதிர்பார்த்துக் கொண்டு அவருடைய வீட்டுப் பள்ளியறைக் கட்டி லில் அமர்ந்திருந்த புலவர் அப்படியே படுத்து உறங் கிவிட்டார். உறங்குதலுக்கு அவ்வறைக்கு வந்த சீநக்கரின் மனைவி கட்டிலிற் படுத்திருப்பது தன் தலைவன் என்று எண்ணிக்கொண்டு தானும் படுத்து உறங்கிவிட்டாள். பிறகுவந்த சீநக்கர் அவர்களிருவரும் கட்டிலில் படுத்திருப்பதைப் பார்த்தார். அவர் புலவர் மாட்டு அணுவளவு தவறும் எண்ணவில்லை. இது நம்முடைய மனைவி யின் அறியாமையே என்று எண்ணியவராய்ச், சிறிது தள்ளிப்படுங்கள். நானும் படுத்துக்கொள்ளு கிறேன்' என்றார். புலவரும் சீநக்கர் மனைவியும் விழித்துக்கொண்டனர். சீநக்கர் மனைவி கட்டிலிற்

படுத்திருந்தது தன்னுடைய தலைவராகிய சீநக்கர் அல்லர் என்பதை அறிந்ததும் நாணி அந்தப்புரத்திற்கு ஓடிவிட்டனள். நாட்கள் பல சென்றன. சீநக்கரும் புலவரும் பழமைபோலிருந் தனராயினும் இச்செய்தி சிலருக்குத் தெரிந்து அவர்கள் ஒருவாறு பழிப்புரை பகரலாயினர். அறிஞரும் அமைச்சரும் ஊர்வாயை மூட உலைமூடி யில்லையென்று பேசாதிருந்துவிட்டனர்.

பொய்யாமொழியார் வேற்றூர் ஒன்றுக்குச் சென்றவர் அங்குச் சிலநாள் தங்கிவிட்டார். அந் நாளில் சீநக்கருக்கு நோய்கண்டு இறந்துவிட்டார். சீநக்கரின் உறவினரும் அரசனும் வருந்திச் சீநக்க முதலியாருக்கு இறுதிக் காரியங்களைச் செய்து வெற்றுடலைச் சுட்டெரித்தற் பொருட்டுச் சுடலைக் குக் கொண்டுசென்று கட்டைகளின்மீது கிடத்தி யிருந்தனர். சுடலையிற் கூடியிருந்தோர் அனை வரும் சீநக்கரின் ஆருயிர்த்துணைவராகிய பொய்யா மொழிப் புலவருக்குச் செய்தியனுப்பியிருந்தமை யின் அவருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். சீநக்கருடைய மனைவி உடன் கட்டையேறித் தானும் தலைவனுடன் மாளுதற்குக் காத்திருந்தாள்.

அப்போது புலவர் அலறிக்கொண்டு அந்த விடத்திற்கு ஓடிவந்து சேர்ந்தார். சேர்ந்தவர் சீநக்கரின் உடலைக் கட்டித் தழுவிக்கொண்டு கதறி னர். ஆங்குக் கூடியிருந்தோரும் அரசனும் புலவரை நோக்கி, 'எங்கட்கெல்லாம் ஆறுதல்

கூறவேண்டிய தாங்களே இவ்வாறு வருந்தலாமோ' என்றனர். அதற்குப் புலவர்,

வாழி சோழஎன் வாய்மொழி கேண்மோ
ஊழி நிலவெறி மாளிகை யின்வயின்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்றறி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடமின் எனக்கிடந் தருகெனச்
சொல்லிய நண்பன் தனிச்செல் பவனோ?
நானும் ஏகுவன் நற்றுணை அவற்கே

என்று கூறித் தாமும் உடன்கட்டை யேறுதற்குத் தொடங்கினர். அரசன் முதலாயினோர் எவ்வளவோ தடுத்தும் அவர் சிறிதும் கேட்கவில்லை. அவர் சீநக்கரின் சிதையைக் குறுகி,

அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆயிழையோ
டின்றுநீ வானுலகம் ஏறினாய்—நன்றுநன்று
மானொக்கும் வேல்விழியார் மாறனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக் கிட

என்றொரு செய்யுளைக் கூறினர். உடனே சிதை விரிந்து புலவருக்கும் இடந்தந்தது. மூவரும் விண்ணக விருந்தாயினர். கூடியிருந்தோரனைவரும் அவர் தம் அன்புடைமையையும் பண்புடைமையையும் பார்த்து இன்பக் கண்ணீர் சொரிந்தனர்.

# ரு. அருணகிரிநாத அடிகள்

உண்மையறிவுச் செல்வராகிய தாயுமான அடிகளால்,

> "ஐயா! அருணகிரி அப்பா உனைப்போல
> மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?"

எனவும்,

> "கந்தர நு பூதிபெற்றுக் கந்தர நு பூதிசொன்ன
> எந்தையருள் நாடி இருக்குநாள் எந்நாளோ?"

எனவும், மற்றும் பல அறிஞர்களால் பலவகை யாகவும் வியந்துபுகழ்ந்தோதப் பெற்றவர் நம் அருணகிரிநாத அடிகள். இப்பெரியார், பிறக்க வும் வணங்கவும் இறக்கவும் வீடுபேற்றினைப் பீடுறக்கூட்டும் பெற்றிமிக்க திருவாரூர் திருத்தில்லை திருக்காசி என்னும் திருப்பதிகளைப் போன்று, நினைக்க வீடுபேற்றினையளிக்கும் தனக்கிணையிலாத் தனிப்பதியாய திருவருணையம்பதியில் தோன்றி யருளினார். இப்பெரியாருடைய காலம் இற்றைக் குச் சற்றேறக்குறைய ஐந்நூறு யாண்டுகளுக்கு முன்னரா மென்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு. அடிகளின் குலம் கணிகையர் குலமென் பதும் பெரும்பாலாருடைய முடிபு. அருணகிரி நாதர் பட்டினத்தடிகளின் திருப்புதல்வரென ஒரு கதை யுண்டு. பட்டினத்தடிகளின் காலம் எண் ணூறு யாண்டுகட்கு முன்னராகவே, அக்கதை பொருந்தாக் கூற்றாகவுந் திருந்தாச்செய்தியாகவும் ஆயிற்று.

அடிகள் அருணைவளம்பதியில் சிறந்து விளங்கிய முத்தம்மை என்னும் கணிகைக்கு அவளுடைய நல்வினைப்பயனாகத் தோன்றினார். இளமைக் காலத்தில் அடிகள் கற்கவேண்டிய கல்வியைக் கற்காது தம்மன விருப்பம்போல் திரிந்தார். ஆண்மையுணர்ச்சி தளிர்விடத் தொடங்கிய காலத்திலேயே கல்வித்தொழிலை நன்கு கற்கத் தொடங்கினார். அதனால் அடிகளின் தாய் ஈட்டிவைத்திருந்த அரும் பொருட் குவியல் அழிந்ததுடன் கொடு நோய்கள் பலவும் அடிகளைப் பீடிக்கலாயின. அடிகளின் தாயும் இறைவன் அடியை அடைந்தாள். அடிகள் தம் தமக்கையாரின் பாதுகாப்பில் இருந்தார். அடிகளின் செயல் அவ்வம்மையாரையும் வருத்தியது. பொருட் செல்வம் முழுமையுந் தொலைத்த அருணகிரியார் மீண்டும் மீண்டும் பொருள் தரும்படி தமக்கையாரை அல்லற் படுத்தினார். அல்லல் பொறாத தமக்கையார் அருணகிரியாரின் செவிகளை நன்கு சுடத்தக்க மொழிகள் சிலவற்றை மொழிந்தார். அச்சுடு சொற்கள் அருணகிரியாரின் செவிகளை வெதுப்பியதுடன் இன்பத்தீயையும் அவித்தொழித்தது. அடிகள் மிக வருந்தியவராய் இல்லத்தை விட்டகன்றார்.

அடிகள் தமது செய்கைகளையெல்லாம் நினைந்துநைந்து வருந்தியதுடன் தற்கொலை செய்துகொள்ளவும் முடிவுசெய்தார். அதற்கு வழி யாது என்று ஆராய்ந்தார். கோபுரத்திலேறிக் கீழே குதித்து விடலாம் என்று துணிந்தார்.

அண்ணாமலையார் திருக்கோயிலை நண்ணினார். வல்லாள மன்னனால் கட்டப்பெற்று வானுற வோங்கி நின்ற திருக்கோபுரத்தின்மீது ஏறினார். நிலத்தை நோக்கிக்குதித்தார். முற்பிறப்பில் அருணகிரியார் செய்திருந்த நல்வினை அவருக் குறுதுணையாகத் தொடங்கிற்று. ஒருவருக்கு நல்வினை ஓரணுவள விருப்பினும் அது வீண்போகாதன்றோ? ஆறுமா முகத் தண்ணலார் அருணகிரியார்க் கருள் செய்து தம் அடித்தொண்டில் வழிப்படுத்த எண்ணினார். எண்ணிய முருகவேள் ஒரு துறவியைப்போல் திருக் கோலம்பூண்டு கோபுரத்தின்கீழ் நின்றார். கீழ் நோக்கிவரும் அடிகளைத் தம் திருக்கையில் தாங்கி நிலத்தின்மீது விட்டார். மேலிருந்து கீழ் நோக்கி வந்த விரைவால் அடிகள் உணர்வற்றுக் கலங்கி யிருந்தார். திருமுருகன் திருக்கைகள் பட்ட மாத் திரத்தானே அருணகிரியாரின் மருணிறைந்த தீவினை மறைந்தொழிந்தது. அவர் மிகத் தூய ரானார். புத்துணர்ச்சி பொங்கியெழப் பெரு மகிழ்ச்சியுடன் நின்றார். அறுமுக இறைவன் அருணகிரியாரை நோக்கி, 'அன்பனே! யாது செய்யத் துணிந்தாய்; பெறுதற்கரிய இம்மக்கள் யாக்கையை வீணே தொலைத்து மறைய எண்ணினையே, இது தகுதியாமா? ஒருவன் தன் குற் றத்தை யுணர்ந்து வருந்தத்தொடங்கிய மாத்திரத் தானே அவனுடைய தீவினைகள் எல்லாம் கதிரவன் முன் இருளைப்போலும் பனியைப்போலும் மறைந் தொழியுமே. அவ்வாறாகவும் தற்கொலையோ

செய்து போக்க வேண்டும்? இனி இத்தகைய காரியங்களைப் புரியாது அறுமுகனைப்போற்றி வழிபட்டுக்கொண் டிருப்பாயாக' என்று திருவாய் மலர்ந்தருளித் தம் ஆறெழுத்தினைக் காதிடத்தே ஓதி ஒரு செபமாலையையும் அளித்து, 'முருகன் புகழையெல்லாம் இனிது பாடிக்கொண்டிருப்பாயாக' என்று கூறி மறைந்தருளினர். அவ்வளவில் அருணகிரியாரின் திருவாக்கில் நின்றும் கடல் மடை திறந்தாற்போல இனிய பாக்கள் வெளிப்படலாயின. உடனே,

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபரன் — எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமூ வர்க்கத் தமரரும் — அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் — இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தருபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் — ஒருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு — கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக — எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

என்னுந் திருப்புகழைப் பாடியருளினர். பின்னர் ஆறெழுத்தை உள்ளத்தில் எண்ணி முருகனைப் போற்றி இனிதமர்ந்திருந்தார். அருணகிரியாரின் தமக்கையார் நெடும்போது தம் இளவல் இல்லத் திற்கு வராதிருக்கவே உள்ளங் கலங்கி அருணகிரி யார் வழக்கமாகச் செல்லும் இடங்களையெல்லாம் தேடிவந்தார். அதற்குள் அருணகிரியார் கோபு ரத்திலிருந்து விழுந்த செய்தியும் துறவியான செய்தியும் ஊர்முழுவதும் பரவின. தமக்கையார் தம்பியார் அமர்ந்துள்ள இடத்தை அடைந்து நோக்கினர். முதலில் அவருடைய உள்ளங் கலங் கிற்றாயினும் பின்னர் ஒருவாறு தேறினர். இளவலை இல்லத்திற் கழைத்தார். இளவலோ, 'இனி அல்லல் வாழ்க்கையில் புகுதேன்' என்று தமக்கையாரைத் தேற்றியனுப்பினர்.

அருணகிரியார் சிலநாள் அவ்விடமே தங்கி யிருந்தார். முருகப்பெருமான் தமக் கருளிய பெரும் பேற்றை நினைந்து நினைந்து உருகினர். அப்பெரு மான் திருக்கோயில்கொண்டெழுந்தருளிய திருப் பதிகளையெல்லாம் கண்டு போற்றி வழிபட வெண்ணினர். சைவசமய ஆசிரியர்களாகிய

மூவரைப்போலத் தாமும் ஒவ்வொரு திருப்பதிக்குஞ் சென்று திருப்புகழ் பாடலானார். அருணகிரிநாதரின் மிகு புகழ் எண்டிசையும் பரவியது. திருமுருகன் பல திருப்பதிகளிலும் அடிகளார்க்குக் காட்சிதந்தருளினன். அடிகளார் முருகன் திருவடிவை யாண்டுக் காணினும் உடனே தமது இனிய பாவாற் பாடிப் பரவுவர். முருகவேள் தாம்மிக விரும்பி யமர்ந்துள்ள திருச்செந்தில், விராலிமலை, வயலூர், திருவாவினன்குடி முதலிய பல திருப்பதிகட்கும் வருமாறு வலிந்தழைத்துக் காட்சி தந்திருக்கின்றார்.

அடிகளார் பல திருப்பதிகட்குஞ் சென்று பணிந்து ஆங்காங்கு சின்னாள் தங்கியிருந்தாராயினும் அவருடைய உள்ளம் முழுவதும் தாம் அருள் பெற்ற அருணையையே நாடிநின்றது. ஆகவே அவர் விரைந்து மீண்டு அருணையி லுறைதலையே மேற்கொண்டிருந்தார் அடிகளாருக்கு மாணவர் பலர் சேர்ந்தனர். அடிகள் பாடிய பாக்களையெல்லாம் கோயில்களிலும் வீதிகளிலும் பாடுதல் அவர்களுடைய வழக்கம். ஒருநாள் அடிகளாரின் மாணவர் சிலர், 'திருமகள் உலாவும் இருபுய முராரி திருமருகநாமப் பெருமாள்காண்,' என்னும் ஒரு திருப்புகழினைப் பாடிக்கொண்டு திருவீதி வழியே சென்றனர். அப்போது அத்தெருவிலுள்ள ஓர் இல்லத்தில் வில்லிபுத்தூரார் அமர்ந்திருந்தார். சொற்போரில் தம்மிடம் தோல்வியுற்றாரின் காதையறுப்பதே அவருடைய தொழில். அவர் திருப்புகழ் பாடிச் சென்

ரூரைத் தடை செய்து நிறுத்தி, 'நீங்கள் பாடிக் கொண்டு செல்லும் குறத்திப்பாட்டு யாராற் பாடப் பெற்றது ?' என்று வினவினர்.

வில்லிபுத்தூராரின் கேள்வி அம்மாணவர் கட்கு மிகுந்த வருத்தத்தை யுண்டாக்கியது. அவர் கள் அடிகளாரின் பெருமைகளையெல்லாம் விரித் துரைக்கத் தொடங்கினர்கள். வில்லிபுத்தூராரோ அருணகிரி நாதரைப்பற்றி முன்னரே நன்கு கேள் விப்பட்டிருந்தாராதலின், 'அவருடைய பெருமைக ளெல்லாம் இருக்கட்டும். என்னுடன் சொற்போர் புரியச் சொல்லுங்கள். சொற்போரில் வெற்றி பெற்றல் பிறகு பெருமை தானகவே வெளிப்படும்' என்றார். அடிகளாரின் மாணவர்கள் அச்செய் தியை விரைந்து சென்று தம்முடைய ஆசிரிய ராகிய அடிகளாரிடம் அறிவித்தனர்.

அடிகளும் வில்லிபுத்தூராரையும் அவருடைய கொடுமையையும் முன்னரே கேள்வியுற்று அவ ருடைய செருக்கையடக்கி யொடுக்க வேண்டு மென்று எண்ணியிருந்தார். ஆகவே சிலரை யனுப்பி வில்லிபுத்தூராரைச் சொற்போருக் கழைத்தார். சொற்போர்க்களம் ஒன்று அமைக் கப்பட்டது. அடிகளார் நூறுபாக்கள் கொண்ட ஒரு நூல் பாடுவதென்றும் அதற்கு வில்லிபுத்தூ ரார் உரைகூற வேண்டியதென்றும், வில்லிபுத்தூ ரார் எப்பாட்டிற்கேனும் உரை விரிக்க முடியாமல் விழித்தால் அவர் தோற்றதாக முடிவு செய்து அவர் கைத் தோட்டியாலேயே அவருடைய காதினை

யறுத்து விடுவதென்றும், அவ்வாறன்றி எல்லாப் பாட்டிற்கும் உரை கூறிவிட்டால் அடிகள் தோற்ற தாகக்கொண்டு அடிகளின் காதைக் கொய்துவிடுவ தென்றும் முடிவு செய்யப்பட்டது. தக்கார் சிலர் நடுநிலைமையாளராக அமர்த்தப்பட்டனர்.

அடிகளார், 'கந்தரந்தாதி' என்னும் யமகவந் தாதியைப் பாடலானார். அதற்கு வில்லிபுத்தூரார் உரை கூறிக்கொண்டு வந்தார். ஐம்பத்துமூன்று பாடல்கள்வரை முடிவு பெற்றன. வில்லிபுத்தூ ராரும் கல்வியில் வல்லவரே யென்பதை யுணர்ந்த அடிகள் ஐம்பத்து நான்காவது பாடலைத்* தகர வருக்கப் பாட்டாகப் பாடினார். வில்லிபுத்தூரார் அது பாட்டன்று என்றும் வாய்க்கு வந்தபடி உளறி யது என்றும் தாமதனை ஒப்புக்கொள்ள இயலாத தென்றும் வீண் சொற்போரில் இறங்கினார். அருணகிரிநாத அடிகளாரோ, 'அஃது இலக்கண முறைப்படி பொருளமைதியுடன் பாடப் பெற்ற பாட்டே' என்றார். அடிகளாரே அப் பாட்டிற்குப் பொருத்தமாம்படி திருத்தமான உரைகூறிவிடின் தமது தோல்வியை ஒப்புக்கொள்ளவும் காதை யிழக்கவும் உடன்படுவதாக உரைத்தார் வில்லிபுத் தூரார். அடிகளார் அப் பாட்டிற்கும் பொருள் விரித்துரைத்தார். கூறியபொருள் அமைதியுடை யதாக விருந்தது. வில்லிபுத்தூரார் தம் தோல் வியை ஒப்புக்கொண்டார். நடுநிலைமையாளரும்,

---

* இப்பாடலையும் உரையையும் வில்லிபுத்தூரார் வாலாற்றிற் காண்க.

'வில்லிபுத்தூரார் தோற்றார்' என்று முடிவு கூறினார்கள்.

அவ்வளவில் வில்லிபுத்தூரார் எழுந்து தம் தோட்டியை அடிகள்முன் நீட்டி, 'இத்தோட்டியால் எனது செவியினை அறுத்துவிடலாம்' என்றார். அடிகள் அத்தோட்டியைத் தம்கையில் வாங்கி, 'நம்மால் ஒருவருக்கு ஒரு காதைக்கொடுக்கும் ஆற்றல் உண்டா? அவ்வாறாக, ஒருவருடைய காதையறுப்பது எவ்வாறு நேர்மையுடையதாகும்? அவ்வாறு செய்தல் இறைவன் திருவுளப்பாங்கிற்கு ஏற்றதன்று. இன்று நாம் உமக்கு உம்முடைய காதினை அறப்பொருளாக வழங்குகின்றோம். இனி இத்தொழிலில் ஈடுபடாதொழிவீராக' என்று கூறி அத்தோட்டியினை முறித்தெறிந்தார். அடிகளின் இத்தகைய பெருந்தன்மையைப் பார்த்தே அக்காலத்திய அறிஞர் ஒருவர்;

'காசுக்குக் கம்பன் **கருணைக் கருணகிரி**
ஆசுக்குக் காளமுகி லாவனே—தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன் உவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவையெனக் கூறு'

என்று பாடினார். பின்னர் வில்லிபுத்தூரார் அருணகிரிநாத அடிகளிடம் பல அறவுரைகள் பெற்றுச் சென்றார். இவ் வரலாறு வேறுவகையாகவும் கூறப்பெறுகிறது.

அடிகளார் காலத்தில் அருணையம்பதியில் சம்பந்தாண்டான் என்னும் பெயரினையுடையான் ஒருவன் இருந்தான். அவன் இறைவியை வழி

படுஞ் சாத்தேய மதத்தினன். இறைவியின் அருள் ஒரு சிறிது கைவரப்பெற்றவன். பொறாமையும் பொச்சாப்பும் மிக்கவன். அவனுக்கு அருணகிரி நாதர் இடத்தில் இயற்கையாகவே அழுக்காறு உண்டாகியிருந்தது. அடிகளாரின் பெருமையைக் குறைக்க அவன் வழிதேடியிருந்தான். அந் நாளில் பிரபுடதேவன் என்னும் அரசன் அண்ணாமலையில் அதிகாரஞ் செலுத்தியிருந்தான். சம்பந் தாண்டானுக்கும் பிரபுடதேவ மன்னனுக்கும் பழக்கம் உண்டு. ஒருநாள் சம்பந்தாண்டான் அரசனை நோக்கி, 'நான் செய்துவரும் இறைவி வழிபாடு மிகச்சிறந்தது. நான் தங்களுக்கு இறை வியின் காட்சியைக் கிடைக்கச்செய்வேன். அருண கிரிநாதர் செய்யும் அறுமுக வழிபாடோ அவ்வளவு சிறந்ததன்று, அவரால் முருகன் காட்சியைத் தங் களுக்குக் கிடைக்கச் செய்யமுடியா' தென்று சூழ்ச்சியாகச் சிலமொழிகள் கூறினன். அடிகளா ரின் பெருமையையும் சம்பந்தாண்டானின் சிறுமை யையும் நன்குணர்ந்த அரசன் சம்பந்தாண்டானை நோக்கி, 'நீ இறைவியைக் காட்டத் தவறுவையா யின் உன்னையாது செய்கிறது?' என்று வின வினன். அதற்குச் சம்பந்தாண்டான், 'நான் தங் கட்கு இறைவியின் திருக்கோலக் காட்சியினைக் காட்டத் தவறுவேனுயின் திருவண்ணுமலையை விட்டே அகன்று சென்றுவிடுகிறேன்' என்முன். அவ்வழுக் காறுடையானை ஊரைவிட்டுத் துரத்த வேண்டுமென்று எண்ணிய அரசன் அடிகளாரை

யடுத்துச் சம்பந்தாண்டான் கூறிய மொழிகளைக் கூறினன்.

அரசன் கூறியதைக்கேட்ட அடிகளார் தம்மால் திருமுருகன் திருக்காட்சியினை அரசனுக்குக் கிடைக்கச் செய்யமுடியு மென்றார். அரசன் பேரவை யொன்றுகூட்டினன். அறிஞர்களும் மற்றையோரும் ஆங்குக் குழுமினர். சம்பந்தாண் டான் மந்திர முறைப்படி இறைவியைப் போற்றி வழிபட்டான். இறைவியோ சம்பந்தாண்டானுக்கு மட்டுங் காட்சிதந்து அரசனுக்குத் தராது மறைந்து போயினள். அரசனிடம் சம்பாந்தாண்டான் தனது தோல்வியை ஒப்புக்கொண்டான்.

அருணகிரிநாதர் தாம் அறுமுக இறைவனை மிகவும் போற்றித் தமக்கும் அரசனுக்கும் காட்சி யளிக்குமாறு வேண்டினர். சம்பந்தாண்டான் அடிகளாரும் வெற்றியடையாது தோல்வியுற வேண்டு மென்று எண்ணினன். அவன் இறைவியைப் போற்றி அறுமுகக்கடவுளைத் தடைசெய்யுமாறு குறையிரந்தான். இறைவியும் சம்பாந்தாண்டான் வேண்டுகோளை நிறைவேற்றவெண்ணி, முருகனைப் பிடித்துத் தன் மடிமீது இருத்திக்கொண்டு முருகன் தன்னை நீங்கிச் செல்லாவாறு தடைசெய்தாள். நீண்டநேரமாகியும் திருமுருகன் காட்சியினைக் காணாத அடிகளார் நிகழ்ந்தது யாதுஎன்று அறிவுக் கண்கொண்டு பார்த்தார். அம்மை செய்துள்ள தடை செம்மையாகத் தெரிந்தது. உடனே அடிகளார் பல திருப்புகழ்ப்பாக்களை அன்புததும்பப் பாடிய

னுடன் 'மயில் விருத்தம்' என்னும் பாவினையும் அறுமுகன் ஊர்தியாகிய மயிலைநினைந்து பாடினர். அவ்வளவில் மயில் தனது அழகிய தோகையை விரித்து, இறைவிமுன்நின்று அழகுடன் ஆடியது. இறைவி மயிலின் அழகிய ஆடலிலே உள்ளத்தைச் செலுத்திக் களித்திருந்தமையின் அறுமுகனைக் கைந்நெகிழவிட்டாள். அச்சமயத்தைக் கண்ட அடிகளார்;

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாளம் அவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடியமாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
கதைவி டாத தோள்வீமன் எதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விசய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்
உததி மீதி லேசாயும் உலகமூடு சீபாத
உவண மூர்தி மாமயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராசன்
உளமும் ஆட வாழ்தேவர் பெருமாளே.

என்னும் அரியபாடலைப் பாடினர். உடனே முருகன் அடிகளாருக்கும் அரசனுக்குங் காட்சி தந்து மறைந்தருளினன். அவ்வாறு அறுமுகன் அடிகளாருக்கும் அரசனுக்கும் காட்சியளித்து

மறைந்தவிடம் இன்றும் திருஅருணைக் கோயிலில் 'கம்பத் திளையனார்' என்னும் பெயருடன் விளங்கு கின்றது. அவ்விடத்தில் முருகன் திருவடிவமும் இருக்கின்றது.

அழுக்காற்றால் தோல்வியடைந்த சம்பந்தாண்டான் தன் உடன்பாட்டின்படி அருணையைவிட்டு அகன்றானாயினும் அருணைக்கு வருதலையும் அரசனைக்கண்டு உரையாடுதலையும் விட்டான் இல்லை. உரையாடும் போதெல்லாம் அடிகளாரைப்பற்றி இழித்தே உரையாடினான். ஒருமுறை அவன் அரசனைப் பார்த்து, 'அருணகிரியார்தாம் பெருமையிற் சிறந்தவராயிற்றே; தேவர் உலகிலுள்ள கற்பக மலரைக்கொண்டு வரும்படி கூறுங்கள் கொண்டு வருகின்றாரா என்று பார்ப்போம்' என்று அரசனிடத்தில் கோள் மூட்டிவிட்டான். அரசன் அடிகளாரின் ஆற்றலை உணர்ந்திருந்தும் யாதும் எண்ணாதவனாய் அடிகளைக்கண்டு 'விண்ணுலகில் உள்ள கற்பகமலரை மண்ணுலகிற்குக் கொண்டுவருதல் தங்களால் இயலுமாயின் கொண்டு வாருங்கள் பார்ப்போம்' என்றான்.

அடிகளார் தம்மால் இயலத்தக்க அதனை முடிக்கவெண்ணினார். ஒரு கோபுரத்தின்மீதேறித் தம்முடலினை ஆங்குக் கிடத்திவிட்டுத் தாம் ஒருகிளியின் உடலில்புகுந்து பறந்து விண்ணுலகிற்குச் சென்றார். அடிகளின் செய்கையையே பின் தொடர்ந்து பார்த்திருந்த சம்பந்தாண்டான் கோபுரத்தின் மீது அடிகளாரின் உடலைக் கண்டான்.

அவன் உண்மையை ஊகித்துணர்ந்தான். ஆயினும் அரசனிடஞ் சென்று, 'அருணகிரிநாதர் கற்பகமலரைக் கொண்டுவரும் ஆற்றல் அற்றவராய்த் தற்கொலை புரிந்துகொண்டு மாண்டார்' என்று ஒரு பொய்யுரை புகன்றதுடன் அவ்வுடலினை எரித்து அழித்துவிடச் செய்தான். பொற்புடைக் கற்பகமலருடன் விண்ணகத்திருந்து மண்ணகத்தை யடைந்த அடிகளார் கோபுரத்தைக் குறுகித் தம்முடலினைப் பார்த்தார். காணப்பெறவில்லை. முதற்கண் தம்முடலின் பொருட்டு அடிகளார் வருந்தினர். பின்னர் ஒருவாறு தேறிக் கிளியுடலுடனேயே அரசனிடங் கற்பக மலரைக் கொண்டு சென்றார். மலரின் அளப்பரும் மணத்தால் கற்பகமல ரென்றறிந்த அரசன் அடிகளாரின் செய்கையை ஒருவாறு ஊகித்துணர்ந்தான். தான்செய்த தீமையை எண்ணி வருந்தினன். சம்பந்தாண்டான் மீது கடுஞ்சினங் கொண்டான். அவனைப் பிடித்துவருமாறு ஆட்களை யேவினன். செய்தியறிந்த சம்பந்தாண்டான் வடக்கு நோக்கி ஓடிச் சென்றவிடந் தெரியாது மறைந்தான்.

அடிகளார் கற்பகமலரினை அரசனிடம் அளித்துவிட்டுக் கிளி வடிவத்துடனேயே கோபுரங்களின் மீது சிலகாலம் அமர்ந்து பின்னும் பல பாடல்களைப்பாடி இறுதியில் திருமுருகன் திருவடிப் பேற்றினை யடைந்தார். கந்தரநுபூதி, கந்தரலங்காரம் முதலிய நூல்கள் கிளிவடிவாக விருந்த

காலத்தில் பாடியவை என்பது சிலருடைய முடிபு.

கந்தரநுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல் விருத்தம், மயில் விருத்தம் திருப்புகழ் ஆகியவைகள் அருணகிரிநாத அடிகளாற் பாடப்பெற்றவை. வேறு சில சிறு நூல்களும் அடிகளுடைய பெயரால் வழங்கப் பெறுகின்றன.

திருப்புகழ்ப் பாடல்களின் தொகை பலரால் பலவகையாகக் கூறப்பெறுகின்றது. பதினாறாயிரமென்பது சிலர் கூற்று, முப்பத்தாறாயிரமென்பது ஒருவர் கூற்று, அடிகளார் தாம்பாடிய முப்பத்தாறாயிரம் பாடல்களையும் திருச்செந்தூருக்கு எடுத்துச் சென்று திருமுருகன் திருமுன்னர் வைத்து திருப்புகழ்ப் பாடல்கள் முப்பத்தாறாயிரத்தையும் ஒரு முறையேனும் அன்பினொடு பாடிப்போற்றி வழிபடுவோர்க்குத் தான் பெறப்போகும் பேற்றினை யளிக்க வேண்டிக்கொண்டாரென்றும், அவ்வேண்டுகோளுக்கு அறுமுக வள்ளலிடம் இருந்து எத்தகைய பதிலும் வரவில்லையென்றும், அதனால் வெகுண்ட அடிகளார் நான் பாடிய இப்பாடல்கள் அத்தகைய பயனை யளியாதெனின் இஃது, இருக்கவே வேண்டியதில்லையென்று ஏடு ஏடாக உருவிக் கடலில் எறிந்து விட்டார் என்றும்; அவ்வாறெறியப்பட்ட ஏடுகளில் சிறந்தவைகள் மட்டும் முருகன் அருளால் கரையில் ஒதுங்கினவென்றும் அவைகளே இப்பொழுதுள்ள ஆயிரத்துச் சொச்சம் பாடல்களென்றும் ஒரு செய்தி வழங்குகின்றது

திருப்புகழின் அருமை பெருமைகளெல்லாம் நூலுக்கு முன்னர் உள்ள சிறப்புப் பாயிரத்தால் ஒருவாறு விளங்கும். திருப்புகழ் பாடுதற்கினிய சந்தப்பாவில் அமைந்துள்ளமையாலும் இடை இடையே இன்பச் செய்திகள் பல விரவியிருத்தலாலும் அனைவராலும் மிகப் போற்றிப் பாராட்டப் பெறுகின்றது.

## கா. வில்லிபுத்தூரார்

வில்லிபுத்தூரார், பெண்ணையாறு பாயப் பெற்றதும் திருக்கோவலூர் முதலிய திருமால் திருப்பதிகளையும்; திருவெண்ணெய்நல்லூர் முதலிய சிவத் திருப்பதிகளையும் உடையதும் நடுநாடென்று நவிலப் பெறுவதுமாகிய திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூரில் பிறந்தவர். இவருடையகுலம் பார்ப்பனர்குலம். சமயம் திருமால் சமயம். வீரராகவாச்சாரியார் என்பவருக்கு இற்றைக்குச் சற்றேறக்குறைய அறுநூறு யாண்டுகளுக்குமுன் புதல்வராகப் பிறந்தார். இளமைக்காலத்தில் தானே முத்தமிழையும் தக்க நல்லாசிரியரிடத்தில் தெளிவுபெறக் கற்றுத்தேறினர். வடமொழி வல்லார்பால் அம்மொழியையும் நன்கு கற்றுணர்ந்தார்.

கருவிலேயே கல்வித்திரு அமையப்பெற்ற வில்லிபுத்தூரார், விரைவாகப் பாடுதல், இனிமை பெறப் பாடுதல், ஓவியம் அமையப்பாடுதல், வி

வாகப் பாடுதல் ஆகிய நால்வகைப்பாக்கள் பாடுவதிலும் வல்லுநரானார். வில்லிபுத்தூராரின் கீர்த்தி தமிழ்நாடு முழுவதும் நன்கு பரவியது. சேர சோழ பாண்டியரென்னுந் தமிழரசர் மூவரும் வில்லிபுத்தூராரின் கல்விப்பரப்பை நன்கு கண்டு மகிழ்ந்து தக்கவாறு மேன்மைப்படுத்திச் சிறப்பித்தனர்.

செந்தமிழ்ப் பேரறிஞராகித் திக்குகள் தோறுஞ் சென்று சிறப்பெய்தும் வில்லிபுத்தூராரின் பெருமையையுணர்ந்த வக்கபாகை நகரத்தரசனாகிய வரபதி யாட்கொண்டான் என்னும் அரசன், நம் நாட்டில் தோன்றிய புலவரை நாம் இதுவரை போற்றாதிருந்தோமே என்று வருந்தித் தன் அவைக்களத் தலைமைப் புலவராக அமைத்துச் சிறப்புச் செய்தான். வில்லிபுத்தூராரும் வரபதி யாட்கொண்டான் உள்ளங்களிக்குமாறு தம் கல்விப் பெருக்கைக்காட்டி, அவ்வரசனை மகிழச் செய்திருந்தார். அக்காலை வரபதி யாட்கொண்டான் வில்லிபுத்தூராரைப் பார்த்து; நம்மிருவருடைய புகழும் உலகில் நீண்டகாலம் நிலைத்து நிற்கும்படி பாரதத்தைத் தமிழிலே மொழிபெயர்த்து இனிய செய்யுட்களாகப் பாடவேண்டுமென்று வேண்டிக் கொண்டான். வில்லிபுத்தூராரும் அப்படியே பாடிமுடித்தார். இச்செய்திகளெல்லாம் வில்லிபுத்தூராருடைய திருமகனார் வரந்தருவார் என்பவரால் வில்லிபாரத முகப்பிலேயே பாடப் பெற்றுள்ளன. இவையல்லாமல் வில்லி

பாரத வரலாறு வேறுவகையாகவும் வழங்கு கின்றன. அவைகளையும் ஈண்டுச் சிறிது கூறு வாம்.

வில்லிபுத்தூராருக்கும் அவருடைய இளவலுக் கும் தாயபாகங் காரணமாக வழக்குண்டாயிற்று. இருவரும் அரசனிடஞ்சென்று வழக்குரைத்தனர். அரசன் வில்லிபுத்தூராரது கல்வித்திறத்தை முன் னரே நன்குணர்ந்தவனாதலால், மிகவுங் கற்றறிந்த அறிஞராகிய வில்லிபுத்தூராரைக் கூடப் பொருட் பற்று விடவில்லையே என்று எண்ணினான். தாய பாகங் காரணமாகப் போரிட்டழிந்த துரியோதன பாண்டவர் வரலாறுகளைப் படிக்கச் செய்தால் பொருட்பற்று அழியும்; இருவரும் நல்லறிவு பெறு வரென்று எண்ணினான். வில்லிபுத்தூராரைப் பார்த்து, 'வடமொழியிலுள்ள பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடவேண்டும். அவ் வாறு பாடி முடிந்த பிறகுதான் உங்கள் வழக்குத் தீர்க்கப்படும்' என்று உரைத்தான். வில்லிபுத் தூராரும் பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடினார். துரியோதனாதிகள் தாயபாகத்தின் பொருட்டுச் செய்த கபடக்கூத்துகளும் தீச்செய் கைகளும் வில்லிபுத்தூராரது உள்ளத்தை வருத்தி யது. அவர் தாயபாகத்தை வெறுத்து அதனைத் தம் இளவலுக்கே விட்டுவிட்டுத் தாம் பொருட் பற்றற்றவரானார்.

மற்றொருவகை வருமாறு: வில்லிபுத்தூரார் கல்வித்துறையில் மிகவுந் தேர்ச்சிபெற்றுத் தமக்கு

நிகராக எவருமின்றிச் செந்தமிழ் உலகில் சுற்றித் திரிந்தார். தம்முடன் எதிர்த்துச் சொற்போரில் தோற்றால் அவர்களுடைய காதை அறுத்துவிடுதலைத் தம்முடைய தொழிலாகக் கொண்டார். அவ்வாறு செய்தற்கு அக்காலத்திய அரசர்களுடைய உடன்பாட்டையும் பெற்றிருந்தார். தோட்டியென்னும் கருவி அவருடைய காதறுப்பு வேலைக்குத் துணைபுரிந்தது. இவருடைய காலத்திலே அறிவு நன்கு நிரம்பாத அரைகுறையான கல்வி கற்றவர்கள் புலவர்களென்று தம்மைக் கூறிக்கொள்ளுவதற்கு அஞ்சிப் பதுங்கியிருந்தனர். வில்லிபுத்தூரார் இத்தகைய காதறுப்புக் காரியத்தில் ஈடுபட்டிருந்தார் என்பதை;

"குறும்பி யளவாக் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை"

என்னும் செய்யுளடி வலியுறுத்துகிறது.

வில்லிபுத்தூரார் திக்குகடோறும் வெற்றிக் கொடி நாட்டிக்கொண்டு திருவண்ணாமலைக்குச் சென்றார். அப்போது அங்கு அருணகிரிநாதர் என்னும் பெரியார் அறுமுகன் திருவருள் மிகப் பெற்றவராகி, இனிமைமிக்க சந்தப்பாடல்கள் பாடிக் கொண்டிருந்தார். வில்லிபுத்தூரார் அருணகிரிநாதரிடமுஞ் சென்று அவரைச் சொற்போருக்கழைத்தார். அருணகிரிநாதரோ வில்லிபுத்தூராரின் காரியங்களையெல்லாம் முன்னரே கேள்வியுற்று, அவரைக் காதறுக்கும் கொடுவினை

யில் நின்றும் தடுக்க வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருந்தமையின் இதுவே தக்க காலமென்று மகிழ்ந்து; வில்லிபுத்தூராரை நோக்கி, 'நான் ஒரு நூல் பாடுகின்றேன். நான் பாடப்பாட நீவிர் அதற்குப் பொருளுரைத்துக் கொண்டு வருதல் வேண்டும். எந்தப் பாட்டிற்கேனும் பொருள் கூறத் தடைப்படுவீராயின் உம்முடைய காதினை அறுத்து விடுவேன்' என்று முடிவுங்கூறினர். அருணகிரி நாதர் கூறியதற்கு வில்லிபுத்தூரார் உடன்பட்டார். தக்கோர் முன்பு சொற்போர் தொடங்கியது. அருணகிரிநாதர் முருகக்கடவுள் மீது கந்தரந்தாதி என்னும் ஒரு நூலினைப் பாடினர். வில்லிபுத்தூரார் அதற்குப் பொருளுரைத்தார். ஐம்பத்து மூன்று பாட்டுக்கள்வரை முடிவுபெற்றன. ஐம்பத்து நான்காவது பாட்டாக;

திதத்தத் தத்தித் தத்திதி தாதைதாத துத்தித் தத்திதா
திதத்தத் தத்தித் ததிதித்தித் ததேதுத் துதித்தி தத்தா
திதத்தத் தத்தித தத்தை தாத திதே துதை தாததத்து
திதத்தத் தத்தித் தித்திதீ தீதிதி துதிதீ தொத்ததே

(இதன் பொருள்) திக தத்த தித்த-தித தத்த தித்த என்னும் இத்தாள வொத்துக்களை, திதி-(தனது திருநடனத்தான்) காக்கின்ற, தாதை-தந்தையான பரமசிவனும், தாத-பிரமனும், துத்தி-படப் புள்ளிகளையுடைய, தத்தி-(ஆதிசேஷ னென்னும்) பாம்பினது, தா-இடத்தையும், திதம்-நிலைபெற்ற, தத்து-ததும்புகிற, அத்தி-சமுத்திரத்தையும், (சயனமாகக் கொண்ட), ததி தித்தித் ததேது-தித்திப் புடையதான தயிரையே உண்ட கண்ணனும்,

துதித்த-துதிசெய்யும்படியான, இதத்து-பேரின்ப சொரூபியான, ஆதி - முதல்வனே ! தந்தத்து - தந்தங்களையுடைய, அத்தி-ஐராவத யானையால் (வளர்க்கப்பட்ட), தத்தை-கிளிபோன்ற தெய்வயானையம்மைக்கு, தாத-தொண்டனே ! திதேதுதை-தீமையே நெருங்கின, காது-(ஏழு)தாதுக்களையுடையதும், அதத்து-மரணத்தோடும், உதி-பிறப்போடும், தத்து-(அநேக) ஆபத்துகளோடும், அத்து-இசைந்திருப்பதுமான, அத்தி தித்தி-எலும்புகளை மூடியதொரு பையைப்போன்ற இவ்வுடல், தீ-அக்கினியினால், தீ-எரிக்கப்படுகிற, திதி-தினத்தில், துதிதீ-(உன்னைத்) துதிக்கும் புத்தி, தொத்ததே-(உனக்கே) அடிமையாக வேண்டும். (என்றவாறு.)

திரிமூர்த்திகளாலுங் கொண்டாடப்படுவனே ! தெய்வயானை கொழுநனே ! இவ்வுடம் பழியுங்காலத்து உன்னைத் துதிக்கும் என் அறிவை உன் திருவடிக்கு அடிமையாக்க வேண்டுமென்பதாம். தீ-எழுவாய், தொத்தது-பயனிலை. திதத தத்த தித்த இம் மூன்றும் பிறதாளமானங்களுக்கும் உபலட்சணம். திதி-ஸ்திதி, காதை-தாத, தாத-தாதா : வடசொல் திரிபுகள்.

என்னுந் தகரவருக்கச் செய்யுளைப்பாடினர். இப்பாடலுக்குப் பொருள்கூற வில்லிபுத்தூராரால் இயலவில்லை. 'நான் இதனைப் பாட்டென்று ஒப்புக்கொள்ள மாட்டேன். நீவிர் வேண்டுமென்றே வாய்க்கு வந்தபடியாகப் பாடியிருக்கின்றீர். இதற்கு நீவிர் தக்க பொருள் கூறிவிடின், நான் உம்மிடந் தோற்றுவிட்டதாக ஒப்புக்கொண்டு காதையும் இழந்து விடுகிறேன்' என்றார். உடனே அருணகிரிநாதர் அப்பாட்டிற்குத்தாமே உரை

கூறினர். வில்லிபுத்தூரார் உடனே எழுந்து தம் தோல்வியை ஒப்புக்கொண்டு, தோட்டியை அருணகிரிநாதரிடங் கொடுத்துத் தம்முடைய காதை அறுத்துவிடும்படியாகக் கேட்டுக்கொண்டார். அருணகிரிநாதர் தோட்டியை வாங்கி முறித்தெறிந்துவிட்டு, 'உம்முடைய காதுகள் நான் வழங்கியவைகளாக இருக்கட்டும். இனி இத்தகைய தீவினையில் ஈடுபடாதீர், இதுவரை பலரின் காதுகளை யறுத்துத் தேடிக்கொண்ட தீவினை நீங்கும்படி ஏதேனும் ஒருநூலைச் சிவவெறுப்பில்லாமற் பாடுவீராக' என்று கட்டளையிட்டார். வில்லிபுத்தூராரும் அதற்கிணங்கி வில்லிபாரதத்தைப் பாடிமுடித்தார். இவ்வாறன்றித் திருவண்ணாமலை வழியாகச் செல்லும்போது மலை கண்ணுக்குப் புலப்படாவாறு திரையிட்டுச் சென்றார் எனவும்; அதனையுணர்ந்த அருணகிரிநாதர் கண்கெடச் செய்தாரெனவும் பிறகு பாரதத்தைப் பாடப் பணித்தாரெனவும் வேறு வகையாகவும் வழங்குகின்றது. வில்லிபுத்தூரார் பாரதம் பாடியவரலாறு மேற்கூறியாங்கு வழங்கப்பெறுவதுடன், புலவர் புராணம் பாடிய தண்டபாணி சாமிகள் என்னும் பெரியாரால் புலவர் புராணத்தில் வேறுவிதமாகவும் கூறப்பெற்றிருக்கிறது.

பெண்ணைநாட்டிற் சனியூர் என்று ஓர் ஊர் உள்ளது. அவ்வூரிற் பார்ப்பனர் குலத்தில் இரண்டு உடன் பிறந்தார்கள் தோன்றினர். அவர்கள் திருமாலைப் போற்றும் வைணவ சமயத்தினர்.

அவர்கள் கல்விப்பொருளும் செல்வப்பொருளும் நிரம்பப் பெற்றிருந்தனர். ஒருவர்மாட்டு ஒருவர் மிகுந்த அன்புடையவர்கள். அவர்களிருவரும் திக்கெலாம் புகழும் தென்பாண்டி நாட்டிலுள்ள வில்லிபுத்தூரை யடைந்து ஆங்கு ஒரே குடும்பமாக வாழ்ந்துகொண்டு, திருமாலைப் போற்றிக் கொண்டிருந்தனர். அவர்களில் மூத்தவர் வில்லிபுத்தூரார் என்று சிறப்புப்பெயர் அடைந்தார். அவர்களிவ்வாறிருக்கையில் கொங்குநாட்டை ஆண்டான்பிள்ளை யென்பவன் ஆண்டு கொண்டிருந்தான். அவன் வடமொழியிலுள்ள பாரதத்தைத் தமிழில் செய்விக்க வேண்டுமென்று விரும்பினன். வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடினல் சிறப்பாக இருக்குமென்று எண்ணினன் அவர் செல்வச் சிறப்பும் உடையவராகையால் தான் பாடச்சொன்னல் உடனே எளிதாகப் பாடிவிட மாட்டாரென்றும் அவன் உணர்வான். எனவே ஒரு சூழ்ச்சியாற் காரியத்தை முடிவு செய்துகொள்ள எண்ணினன்.

ஆண்டான்பிள்ளை சொல்லாற்றல் மிக்க ஒரு பார்ப்பன விதவையை யழைத்துத் தன்னுடைய உள்ளக்கிடக்கையை யெல்லாம் உரைத்தான். 'நீ எவ்வாறேனும் திருவில்லிபுத்தூருக்குச் சென்று வில்லிபுத்தூரார் குடும்பத்தில் சிலநாள் தங்கி ஓர்ப்படிகளாகிய பெண்களுக்குள் கலாம் உண்டாக்கிவிட வேண்டுமென்று கூறி வேண்டிய பொருளுங் கொடுத்தான். பார்ப்பனமாதும் ஆண்டான்பிள்ளை

வேண்டுகோட்படியே வில்லிபுத்தூரரை யடைந்தாள். வில்லிபுத்தூரார் குடும்பப் பெண்களோடு பழகி உறவு பிடித்தாள். ஒருவருக்குத் தெரியாமல் மற்றொருவரிடம் அப் பார்ப்பன விதவை, இல்லாதவைகளையும் பொல்லாதவைகளையுஞ் சொல்லிக் கலாம் உண்டாக்கிவிட்டாள். பெண்களுக்குள் தொடங்கிய சண்டை வளர்ந்து ஆடவர்களிடமும் பரவிவிட்டது. இருபெண்களும் பாகம் பிரித்துக் கொண்டு தனிக்குடும்ப மாகிவிடவேண்டுமென்று தத்தங் கணவரைத் தொல்லைசெய்தனர். ஆடவர்களும் தாயபாகத்தைப் பங்கிட்டுக்கொள்ளத் தொடங்கியதிலும் கலாம் உண்டாயிற்று. அவர்கள் பாண்டியனிடம் சென்று வழக்குத் தீர்க்க வேண்டினர். அதற்கு முன்னரே ஆண்டான்பிள்ளை பாண்டியனைக் கண்டு வில்லிபுத்தூரார்களுடைய வழக்கு வந்தால் தன்னிடம் அனுப்ப வேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தான். வில்லிபுத்தூரார்களுடைய வழக்கு வந்ததும் பாண்டியன் அவர்களை நோக்கி, 'உங்கள் கொங்குநாட்டு மன்னனிடஞ் சென்று தீர்த்துக்கொள்ளுங்க'ளென்று கூறிவிட்டான். உடன் பிறந்தார்களும் அவ்வாறே ஆண்டான்பிள்ளையை அடைந்தனர். அவன் வில்லிபுத்தூராரைப் பார்த்து, 'முதலில் பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து இனிய பெரிய நூலாகப் பாடி முடித்தால் பிறகு வழக்கைத் தீர்த்துக்கொள்ளலாம்' என்றனன். வில்லிபுத்தூராரும் விரைந்து பாரதத்தைப் பாடி முடித்தார். அதன்

பின்னர் ஆண்டான்பிள்ளை பாரதத்தைத் தமிழில் பாடும் பொருட்டே தான் சூழ்ச்சிசெய்து செய்த ஏற்பாடுகளை யெல்லாம் கூறினன்.

பிறகு அவன் வில்லிபுத்தூராரை நோக்கி, 'நீவிர் என் எண்ணத்தை முடித்துத்தந்தீர் நான் செய்யவேண்டியதைக் கூறினல் அவ்வாறே செய்கிறேன்' என்ருன். அதற்கு வில்லிபுத்தூரார், என்னேடு சொற்போரில் தோல்வியுற்றவர்களின் காதுகளை நான் ஒட்ட அறுத்துவிடுதலுக்கு உடன்பாடு தருதல் வேண்டுமென்ருர். அரசனும் அவ்வாறே செய்க வென்ருன். அதுமுதல் வில்லிபுத்தூராரும் அரைகுறைப் புலவர்களின் காதுகளை அறுத்துவந்தார்.

வில்லிபுத்தூரார் பெருமித வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும்போது 'அநந்தன்' என்னும் புலவன் ஒருவன் வில்லிபுத்தூராரை யெதிர்த்துச் சொற்போர் செய்தான். அப்போரிலவன் தோல்வியடைந்தான். உடனே அவன் காதை யறுக்கத் தொடங்கிஞர் வில்லிபுத்தூரார். அவ்வளவில் அப்புலவன், 'அநந்தனுக்குக் (ஆதிசேடன்) காதில்லையென்பது உமக்குத் தெரியாதா? இப்போது நீவிர் என் காதை யறுத்தால் நான் உண்மையாகவே அநந்தனுகி விடுவேன்' என்ருன். வில்லிபுத்தூரார் அநந்தனுடைய சொன்னயத்திற்காக அவனுடைய காதை யறுக்காது விட்டார். வில்லிபுத்தூரார் பாரதம் தவிர வேறு நூல்கள் பாடியதாகத் தெரியவில்லை.

# எ. அதிவீரராம பாண்டியர்

“வெற்றி வேற்கை வீரராமன், கொற்கை யாளி குலசேகரன்” என்று நறுந்தொகை நூலின் முகப்பிற் காணப்பெறும் அதிவீரராம பாண்டியர், பாண்டிய அரச குலத்தில் தோன்றிய வர். கொற்கையில் இருந்து அரசாட்சி புரிந்தவர். (பிற்காலத்தில் தென்காசியிலும் இருந்து அரசு புரிந்தார் என்பது சிலருடைய முடிபு.) அவருடைய பெயர் ‘ **பிள்ளைப் பாண்டியன்** ’ எனவும், ‘ **குலசேகரன்** ’ எனவும் வழங்கி நின்றதாகவும் தெரிகிறது. அதி வீரராம பாண்டியருடைய தாய் தந்தையரைப் பற்றிய செய்திகள் எவையுஞ் சிறிதுந் தெரிய வில்லை. **வரதுங்கராம பாண்டியர்** என்னும் பெய ருடைய உடன் பிறந்தார் ஒருவர் இருந்தார் என் பது மட்டும் ஐயமறத் தெரிகிறது. காலத்தைப் பற்றியும் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். ஏறக்குறைய ஐந்நூறு யாண்டுகள் என்று ஒரு வாறு துணியலாம்.

அதிவீரராம பாண்டியரும் அவருடைய தமை யனாராகிய வரதுங்கராம பாண்டியரும் இளமைக் காலத்திலேதானே தமிழ் மொழியையும் வட மொழி யையும் நன்கு கற்றுத்தேறினர். இருவருக்கும் வடமொழியிலுள்ளதைத் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கும் ஆற்றல் உண்டு. இருவரும் பூவேந்தர் களாக விருந்ததுடன் பாவேந்தர்களாகவும் இருந்

தார்கள். புலவர்களைப் பல நாடுகளிலும் இருந்து வரவழைத்து அவர்களோடு அளவளாவி மகிழ்வார்கள். அரிய பாக்கள் பாடிவரும் புலவர்களுக்கு அதிவீரராமர் தகுந்த பரிசளித்து மேன்மைப் படுத்துவார். அதிவீரராமரின் பரிசு சிறந்ததாக விருக்கும். அரசரிடம் பரிசு பெறவேண்டுமென்பதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு நன்கு கல்வி பயிலாத சிலரும் அதிவீரராமர்மேல் பாக்கள் பாடிவரலானார்கள். அப்பாக்களிலுள்ள தவறுகள் அதிவீரராமருக்கு அதிக வருத்தத்தை உண்டாக்கின. அவ்வாறு தவறுகளுடன் தம்மீது பாக்கள் பாடிவருபவர்களைத் தமக்கருகில் அழைத்துத் தலையில், 'நறுக்'கென்று குட்டும் வழக்கத்தை மேற்கொண்டார். அரசர் குட்டும்போது அவர் கையில் அணிந்துள்ள மோதிரம் தலையில் தாக்குதலால் காயப்பட்டுக் குருதி வருதலும் உண்டு. அதனால்தான் அக்காலத்தில், 'குட்டுப் பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும்' என்று ஒரு மொழியும் எழுந்தது. அதிவீரராமர் குட்டுவதை யாரும் சிறுமையாகக் கொள்ளமாட்டார்கள். அரசர் கையாற் பெறுங் குட்டாகையால் அதனைப் பெருமையாகவே கொள்ளுவார்கள். மேலுங், 'குட்டுப்போடாத வித்தை அட்டுப்போட்டாலும் வரமாட்டாது' என்றுங் கூறுவார்கள். குட்டுப் பட்டவர்கள் மேன்மேலும் ஊக்கமாகப் படித்துத் தவறில்லாமல் பாட்டுப் பாடிக்கொண்டு செல்லும் போது அரிய பரிசுகள் உரியபடி கிடைக்கும்.

அதனால்தான், பிற்காலத்தில் 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை' என்று பாட்டும் எழுந்தது.

உடன்பிறந்தார்களாகிய இருவரும் தங்கள் அரசாட்சி வேலை போக மற்றைப் போதுகளில் எல்லாம் நூல்கள் இயற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாக விருந்தனர். ஒருவர் பாடியதை ஒருவருக்குக் காட்டித் திருத்தங்கள் முதலியன செய்து கொள்வார்கள். அதிவீரராமர் தம்முடைய ஒவ்வொரு நூலையும் தம்முடைய முன்னோரிடம் காட்டி அவர் மனநிறைவு கண்டே தாம் மனநிறைவு கொள்வார்.

அதிவீரராமர் இலிங்க புராணத்தை மொழி பெயர்த்துத் தம்முடைய உடன் பிறந்தாரிடங் காட்டினார். பாடல்களோ வெள்ளையாக இருப்பதை யும் பொருளோ சிறந்ததாக இருப்பதையுங்கண்ட வரதுங்கராமர், 'இது முத்துப்போல இருக்கிறது' என்றார். பின்னர்க் காசி காண்டத்தை மொழி பெயர்த்துக் காட்டினார். அது சிறிது கடின நடையாக அமைந்திருப்பதைக்கண்ட வரதுங்கராமர், வலிந்து பொருள் கொள்ளவேண்டும் என்பதைக் குறிப்பிக்க எண்ணி 'இது கரும்புபோல இருக்கிறது' என்றார். பின்னர்க் கூர்ம மகா புராணத்தைச் செவ்விய முறையில் மொழிபெயர்த்துக் காட்டினார். அந்நூலில் வழுக்கள் அதிகமின்றி இனிமையாக இருந்தபடியால், 'இதுபால்போல் இருக்கின்றது' என்றார். அதிவீரராமர்க்கு அப்போதுகூட மன நிறைவு உண்டாகவில்லை. பின்னர் வடமொழியி

விருந்து நைடதத்தைத் தமிழில் மொழி பெயர்த்து மிக வியக்கத்தக்க வண்ணம் பாடலானர். மன் மதோபாலம்பனப்படலம் வரை இனிது பாடி முடிந்தது. நூல் முடியும்வரைகூட அதிவீரராமர்க் குப் பொறுக்கவில்லை. நைடதத்தின் அமைப்பும் சொல்லழகும் பொருளழகும் அவரையே பெரிதுங் கவர்ந்தன. பாடி முடிந்த அளவுவரையிலும் எடுத் துச் சென்று உடன் பிறந்தாரிடங் காண்பித்தார்.

வரதுங்கராமர் நைடத நூலின் மாண்பைப் பார்த்து மகிழ்ந்தார். அவருக்கு மிக இரும்பூதுண் டானதுடன் வருத்தமுங் களிப்பும் ஒன்றாகவுண்டா யின. அவர் தம் இளவலைப்பார்த்து, 'பொற் கலத்தில் வைத்தற்குரிய அமுதத்தை மட்கலத்தில் வைத்தாற்போல இருக்கின்றது நின்செய்கை. இவ்வளவு அருமையும் பெருமையுஞ் செறிந்த பாவினை இறைவன் செய்திகூறும் நூல்களில் அமைக்காது நம்மையொத்த அரசர்களில் ஒருவ னுடைய கதையில் அமைத்தாயே இது தக்கதாமா? இவ்வரிய பாடல்களை இறைவன் மேலதாக்கும் பேறு நினக்குக் கிடைக்காது போயிற்றே' என்று கூறிவருந்தினர். அதன் பின்னர் நைடத நூலைப் பாடுவதற்கு அதிவீரராமர்க்கு மனக்கிளர்ச்சி மிகுந் தெழவில்லை. நூலை முடிக்க வேண்டியதற்காக ஒரு வாறு பாடி முடித்தார்.

நைடதத்தின் அருமையும் பெருமையும், 'நைடதம் புலவர்க் கௌடதம்' என வழங்கும் ஒரு மொழியால் நன்கு பெறப்படும். நைடத நூலின்

சிறப்புப் புலவர்கள் பலராலும் நன்கு எடுத்துப் பாராட்டப் பெற்றிருக்கின்றது.

நைடத நூலை அரங்கேற்றஞ் செய்யத் தொடங்கிய காலையில் ஓர் அறிஞர் எழுந்து, 'நீவிர் அவையடக்கம் கூறாமைக்குக் காரணம் யாது?' என்று ஒரு தடையை நிகழ்த்தினர். அத்தடைக்கு அதிவீரராமனார், நாம், 'கவியரசாக இருப்பதன்றிப் புவியரசாக இருத்தலானும், நம்மைக்கண்ட வளவிலேயே அவை அடக்கம் பெறுமாகலானும், அவையடக்க இலக்கணங்கூறிய தொல்காப்பியனாரே அவையடக்கங் கூறாமையானும், நாம் அவையடக்கம் கூறுதலைச் செய்யாது விட்டோம் என்று விடை கூறினர். அவ்விடையைக் கேட்ட அறிஞர் அவையில் அடக்கமாகி விட்டார்.

வாயுசங்கிதை நூலைச்செய்து அதனை வரதுங்கராமர்க்குக் காட்டிய காலை அவர் மிக மகிழ்ச்சியுற்றார். போக முனிவருடைய கொக்கோக நூலை மொழிபெயர்த்து அதனைத் தமது மூத்தோன் பெயரால் வழங்கச்செய்தார். பழவினைப்பயனால் பல கொடிய பிணிகள் அதிவீரராமரை அதிகக் கடுமையாகப்பற்றின. அதனால் மிகுந்த தொல்லையையடைந்த அதிவீரராமர் திருக்கருவை என்னும் திருப்பதியை அடைந்து அப்பதியில் எழுந்தருளிய இறைவனைப்போற்றி வழிபட்டுக்கொண்டு தங்கியிருந்தார். அந்நாளில் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, வெண்பாவந்தாதி, கட்டளையந்தாதி

ஆகியவைகளையும் அப் பதி யிறைவன்மேல் பாடினர்.

அதிவீரராமர் அக் காலத்தில் வழங்கிய சில பழமொழிகளை ஒன்று சேர்த்து, அவற்றோடு தாமும் புதிதாகச் சில மொழிகளை அமைத்து இரண்டையும் ஒன்று சேர்த்து 'நறுந்தொகை' யென்னும் பெயருடன் ஒரு சிறிய நூலாகச் செய்தார். அச் சிறுநூல் அளவிற் சிறிதாயினும் பொருளில் மிகப்பெரிதாய் அமைந்து விளங்குகின்றது. அந் நூல் பள்ளிச் சிறுவர்கட்கு இளமையிலேயே போதிக்கத்தக்க மாண்புடைத்தாகையால் அவ்வாறே செய்யப்பெறுகிறது.

அதிவீரராம பாண்டியரையும், அவருடைய உடன் பிறந்தாராகிய வரதுங்க ராம பாண்டியரையும்போல அவர்களுடைய மனைவிமார்களும் கல்வியறிவிற் சிறந்தவர்களாக விருந்தார்கள். நைடதம் அரங்கேற்ற காலத்தில் ஒரு புலவர் நிகழ்த்திய தடைக்கு அதிவீரராமரின் மனைவியாரே விடை கூறித் தடையைப் போக்கினர்.

அதிவீரராம பாண்டியார் ஒரு குறுநில மன்னராக இருந்திருத்தல் கூடும் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனல் நைடதத்திலுள்ள,

நிலவுபொழி தனிக்கவிகை நிடதர்கோன் புகழ்ச் சரிதம்
நெடுநீர் வைப்பில்
புலவர்களி யமிழ்தொழுகு பதுமொழிகூட் டுணத்தமிழாற்
புனைதல் செய்தான்

வலனுயர்த்த வண்ணலஞ்சேல் வான்தொடுபொற்
கோட்டிமய வரையில் தீட்டி
அலர்தலைமா நிலம்புரக்கும் அதிவீர ராமனிகல்
அரச ரேறே

என்னுஞ் சிறப்புப்பாயிரச் செய்யுளை நோக்குமிடத்து, அதிவீரராமர் அந்நாளில் இந்தியநாடு முழுவதினுஞ் சீர்த்திபெற்ற பேரரசராக விளங்கினாரென்றே எண்ண வேண்டியதாக விருக்கின்றது.

அதிவீரராம பாண்டியர் கொற்கையிலும், வரதுங்கராம பாண்டியர் தென்காசியிலும் அரசியற்றிக் கொண்டிருந்தனரென்றும், அதிவீரராமர், தாம் இயற்றிய நைடதத்திற்குக் குற்றங் கூறிய வரதுங்கராமரைப் போர்செய்து தோற்கடிப்பதற்காகப் படைகளைத் திரட்டிக்கொண்டு சென்றார் எனவும், இளவலின் போர்க்கோலத்தைக் கண்ட வரதுங்கராமர்,

செஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிருந்த மேதினியை ஆண்ட
*பரதனையும் ராமனையும் பார்

என்று ஒரு செய்யுளை எழுதியனுப்பினர் எனவும் கதை வழங்குகின்றது. அதிவீரராமரின் நூல்களுக்கு வரதுங்கராம பாண்டியர் மனைவியார் தாம்

---

* அதிவீரராமர் பத்மினிச் சாதியாகிய ஒரு சக்கிலியப்பெண்ணை மணஞ்செய்ய முயன்றதாகவும், அக்காலை வரதுங்கராமர் தடை செய்ததாகவும், அத்தடையைப் பொறாத அதிவீரராமர் தம் முன்னோனைக் கொல்ல முயன்றதாகவும் அக்காலை இச்செய்யுள் பாடப்பட்டதாகவுந் தனிப்பாடல் திரட்டிற் காணப்பெறுகிறது.

குற்றங்கள் கூறிக்கொண்டிருந்தவர் என்றும் கூறுப.

கூர்மபுராணம், இலிங்கபுராணம், காசி காண்டம், வாயுசங்கிதை, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறையந்தாதி, வெண்பாவந்தாதி, நறுந்தொகை என்னும் வெற்றி வேற்கை, நைடதம், கொக்கோகம் முதலிய நூல்கள் அதிவீரராம பாண்டியராற் செய்யப்பட்டனவாயினும் இவற்றுட் சில வரதுங்கராம பாண்டியர் பெயராலும் வழங்குகின்றன. வெற்றி வேற்கையின் பெற்றியை உணர்ந்த 'டைலர்' என்னும் ஆங்கிலேயர் அதனை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்திருக்கின்றார்.

அதிவீரராம பாண்டியர் ஓர் அரசராக விருந்தும் பல அலுவல்களுக்கிடையே பல நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாடிச் செந்தமிழ் ஆட்சியும் புரிந்தது வியப்பினும் வியப்பாகும். காசி காண்டம் என்னும் கவின்மிகு நூல் அளப்பதற்கரிய சிறப்புடையது. அதிவீரராமர் வரலாற்றைப் பற்றி வேறு சில கதைகள் வழங்குகின்றனவாயினும் அவை, வேறு பலருடைய வரலாற்றோடு தொடர்பு பட்டுப் பொருத்த முடைமையை இழந்து நிற்கின்றன.

# அ. இரட்டைப் புலவர்கள்

ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னே சோழவள நாட்டில் ஆமிலந்துறை என்னும் ஊரில் செங்குந்தர் மரபில் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களுடைய பெயர் முதுசூரியர், இளஞ் சூரியர் என்று பிள்ளைக்காலத்தில் வழங்கியது. அவர் களில் முதுசூரியர் முடவர். இளஞ்சூரியர் குருடர். அவர்கள் உடன் பிறந்தவர்களல்லர். அம்மான் பிள்ளையும் அத்தை பிள்ளையுமாவர். அவர்களுக் குள் இளமைக் காலத்திலேயே மிகுந்த நட்புண்டா கியது. விளையாட்டுக் காலத்தில்தானே இருவரும் இணைபிரியாது விளையாடினர். குருடர் முடவரைத் தோளில் தூக்கிக்கொள்ள முடவர் வழிகூறிச் செல்வர். இருவரும் பல விடங்களுக்குஞ் சென்று விளையாடுவர். பின்னர் அகவை ஏறிய காலத்தி லும் இருவரும் ஒன்றாகவே கல்வி கற்கத் தொடங் கினர். எழுத்துக்களைப் பார்த்து முடவர் படிப் பார். குருடர் அதனை நன்கு கேட்டு உள்ளத்தில் பதித்துக்கொள்வர். இவ்வாறே இருவரும் பல நூல்களையும் பயின்று அறிவிற் சிறந்த புலவர் களும் ஆயினர். எங்குச் செல்லினும் என்ன காரி யம் செய்ய நேரினும் இருவரும் இணையாகவே இருப்பர். இவர்களுடைய இளங்காலப் பெயராகிய முதுசூரியர் இளஞ்சூரியர் என்னும் பெயர் நாளடை வில் மறைந்து இரட்டைப் புலவர்கள் என்னும் பெய ருண்டாயிற்று.

புலவர்களானபின் இருவரும் பல விடங்கட்குஞ் சென்று கொடைநலமுடைய செல்வர்களைப் புகழ்ந்துபாடி அவர்கள் அளிக்கும் பரிசிலைப் பெற்று வாழ்க்கை நடத்தலாயினர். அவர்களிருவரிடமும் கடவுளருளால் வாக்கு வன்மை நன்குண்டாகியது. ஒரு பொருளைக்குறித்து முடவர் முன்னே இரண்டு அடிகள் பாடுவர். குருடர் முடவர் பாடியதன் பொருளை உய்த்துணர்ந்து மற்றும் இரண்டு அடிகளைப்பாடி முடிப்பர். இருவரும் இறைவன் மாட்டுப் பேரன்புடையவர்கள். அறிஞராயினர். 'கற்றதனு லாயபயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்' என்னும் பொய்யா மொழியாரின் மறை வாக்கிற் கேற்ப எவ்வாறு சிவத்திருப்பதிகடோறும் சென்று இறைவனை வழிபட்டுக்கொண்டு திரிந்தனரோ அவ்வாறே இரட்டையரும் சிவத்திருப்பதிகள் தோறுஞ் சென்று இறைவனை வணங்கிக்கொண்டு திரியலாயினர்.

உறுப்புக் குறைவுள்ளவரும் கண்ணற்றவரும் கல்வி கற்பதே அருமை. கல்வி கற்பினும் பாவாணராம்படி மிகுதியாகக் கற்றல் அருமையினும் அருமை. அவ்வாறு கற்பினும் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய பாக்களைப் பாடுவது மேலும் அருமை. இரட்டையரிடமோ இவைகளெல்லாம் இனிது அமைந்திருந்தன. இரட்டையர்கள் அறிவு மிகுதியும் செறியப் பெற்றவர்களாகவும் இறைவழி பாட்டால் அருளலம் அமையப்

பெற்றவர்களாகவும் இருந்தபடியால் அவர்களுடைய வாக்கில் அருட்டன்மையும் மேன்மையும் அமைந்திருந்தது. ஆகவே அவர்கட்குத் தெய்வப் புலவர்கள் என்றும் ஒரு பெயர் வழங்கியது.

இப் புலவர்கள் சிவத்திருப்பதிகட்குச் சென்று இறைவனை வணங்கி வழிபாடு செய்துகொண்டு திரியுங்கால் திருத்தில்லையை யடைந்தனர். இறைவனைப் போற்றித் திருக்கோயிலை வலம் வந்தனர். அப்போது ஒரு செல்வன் அங்கு பெருமிதத்தோடு அமர்ந்திருந்தான். புலவர் பெருமக்களாயினோர் சிவப்பதிகட்குச் செல்லுங்காலையில் எதனையும் கையில்கொண்டு சென்றதில்லை. அவ்வவ் விடங்களிலுள்ளாரிடமே உதவிபெற்றுச் சென்றனர். அவ்வாறே வந்திருந்த இரட்டைப் புலவர்களும் முற்கூறிய செல்வனைக் கண்டு, ஏதேனும் பொருளுதவி பெறலாமென்னும் எண்ணத்துடன் அரிய புகழ்ப்பா ஒன்றினைப் பாடினர். அச் செல்வனோ ஒரு முழுமகன். நாச்சுவையைத்தான் நன்கு நுகர்வானேயன்றிப் பாச்சுவையைச் சிறிதும் பருக வறியான். இப்புலவர்களின் தோற்றத்தைக் கண்டு நொண்டியுங் குருடும் வந்து ஐயமிடச் சொல்லித் தொல்லை செய்கின்றனவென்று எண்ணினன். 'ஒன்றுந் தரமுடியாது ஓடுங்கள் அப்பால்' என்று அதட்டினன். புலவர்களிருவர் மனமும் அந்தோ இக்கீழ்மகனிடம் நமது அரும்பாவைப் பாடினேமே என்று வருந்தியது. உடனே ஒருவர்,

"மூடர்முன்னே பாடல் மொழிந்தால் அறிவரோ
ஆடெடுத்த [1] தென்புலியூர் அம்பலவா —

என்று அரைப் பாட்டைப் பாடினர். மற்றவர்

— [2] ஆடகப்பூஞ்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனானல்,"

என்று மறுபாதியையும் பாடினர். பாடலைக்கேட்ட செல்வன் நாணிச்சென்றான். அருகிலிருந்தோர் புலவர்களின் பெருமையை உணர்ந்து நன்கு அவர்களைப் போற்றிச் சென்றனர். இரட்டைப் புலவர்கள் சிலநாள் தில்லையில் தங்கிக் கூத்தப்பிரானைப் போற்றிக்கொண்டிருந்தனர். அப்போது தில்லைக் கலம்பகம் என்னும் அரிய நூலொன்றையும் பாடினர். அந்நூல் எல்லா நலங்களும் செறிந்தது.

தெம்புலியூர் அம்பலவர் தில்லைச் சிதம்பரத்தே
வெம்புலியோன் [3] றெந்நாளும் மேவுங்காண் அம்மானை
வெம்புலியோன் றெந்நாளும் மேவுமே யாமாகில்
அம்பலத்தை விட்டே அகலாதோ அம்மானை
[4] ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ அம்மானை

பின்னர் இரட்டைப் புலவர்கள் திருவாமாத்தூர் என்னுந் திருப்பதிக்குச் சென்றனர். அங்கெழுந்தருளியுள்ள இறைவன்மீதும் ஒரு கலம்பகம் பாடினர். அஃது அவ்விடத்தில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. அக்கலம்பகத்தில்,

---

1. ஆடுஎடுத்த-கூத்தாடுதலை மேற்கொண்ட. 2. ஆடகம்-பொன். செந்திரு-திருமகள். அணங்கு-பெண். அந்தகன்-குருடன்.
3. வெம்புலி-வியாக்கிரபாதர். 4. ஆடு-ஆட்டு, கூத்து.

*ஆற்குழையோ அரவோ ஆயர்பாடி அருமனையோ
பாற்கடலோ திங்களோ தங்குமாவம் பலபலவாம்
மார்க்கமும் ஆகிநின்றார் மாதைநாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கண்டார் புரஞ்சீறிய வெங்கணைக்கே

என்னும் பாட்டைப்படித்து அரங்கேற்றஞ் செய்த போது அங்கிருந்தவர்களில் ஒருவர் கோயில் கீழ்க் கரையில் இருக்க மேல்கரை என்றது என்னை? என்று ஓர் ஐயத்தை நிகழ்த்தினர். இரட்டைப் புலவர்கள் இன்று போய் நாளை மீண்டும் அரங் கேற்றத்தைத் தொடருவோம் என்றுகூறி நிறுத்தி விட்டுத் தாங்கள் தங்கியிருக்கு மிடத்திற்குச் சென்று விட்டனர். அன்றிரவு பெருமழை பொழி யலாயிற்று. பம்பையாறு கரை புரண்டோடத் தொடங்கியது. ஆறு தென்பாலோடி நெறிமாறி வடபால் மீண்டது. இவ்வியத்தகு நிகழ்ச்சியைக் கண்ட ஊரார் ஓடிச்சென்று புலவர்களிடஞ் சொல்லினர். மறுநாள் மீண்டும் அரங்கேற்றம் தொடங்கியது. முதல்நாள் ஐயம் நிகழ்த்தியவர் இரட்டையரின் பெருமையைப் போற்றிப் புகழ்ந் தார். சில நாட்களில் அரங்கேற்றம் இனிது முடிவு பெற்றது. ஊரினர் புலவர்கட்குத் தக்க பரிசில் அளித்துப்போற்றினர். இவர்கள் பாடிய கலம் பகங்களிரண்டும் அருமையும் பெருமையும் அமைந் திருந்தபடியால், பிற்காலத்தறிஞர் ஒருவர், பண் பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் என்று வியந் தோதினர்.

*குழை-தழை. ஆவம்-அம்புக்கூடு. மாதை-திருவாமாத்தூர்.

பின்னர்ப் புலவர்கள் வழக்கப்படி வழிநடந்து மற்றோரூருக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். இவர்கள் சென்றுகொண்டிருந்த வழியில் ஒரு வேளாளன் திருமணமான தன்னுடைய மகளை மருமகன் வீட்டிற்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்தான். அவன் தன் மகள்மீதுகொண்ட அன்பினாலும், இனி அவளை அடிக்கடி கண்டுகளிக்க முடியாதே என்னும் கவலையாலும் ஆற்றாமையோடு அணைத்துச் சென்றான். அக் காட்சியைக்கண்ட முடவர்,

மாங்காட்டு வேளான் மகளை மருமகன்பால்
போங்காட்டி லின்பம் புணர்ந்தானே......

என்று பாடினார். உடனே மற்றவர் செய்தி யின்னதென்று யூகித் துணர்ந்துகொண்டு,

..............ஆங்காணும்
மக்கண்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

என்று மறுபாதியையும் பாடினார்.

ஒருநாள் புலவர்கள் நெடுவழி நடந்து கடந்து ஆங்கூர் என்னும் ஊரை யடைந்தனர். அப்போது நண்பகல். அவ் வூர்க்கோயிலில் வழிபாடு நடந்துகொண்டிருந்தது. இருவரும் அங்குச் சென்றனர். அப் பதியில் கோயிற் பணியாளர்கள் இறைவனையே வஞ்சித்துக் கபடக் கூத்தாடிக் கொண்டிருந்தனர். வழிபாட்டிற்கு அரிசியைப்போட்டு அடிசில் ஆக்கி இறைவனுக்குப் படைக்காமல், அரிசியை மடைப் பள்ளியாளரும் வழிபாட்டாளரும் தங்களுக்குள்

பங்குபோட்டு எடுத்துக்கொள்வர். இரண்டொரு செங்கல்லை நன்கு சுடவைப்பர். அவற்றின்மீது ஒரு துணியை நனைத்துப் பிழிந்துபோட்டு மூடித் தூக்கிக்கொண்டு செல்வர். சூடான கல்லின்மீது ஈரத்துணி பட்டதும் ஆவி கிளம்பும். இறைவனைத் தொழுதுகொண்டிருக்கும் அன்பர்கள் அடிசிலென்று எண்ணிக்கொள்வர். இரட்டைப் புலவர்கள் சென்றவன்றும் இத்தகைய மோசடி நடந்துகொண்டிருந்தது. புலவர்களிருவரையும் பசியோ பிடுங்கித்தின்றது. குருடர் கோயிற் சோறு கிடைக்காதா என்னும் எண்ணத்துடன்,

தேங்குபுக ழாங்கூர்ச் சிவனே!யல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ ......

என்று பாடினர். முடவரோ வழிபாடு நடந்துகொண்டிருந்தபோது தட்டிற் சோறில்லை யென்பதைத் துணியைச் சிறிது விலக்கிக்காட்டியபோது பார்த்துவிட்டார்; எனவே அவர்,

.........போங்காணும்
கூறுசங்கு தோன்முரசு கொட்டோசை யல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்

என்று பாடினர். இப்பாடல் பாடப்பெற்ற சில நாட்களுக்குள் கோயிற் பெருச்சாளிகளின் மோசச் செய்கை அனைவருக்குந் தெரியவந்தது. மோசக்காரர்கள் ஒறுக்கப்பட்டனர்.

இரட்டைப் புலவர்கள் காஞ்சி நகரடைந்து அங்குச் சிலநாள் தங்கியிருந்தனர். ஏகாம்பர நாதர்

மீது ஓர் உலாப்பாடி அதனை அரங்கேற்றஞ் செய்யத் தொடங்கினர். அந்நூலின் காப்புச் செய்யுளாகிய,

> சாற்றிய ஆயிரக்கால் மண்டபத்தின் சார்பாக
> ஏற்ற முடனே யினிதிருந்து—போற்றும்
> விறல்விகட சக்ர விநாயகனை ஏத்தும்
> திறல்விகட சக்ரா யுதம்

என்பதனைச் சொல்லிப் பொருள் விரிக்கத் தொடங்கியவுடன் அங்கிருந்த சிலர், பாட்டிற் கூறிய ஆயிரக்கால் மண்டபமும் விகட சக்ர விநாயகரும் இங்கில்லையே என்று கூறினர். அதற்குப் புலவர்கள், யாமும் அறியோம். அவளும் பொய் சொல்லாள், இவை வெளிப்பட்ட பின்னர் உலாவை அரங்கேற்றுவோம் என்று கூறி வேறிடஞ் சென்றனர். சில நாட்கள் சென்றன. ஒரு வேள்வி செய்தற்பொருட்டுக் காஞ்சி மன்னன் ஒரு மண்மேட்டை வெட்டிச் சமப்படுத்தத் தொடங்கினன். ஆயிரக்கால் மண்டபமும் விகட சக்கர விநாயகர் உருவமும் வெளிப்பட்டன. இக்காட்சியைக்கண்ட காஞ்சி நகரத்தார் இரட்டையர்களைத் தேடிச்சென்று கண்டுபிடித்து, 'ஆயிரக்கால் மண்டபமும் விகட சக்கர விநாயகர் உருவமும் வெளிப்பட்டு விட்டன. நீங்கள் திரும்பிவந்து உலாவை அரங்கேற்றுதல் செய்யுங்கள் என்று கூறி அழைத்தனர். புலவர்களும் திரும்பிச்சென்று உலாவை அரங்கேற்றஞ்செய்து தங்கள் வாக்கை

மெய்ப்பித்தனர். காஞ்சி நகரத்தாரும் புலவர்களைப் போற்றிப் பெருஞ்சிறப்புச் செய்தனர்.

இரட்டைப் புலவர்கள் காவித்தண்டலம் என்னும் ஊரையடைந்தனர். அவ்வூரில் ஓமளநாதன் என்று பெயருடைய ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் பெருஞ் செல்வன். புலவர்கள் அவனைக்கண்டு புகழ்ந்துபாடிப் பரிசில் கேட்டனர். அம் மூடமகனோ இவர்களை இகழ்ந்து 'ஒன்றுமில்லை போங்க'ளென்று விரட்டினான். அவனுடைய பக்கத்து வீட்டுக்காரனும் ஓமளநாதனோடு சேர்ந்து கொண்டு புலவர்களை இகழ்ந்து விரட்டினான். அவ்வளவில் ஒரு புலவர் மனம் நொந்து,

ஒருகாவித் தண்டலம்வாழ் ஓமளநா தன்வீ(டு)
இருகாலும் பற்றி யெரிக—

என்று பாடினார். உடனே மற்றவரும்,

—அருகாரும்
கம்பத்தான் வீடுங் கலந்தெரிக மற்றிவர்கள்
சம்பத்தெல் லாமொழியத் தான்

என்று கனன்று பாடினார். அவ்வளவில் இருவீடும் பற்றிக்கொண்டு உயிரழிவில்லாமல் தீக்கிரையாயின. ஊரார்கள் ஊர் முழுவதற்கும் இக்கேடு வராமல் இவ்வளவோடு போயிற்றே என்று மகிழ்ந்து புலவர்களைப்போற்றி வேண்டுவன கொடுத்து அனுப்பினார்.

இரட்டைப் புலவர்கள் திருவண்ணாமலைக்குச் சென்றனர். அப்போது அங்குச் சம்பந்தாண்டான்

என்பவன் பெருமிதத்தோடு வாழ்ந்திருந்தான். அவனைப் பார்க்கக் கருதிய புலவர்கள் அவனிருப்பிடத்திற்குச் சென்றனர். புலவர்கள் சென்ற சமயம் நாவிதன் சம்பந்தாண்டானுக்கு மயிர் கழித்துக்கொண்டிருந்தான். சம்பந்தாண்டான் புலவர்களைப் போற்றவில்லை. அவர்களுடைய பெருமையை அறியவும் இல்லை. அவன் தன்னையே பெரியனாக எண்ணி இறுமாந்திருந்தான். அவன் புலவர்களை நோக்கி, 'என்மீது மன் என்று எடுத்து மலுக்கு என்று முடிய ஒரு பாட்டுப் பாடுங்கள்' பார்க்கலாம் என்றான். அவனுடைய திமிரைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்த புலவர்களில் ஒருவர்,

மன்னுதிரு வண்ணா மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னுந் தலைச்சவரம் பண்ணுவதேன்—

என்று பாட, உடனே மற்றவர்,

—மின்னின்
இளைத்த இடைமாதர் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு

என்று பாடினார். இப்பாட்டைக்கேட்ட சம்பந்தாண்டான் தன் வாயாலேயே தான் கெட்ட இழிதகைமையை எண்ணிப் பெரிதும் நாணினான்.

பின் புலவர்கள் பல திருப்பதிகளையும் வழிபட்டுக்கொண்டு மதுரையம்பதியை அடைந்தனர். பொற்றாமரைக்குச் சென்று அதில் நீராடினர். முடவர் கரையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

குருடர் நீரில் இறங்கித் துணியைத் துவைத்துக் கொண்டிருந்தார். துணி கையைவிட்டு அப்பால் நழுவி நீரில் அமிழ்ந்துவிட்டது. குருடர் அதனைத் தேடித்தேடி வருந்தினர். கரையிலிருந்த முடவர் குருடரை நோக்கி,

[1] அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினல் நம்மையது தப்பாதோ—

என்று பாடி நகைத்தார். குருடர் உடனே,

—அப்படியே
ஆனலுங் கந்தை அதினுமோர் ஆயிரங்கண்
போனல் துயர்போச்சுப் போ—

என்று விடையளித்தார். மீண்டும் முடவர்,

கண்ணு யிரமுடைய கந்தையே ஆனலும்
தண்ணீர் குளிரையுடன் தாங்காதோ—

என்று மீண்டும் பாடினர். குருடர்,

—எண்ணுதீர்
இக் [2] **கலிங்கம்** போனலென் ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்க முண்டே துணை

என்று பாடினர். அவ்வளவில் அவ்வாடை மேலெழுந்து புலவர் கையில் சிக்கியது. பின்னிருவரும் ஆலவா யண்ணலைப் போற்றிக்கொண்டு ஆங்குச் சிலநாள் தங்கியிருந்தனர். ஒருநாள் பாண்டியன் அவைக்குச்சென்று அவனைப்புகழ்ந்து பாடினர். அப்போது பாண்டியனுடைய இளவலும் அவையில் அமர்ந்திருந்தான். பாண்டியன் இரட்

1. அப்பு-நீர் 2. கலிங்கம்-உடை.

டைப் புலவர்களைப்பற்றி முன்னரே நன்கு கேள்விப்பட்டிருந்தபடியால் தகுந்தபடி போற்றியதுடன் மிகுந்த பரிசும் அளிக்கத் தொடங்கினான். முடவரும் குருடருமாக உள்ள அப்புலவர்களுக்குப் பாண்டியன் செய்யும் சிறப்புக்கள் பொறாமையை உண்டாக்கிற்று ஓரமைச்சனுக்கு. அவன் பரிசிலளிக்க வேண்டாமென்று தடை செய்தான். அவ்வளவில் புலவர்களில் ஒருவர் வெகுண்டு,

[1]புராதன மான தமிழ்ப்புல வீரிந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென்—

என்று பாடினார். மற்றவர்,

—ஞவைகை கேட்டிலையோ
[2]தராதலம் வென்ற தமிழ்மா றனையுந்தன் தம்பியையும்
இராகவ னென்றும் இலக்குவ னென்றும் இருந்ததுவே

என்று பாடி முடித்தார். அமைச்சன் முகங்குன்றிக் கொட்ட மடங்கினான். புலவர்கள் பரிசைப் பெற்றுக்கொண்டு சென்றனர்.

சில நாட்கள் சென்றபின் அவர்கள் வேறோரூரை யடைந்தனர். அவ்வூரில் திருவேங்கடன் என்னும் ஒருவன், அறிவும் திருவும் செறியப் பெற்றவனாகி அறிஞர் திறமறிந்து போற்றுபவனாக விருந்தான். இரட்டைப் புலவர்கள் அவனைச் சென்று கண்டு புகழ்ந்து பாடினார். அவன் இவர்களுக்குப் பெரும்பொரு ளளிக்கத் தொடங்கினான். திருவேங்கடத் துடன் பிறந்தான் கண்ணனாங்கினி

---

1 புராதனம்-பழமை. 2 தராதலம்-நிலம்.

யான் என்பவனும் அங்கிருந்தான். அவ்வளவு பொருள் கொடுக்க வேண்டியதில்லை; சிறிது கொடுத்தாற் போதுமென்று தடை செய்தான். அவன் தடை செய்தவுடன் ஒரு புலவர்,

தேன் பொழியும் வாயான் திருவேங் கடத்துடனே
ஏன் பிறந்தான் கண்ணுக் கினியானே—

என்றார். அவ்வளவில் மற்றவர்,

—வான் சிறந்த
சீதேவி யார்பிறந்த செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி என் பிறந்தாள் முன்.

என்று பாடலை முடித்தார். கண்ணுக்கினியான் காதுக்கினியவற்றைக் கூறாமையின் இவ்வாறு இகழப்பட்டு நாணித் தலைகுனிய வேண்டியவனானான்.

புலவர்கள் வழிப்பயணஞ் செய்கையில், ஓரிடத்தில் ஒரு பிள்ளையார் கோவிலும் குளமும் இருந்தன. புலவர்கள் தமது மூட்டையைப் பிள்ளையாருக்கு முன்னால் வைத்துவிட்டுக் குளத்தில் நீராடிக் கரையேறினார். அவர்கள் மூட்டைவைத்த இடத்திற்கு எவரும் வந்திலர். மூட்டை அவிழ்ந்திருந்ததன்றிச் சில பொருள்களும் மறைந்திருந்தன. உடனே முடவர் இது பிள்ளையாருடைய வேலையேயென்று எண்ணி,

[1] தம்பியோ பெண்திருடி தாயா ருடன்பிறந்த
வம்பனோ நெய்திருடும் மாமாயன்—

என்றார் குருடர்.

---

1 தம்பி-முருகன். வம்பன்-கண்ணன். அம்புவி-உலகம்.

—அம்பலியில்

மூத்தபிள்ளை யாரே முடிச்சவிழ்த்தீர் போமோ நுங்
கோத்திரத்திற் குள்ள குணம்

என்று பாட்டை முடித்தார். மூட்டை முன்னினும் பெரிதாகவும் பழைய பொருள்களேயன்றிப் புதிய பொருள்கள் சிலவும் மூட்டையில் காணப்பட்டன. இருவரும் பிள்ளையாரைப் போற்றி வழிச்சென்றனர்.

இவ்வாறு பரிசில் வாழ்க்கையைத் தமது வாழ்க்கையாகக்கொண்ட இரட்டைப் புலவர்கள் பல சிவப்பதிகளிலும் எழுந்தருளிய இறைவனைப் போற்றிப் பலநாள் உலகில் வாழ்ந்து பின்னர்ப் புகழுடலை நிறுத்திப் பூதவுடலை மறைத்தனர்.

## கூ. காளமேகப் புலவர்

'வசைபாடக் காளமேகம்' என்று இசை மிகப் பெற்ற காளமேகப் புலவர் திருக்குடந்தைக் கருகிலுள்ள நந்திக்கிராமத்தில் பிறந்தார். குலம் பார்ப்பன வகுப்பில் வடமப்பிரிவாகும். இவர் குடந்தையினின்றும் வெளிப்பட்டுத் திருவரங்கத்தையடைந்து, அங்குள்ள பெருமாள் கோயிலில் அட்டில் தொழிலில் ஈடுபட்டிருந்தார். இவருடைய பிள்ளைப்பெயர் வரதர் என்பர். அக்காலை திருவானைக்காக் கோவிற் கணிகையொருத்தி அழகு ஆடல் பாடல் முதலியவைகளிலே சிறந்து விளங்கினள். அவளுடைய பெயர் மோகனாங்கி. மோக

ஞங்கியின் ஆடல் பாடல்களும் அழகும் காள மேகத்தைக் கவர்ந்தன. பெருமாள் கோயில் திருவமுது முதலியவைகளை மேற்படி கணிகைக்குக் கொண்டுபோய்க்கொடுத்து அவளுடைய கடைக் கண் பார்வையைப் பெற்றுக்களித்திருந்தார்.

சில காரணங்களை முன்னிட்டு மோகனங்கி காளமேகத்தைச் சைவப் பார்ப்பனனாகித் திருவானைக்காக் கோவிலுக்கே வந்துவிடுமாறு செய்தாள். காளமேகமும் கணிகை கட்டளைப்படியே சைவப்பார்ப்பனனாகித் திருவானைக்காக் கோவிலில் மடைப்பள்ளித் தொழில் செய்துகொண்டிருந்தார்.

அக்காலத்தில் ஒரு சிவப்பார்ப்பனன், தனக்கு எல்லாக் கலைகளும் இனிது அமையவேண்டுமென்று, இறைவியின் சக்கரம் ஏற்படுத்திக் கோயிலில் கடுமையான வழிபாடுகள் செய்துகொண்டிருந்தான். ஒருநாள் நள்ளிரவில் இறைவியானவள் ஒரு சிறு பெண்போல் கோலம்கொண்டு அப்பார்ப்பனன் முன்பு தோன்றினள். அவளுடைய வாய்நிறையப் பாக்கு வெற்றிலை இருந்தது. அவள் அப்பார்ப்பனனைப் பார்த்து, 'உன் வாயைத் திற' வென்று கூறிப் பாக்கு வெற்றிலையை அவன் வாயில் உமிழப்போனாள். அப்பார்ப்பனன் நல்வினை முழுதும் நிரம்பப் பெறாதிருந்தபடியால் இறைவியின் அருள் எட்டவில்லை. அவன் தன் வாயில் பாக்கு வெற்றிலையை உமிழவந்த இறைவியை நோக்கி, 'நீ யாரடி? என் வாயில் எச்சிலைத்

துப்ப வருகின்றாய்?' என்று மிடுக்காக அதட்டினான். அவ்வளவில் இறைவி அவனைவிட்டு அப்பாற் செல்கையில் வழியில் மடைப்பள்ளித் தொழில் புரியும் காளமேகம் படுத்திருத்தலைக்கண்டு அவரிடம் சென்று அவர் வாயைத் திறக்கச்சொல்லி வாயிலே உமிழ்ந்தாள். அவர் மோகனாங்கியென்றே நினைத்து இறைவியின் அருட்பொருளை மகிழ்ச்சியாக வுண்டுவிட்டார். அவர் மடைப்பள்ளிக் காரியங்கள் முடிந்த பிறகு மோகனாங்கி பள்ளியறைக் காரியங்கள் முடிந்து வருவாள். அவளுடன் இல்லத்திற்கேகலாமென்று எண்ணிப் படுத்திருந்தார். மோகனாங்கியோ காளமேகத்தைத் தேடிப்பார்த்து விட்டுச் சென்றுவிட்டாள். திருக்கோயிலோ திருக்காப்பிடப்பட்டுவிட்டது. வெளியேற வகையறியாது அங்கு ஏங்கிப்படுத்திருந்த மடைத்தொழிலாளருக்கு இவ்வாறு இறைவியின் அருட்பேறு கிடைத்தது.

இறைவியின் அருட்பொருளையுண்ட காளமேகத்திற்கு யாதுங் கல்லாமலே எல்லாக்கலைகளும் இனிது விளங்கின. கடல்மடை திறந்தாற்போலப் பாடல்கள் திருவாயினின்றும் வெளிப்பட்டன. அக்கணம் முதல் அவருடைய பெயர் காளமேக (சூல் கொண்ட கரியமேக)ம் என்று வழங்கத்தொடங்கியது. காளமேகப்புலவர் முதலாவதாகத் 'திருவானைக்கா உலா' என்னும் ஓர் அரிய நூலினைப் பாடினார். பின்னர்த் தமிழ்நாடு முழுவதும் சுற்றித் திரியலானார். அவருடைய வாக்கினின்றும் இசை

வசை ஆகிய இருவகைப்பாக்களும் எண்ணிறந்தன தோன்றின. காளமேகத்தைப் போற்றினோர் இசைப்பாடல்களைப் பெற்றனர். தூற்றினோர் வசைப்பாடல்களைப் பெற்றனர். காளமேகம் என்னும் பெயர் தமிழ்நாடு முழுவதும் பரவிற்று. காளமேகப் புலவர் பாடல்கள் மிக நயமுடையவைக ளாகவும் நன்மையையோ தீமையையோ உடனே அளிப்பவைகளாகவு மிருந்தன.

அந்நாளையில் திருமலைராயன் பட்டினத்தில் பல புலவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் அனை வரும் கல்வியில் மிகச்சிறந்தவர்களென்று அரச னால் அளிக்கப்பெற்ற தண்டிகையை உடையவர் கள். அவர்களுக்குத் தலைவன் அதிமதுர கவி என்பவன். அதிமதுர கவியும் அவனுக்குக் கீழுள்ள அறுபத்துநான்கு புலவர்களும் தமிழுலகில் தங் களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்று மிகவுஞ் செருக்கிக் களித்திருந்தனர். மற்றைப் புலவர்களை இகழ்வதும் நேரிற் காண நேர்ந்தால் சிறுமைப் படுத்துவதுமே அவர்களுடைய தொழி லாக விருந்தது. அரசனும் அவர்கள் செய்கை யைக் கண்டிக்காமல் உடன்பட்டிருந்தான். இச் செய்தியைச் சிலர் காளமேகத்திடம் கூறி அதி மதுர கவியையும் அவன் கூட்டத்தினரையும் அடக்கியொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். காளமேகப் புலவரும் அவர்களு டைய வேண்டுகோளுக்கிசைந்து திருமலைராயன் பட்டினத்தையடைந்து கடைவீதியிற் சென்றார்.

அப்பொழுது இவருக்கெதிரே முன் கூறிய அதிமதுரகவி என்பவன் யானைமீது வந்தான். அவனுக்கு முன்னும் பின்னும் இருபக்கங்களினும் அறுபத்துநான்கு தண்டிகைப் புலவர்களும் வரிசை வரிசையாகச் சூழ்ந்துவந்தனர். அரச சபையை நோக்கிச்செல்லும் அதிமதுர கவிக்குமுன் காளமேகப் புலவர் தண்டிகைகளுக்கு நடுவில் வந்து நின்றார். அப்போது கட்டியங்கூறுவோன் காளமேகப் புலவரின் நீளத்தை யறியாமல், '**அதிமதுர கவிராய சிங்கம்** பராக், என்று கூறு' என்றான். உடனே காளமேகப் புலவர் கட்டியங் கூறுவோனை நோக்கி நகைத்து, 'அதிமதுரம் அதிமதுரம் என்று உலகமெல்லாம் அறியும்படி பறை சாற்றினதுபோலப் பல முறையும் எடுத்துச்சொல்லி இவனைப் புகழ்கின்றாயே. இவனிடத்திலுள்ள புதுமையென்ன? இப்படிச் சொல்வதைப்பார்க்கினும் உலகினர் மலைக்குன்றிமணி வேரை அதிமதுரம் என்று கூறுவதை நீ அறிவையே. அதனையே கூறுவாயாக' என்னும் பொருளையமைத்து,

**அதிமதுர மென்றே அகிலம் அறியத்**
**துதிமதுர மாயெடுத்துச் சொல்லும்—புதுமையென்ன**
**காட்டுச் சரக்குலகில் காரமி லாச்சரக்குக்**
**கூட்டுச் சரக்கதனைக் கூறு**

என்று பாடிவிட்டு ஒரு கடையிற்போய் உட்கார்ந்தார். காளமேகப்புலவர் இவ்வாறு சிறிதும் அஞ்சாமல் தன்னைப் பழித்துப்பாடியது அதிமதுர கவிக்கு அச்சத்தையும் வியப்பையும் அளித்தது

அவன் அரசனவைக்குச்சென்று ஒரு சேவகனை யழைத்துக் கடைத்தெருவில் காளமேகப் புலவர் உட்கார்ந்த கடையின் அறிகுறியைக்கூறி அந்தக் கடைக்குச்சென்று 'மேகம் பசு இரத்தினம் மூன் றும் வாங்கிவா'வென்று சிறிது பொருளைக் கொடுத் தனுப்பினான். சேவகனும் அதிமதுரகவி கூறிய அதே கடைக்குச்சென்று கடைக்காரனைப் பார்த்து மேகம் பசு இரத்தினம் ஆகிய மூன்றும் வேண்டு மென்றான். கடைக்காரனோ ஒன்றுந்தெரியாமல் பேந்தப் பேந்த விழித்தான். காளமேகப் புலவர் கடைக்காரனைப்பார்த்துக், 'காராமணி (கார் + ஆ + மணி) கொடுத்தனுப்பு' என்றார். கடைக்குவந்த ஆள் காராமணியுடன் திரும்பியதைக்கண்ட அதி மதுர கவி, அவன் எளிமையானவனல்லன், அவனை நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணியவனாகி மீண்டும் ஓர் ஆளையனுப்பி அவ னுடைய பெயர் ஊர் முதலியவைகளைத் தெரிந் துவா வென்று அனுப்பினான். வந்த ஆளும் காள மேகத்தையடைந்து அவருடைய பேர் ஊர் முதலிய வற்றை வினவினான். அதற்குக் காளமேகப்புலவர், 'சொன்னால் உனக்குச் சரியாகப்போய்ச் சொல்ல வியலாது. ஆகையால் ஓலையில் எழுதிக்கொடுக்கி றேன்.' என்று கூறி, ஓலையும் எழுத்தாணியு மெடுத்து,

தூதைந்து நாழிகையில் ஆறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலை சொல்லத்
துகளிலா அந்தாதி எழுநா ழிகைதனில்
தொகைகைபெற விரித்து ரைக்கப்,

பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனில்
பாணியொரு நாள்முழுது மே
பாரகா வியமெலாம் ஓரிரு தினத்திலே
பகரக்கொடி கட்டினேன்,
சீதஞ்செயுந் திங்கண் மரபினு னீடுபுகழ்
செய்யதிருமலை ராயன் முன்
சீறுமா றுகவே தாறுமா றுகள்சொல்
திருட்டுக் கவிப்பல வரைக்,
காதங்கறுத்துச் செருப்பிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்து வெற்றிக்
கல்லணையி னெடுகொடிய கடிவாள மிட்டேறு
கவிகாள மேகம் நானே.

என்று எழுதி அந்த ஆளிடம் கொடுத்தனுப்பினுர். அதிமதுரகவியும் அவன் கூட்டப் புலவர்களும் காளமேகப் புலவரின் பாட்டைப் பார்த்து வியப்புந் திகிலும் ஒருங்கே யடைந்தனர். பாம்புக்குந் தேளுக்கும் பல்லிலும் கொடுக்கிலும் நஞ்சிருக்குமென்றால் இவனுக்கு உடம்பு முழுவதுமே நஞ்சாக இருக்கும்போல் தெரிகிறது. இவன் ஒருவரை இழித்துப் பாடுவதில் வல்லவனென்னுஞ் செய்திதான் நாம் நன்கு கேள்விப்பட்டதாயிற்றே. இவன் இப்பொழுது ஓடிப்போகாதபடி பிடித்து நன்கு தண்டித்து அனுப்பவேண்டுமென்று எண்ணியவர்களாய்த் தங்கள் எண்ணத்தை அரசனுக்குத் தெரியப்படுத்தினுர்கள். அவனும் இவர்கள் கூறுவதற்கு ஒருப்பட்டான். சில காவலாளர்களை அனுப்பிக் காளமேகத்தை அழைத்துவரச் செய்தனர். காளமேகப் புலவரும் ஓர் எலுமிச்சம்பழத்துடன் அரச

னவைக்களத்தை யடைந்தார். அதிமதுர கவியின் கட்டளையால் யாரும் காளமேகப் புலவருக்கு எவ்வகையான வழிபாடுஞ் சிறப்புஞ் செய்யவில்லை. அரசன் இருக்கையும் அளிக்கவில்லை. காளமேகப் புலவர் கலைமகளை உள்ளத்தில் போற்றினர். கலைமகளருளால் திருமலைராயன் அமர்ந்திருந்த அரியணை வளர்ந்து இடங்கொடுத்தது. காளமேகப் புலவர் அவ்வணைமீதேறி அரசனேடு ஒப்பாக அமர்ந்துகொண்டு,

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசனே டென்னைச்
சரியாக வைத்த தாய்

என்று பாடிப் பெருமிதத்துடன் அமர்ந்திருந்தார். அதிமதுரகவி முதலாயினோர் காளமேகப் புலவரை விறைப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். காளமேகப் புலவர், அப்புலவர்களை நோக்கி, 'என்னை இவ்வாறு விறைப்பாகப் பார்க்கிறீர்களே நீங்கள் யார்?' என்று கேட்டார். அதற்கு அப்புலவர்கள், 'நாங்கள் கவிராயர்கள்' என்று பதிலிறுத்தனர். கவியென்பதற்குக் குரங்கு என்றும் ஒரு பொருளுண்டு. ஆகவே, அப்புலவர்கள் தங்களைக் குரங்கென்று கூறியதாகவே காளமேகப் புலவர், அவர்களை நோக்கி, 'நீங்கள் உங்களைக் குரங்கென்கின்றீர்களே நீங்கள் குரங்கானல் உங்களுடைய வால் முதலிய உறுப்புக்கள் எங்கே என்னும் பொருளையமைத்து,

"வாலெங்கே நீண்டெழுந்த வல்லுகிரெங் கோநாலு
காலெங்கே யூன்வடிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீங்கள்
கவிராயர் என்றிருந்தக் கால்

என்று ஒரு வெண்பாவைப் பாடினார். உடனே அதிமதுரகவிராயன் காளமேகப் புலவரைப் பார்த்து, 'நீண்ட நாள்களாக அரசனுடைய அவைக்களப் புலவர்களாக இருக்கும் எங்களை இன்றுவந்து முளைத்த நீ யாரென்று கேட்டது மல்லாமல் எங்களையெல்லாம் இகழ்ந்தும் பேசுகிறாயே உன்னுடைய பெருமைதான் என்ன சொல்லு பார்ப்போம்' என்றான். அதற்குக் காளமேகப்புலவர் நான் 'கருக்கொண்ட முகில் தாரை தாரையாக நீரைப் பொழிவதுபோலப் பாமழையை மிகுதியாகப் பொழிவேன். ஆதலின் என்னுடைய பெயர் திக்கெலாம் காளமேகமென்று செப்பப் பெறுகிறது' என்றார். உடனே அதிமதுரகவி,

மூச்சுவிடு முன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சென்றா லைந்நூறு மாகாதோ—பேச்சென்ன
வெள்ளைக் கவிக்காள மேகமே! உன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு

என்று ஒரு வெண்பாவைப் பாடினான். அதற்குக் காளமேகப் புலவர் நீ கூறுவது பெரிய வியப்பா?

இம்மென்னுமுன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட் டாகாதா—சும்மா
இருந்தா லிருப்பேன் எழுந்தேனே யாயில்
பெருந்தாரை மேகம்பிள் ளாய்

---

1. வெள்ளைக்கவி—வெண்பா

என்று மீண்டும் தம் திறமையைப் புலப்படுத்தினார். காளமேகப்புலவர் கூறியதைக் கேட்ட அதிமதுரகவி இவன் கூறுவது உண்மையாக விருக்குமா என்று எண்ணமிட்டான். மேலும் நன்றாக ஆராய்ந்து பார்க்கலா மென்று முடிவுசெய்தான். பிறகு காள மேகப் புலவரை நோக்கி, நீ மிகவும் பெருமையடித் துக் கொள்ளுகிறாயே, 'அரிகண்டம் பாடுவாயா?' என்றான். அதற்குக் காளமேகப்புலவர், 'அரி கண்டம் என்றால் யாது?' என்றார். 'கழுத்திற் கத்தி கட்டிக்கொண்டு மற்றோர் கொடுக்கும் அடிகளையும் குறிப்புக்களையும் விரித்துப் பாடவேண்டும். பாடும் போது ஏதாவது தவறினால் அந்தக் கத்தியினாலே வெட்டப்பட் டிறக்கவேண்டும்' என்றான். காள மேகப்புலவர் ஏளனமாக நகைத்து, 'இதுதானா நீ பெருமையாகக்கூறிய அரிகண்டம்? இதை ஒரு பொருட்படுத்தி என்னிடம் சொல்லவந்தாயே இதில் என்ன அருமையிருக்கிறது? **எமகண்டம்** பாடுவ தன்றோ மிகுந்த சிறப்பு' என்றார். காளமேகப் புலவர் கூறியதைக்கேட்ட அதிமதுரகவி, '**எமகண் டம்**' என்று ஒன்றிருக்கிறதா? அதனுடைய தன்மை என்ன என்று கேட்டான்.

காளமேகப் புலவர் அதிமதுர கவியைப் பார்த்து எமகண்ட இயல்பைக் கூறலானார்: நிலத் தில் பதினாறடி நீளமும் பதினாறடி அகலமும் பதினா றடி ஆழமுமாக ஒரு சதுரக்குழி வெட்டவேண்டும். அதன் நான்கு மூலைகளிலும் பதினாறடி இருப்புக் கம்பங்கள் நாட்டவேண்டும். கம்பத்தின்மேல்

நான்கு பக்கங்களிலும் இரும்பினால் நான்கு சட்டங்களும் நடுவே யொரு சட்டமும் போடவேண்டும். நடுச்சட்டத்தில் உறியொன்று கட்டவேண்டும். குழிக்குள் பருத்த புளியங்கட்டைகளை அடுக்கி நெருப்பு மூட்டவேண்டும். அந் நெருப்பு நன்றாக எரிந்துகொண் டிருக்கும்போது, அந்நெருப்பின் மீது ஓராளுயரமுள்ள இரும்புக் கொப்பரையை வைத்து அது நிறைய எண்ணெயை ஊற்றவேண்டும். அதில் அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம், சாம்பிராணி முதலியவைகளை நிறையப் போட வேண்டும். அவைகள் நன்றாகக்காய்ந்து உருகிக் கொதித்துக்கொண்டிருக்கும். நான்கு யானைகளைப் பாகர்கள் மதமேற்றிக் கொண்டுவந்து கம்பத்திற் கொன்றாக நிறுத்திவைத்திருக்கப் பின்புறத்தில் வளையம் வைத்து, வளையத்திற் சங்கிலிகோத்து மழுவினாற் செய்யப்பெற்றதும் சாணை பிடித்துக் கூராக்கப் பெற்றுள்ளவையும் ஆகிய எட்டுக் கத்திகளைக் கழுத்தில் நான்கும், அரையில் நான்குமாகக் கட்டிக்கொண்டு, கத்திகளின் பக்கத்திலுள்ள சங்கிலிகளை யானைகளின் துதிக்கைகளிற் கொடுத்து விடவேண்டும். இவைகளெல்லாம் இவ்வாறு ஏற்பாடானவுடன் தன்னைப் பெருமையாக மதித்துச் செருக்கித்திரிகிற புலவன்தான் கொப்பரைக்கு நேராகத்தொங்குகிற உறியின் நடுவில் ஏறி உட்கார்ந்து கொள்ளவேண்டும். யார் யார் எத்தகைய குறிப்புக் கொடுத்தாலும் உடனுக்குடன் விரைந்து பாடி முடிக்கவேண்டும். அவ்வாறு பாடும்போது

சிறிதேனும் தவறுதல் ஏற்படுமாயின் குறிப்புக் கொடுத்தவர்கள் யானைமேலிருக்கும் பாகர்களுக்குக் கண் குறிப்புக்காட்டுவர். பாகர்கள் யானையைத் தோட்டியினுற் குத்தி அதட்டுவர். அவைகள் தங்கள் கைகளிற் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கிலிகளை விசையாக இழுக்கும். அவ்வாறிழுத்தவுடன் புலவன் கழுத்தும் அரையும் கத்திகளால் வெட்டப்பட்டுத் தலையொரு துண்டமும் அரைமுதல் காலளவும் ஒரு துண்டமுமாகி அவ்வெண்ணெய்க் கொப்பரையில் வீழ்ந்து மடியவேண்டும். இதுதான் எமகண்டம் பாடுதல்' என்ருர்.

காளமேகப் புலவர் இவ்வாறு கூறியதைக் கேட்டவுடன் அதிமதுரகவி திடுக்கிட்டான். எமகண்டம்என்பது இவ்வளவு கோரமானதா என்று அஞ்சினுன். இஃது உண்மையில் புலவனை வேலை தீர்த்துவிடக் கூடும்; ஆகையால்தான் **எமகண்டம்** என்று பெயர் ஏற்பட்டிருக்கிறதென்று எண்ணினுன். எப்படியாவது காளமேகப் புலவரையே அந்த எமகண்டத்தில் சிக்கவைத்துத் தொலைத்துவிட வேண்டுமென்று முடிவு செய்தான். பின்னர் அதிமதுரகவி காளமேகப் புலவரைப் பார்த்து, வீணுக வாயினுல் ஒன்றைக்கூறுவதில் யாது பயன்? கூறியவாறுசெய்து காட்டினுலன்ருே உன் திறமையைப் புகழலாம் என்ருன்.

அதிமதுரகவியின் கபட வாசகத்தைக் கேட்ட காளமேகப்புலவர், 'நான் என்னைப்புகழ்ந்து தம்பட்ட மடித்துக்கொண்டு திரியவில்லை. நீதான் உன்

பெருமையைப் புகழ்வதற்கு ஆள்வைத்துக் கொண்டு வீண் ஆரவாரஞ் செய்கின்றாய்; ஆகலால் நீதான் செய்து காட்டவேண்டியது முறைமையாகும் என்றார். பின்னர் அதிமதுர கவியும் அவனைச்சேர்ந்த புலவர்களும் திருமலைராயனும் காளமேகப் புலவரையே எமகண்டத்தில் மாட்ட வேண்டுமென்று அவரையே வற்புறுத்தினார்கள். காளமேகப்புலவர் இறைவியின் அருள்பெற்றவராகையால் எதற்கும் அஞ்சாது, அக் கவிராயர்களையும் அரசனையும் நோக்கி, 'எமகண்டம் பாடுதல் என்பது உங்களைப்போன்ற வெளிப்பகட்டுக் காரர்களால் ஆகக்கூடியதன்று. அதனை நானே செய்து காட்டுகிறேன். நான் கூறியபடி ஏற்பாடு செய்யுங்கள்' என்றார்.

உடனே அரசனுடைய அத்தாணிக்கு முன் னிலையிலே காளமேகப்புலவர் முன் கூறியவாறு எமகண்டம் பாடுதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. காளமேகப்புலவர் சிறிதும் அஞ்சாமல் உறியின் மீது ஏறி அமர்ந்துகொண்டார். காளமேகப் புலவரின் துணிவுடைமையைக் கண்டு அனைவரும் அஞ்சி நடுநடுங்கினர். புலவர்கள் காளமேகப் புலவருக்கு பாடுதற்குக் கேள்விக்குறிப்புக்கள் கொடுக்கத்தொடங்கினர். அதிமதுரகவி திருமால் பிறப்புக்கள் பத்தையும் ஒரு வெண்பாவில் பாட வேண்டுமென்றான். அதற்குக் காளமேகப்புலவர், 'இதற்கு ஒரு வெண்பா எதற்கு? நான் அரை வெண்பாவில் பாடுகிறேன் என்று கூறி,

மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுஞ் சென்மம் எடுக்கவா—மச்சாகூர்
[1]மாகோலா சிங்கரவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய்

என்று பாடினார். தண்டிகைப் புலவர்களில் ஒருவர், இராசிகளின் பெயரும் முறையும் தொகையும் அடைமொழியில்லாமல் பாடவேண்டு மென்றார். உடனே காளமேகப்புலவர்,

பகருங்கால் மேடமிட பம்மிதுனங் கர்க்க
டகஞ்சிங்கங் கன்னி துலாம்விர்ச்—சிகந்த
நுசுமகரங் கும்பமீ னம்பன்னி ரண்டும்
வசையறுமி ராசி வளம்

என்று பாடினார். மற்றொரு புலவர், அடைமொழியில்லாமல் ஒன்று முதல் பதினெட்டு வரையில் ஒரு வெண்பாவில் அடக்கிப் பாடவேண்டும் என்றார். அதற்கு,

ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறே ழெட்டு
ஒன்பது பத்துப் பதினொன்று—பன்னி
ரண்டுபதின் மூன்றுபதி னான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழ்பதி னெட்டு

என்று பாடினார். மற்றைப் புலவர்களும் தம்தம் மனம்போனவாறு குறிப்புக்கள் கொடுத்துப் பாடச்சொல்லினர். எல்லாவற்றையும் காளமேகப் புலவர் பாடி முடித்து வெற்றியடைந்து உறியினின்றும் கீழே இறங்கினார். இவ்வளவும் நடந்த பிறகும்கூட அதிமதுர கவி முதலிய போலிப் புலவர்களுக்கும் திருமலைராயனுக்கும் நல்லறிவு உண்டாக

1. கோலம்-பன்றி. வாமா-வாமன். மா-குதிரை.

வில்லை. காளமேகப் புலவருக்குச் செய்யவேண்டிய சிறப்புக்களைச் செய்து போற்றவும் இல்லை. வழக்கம்போலவே அவர்கள் இறுமாப்புடன் இருந்தனர். காளமேகப் புலவருக்குக் கடுஞ்சினம் உண்டாகியது. அவர் உடனே,

[1] கோளா ரிருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர்—நாளையே
விண்மாரி யற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்

செய்யாத செய்த திருமலைரா [2]யன்வரையில்
அய்யா வரனே அரைநொடியில்—வெய்யதழல்
கண்மாரி யான்மதனைக் கட்டழித்தால் போல்தீயோர்
மண்மாரி யாலழிய வாட்டு.

என்னும் செய்யுட்களைப் பாடினார். திருமலைராயனுடைய பட்டினம் மிகுவிரைவில் மண்மாரிபெய்து அழிந்தது. காளமேகப்புலவர் அங்கிருந்தும் புறப்பட்டுப் பல விடங்களுக்குஞ் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார்.

நாகப்பட்டினம் என்னும் ஊருக்கு ஒரு சமயம் சென்றார். வழியில் விகடராமன் என்னும் பார்ப்பான் ஒருவன் ஒருசண்டிக் குதிரையை வண்டியிற் கட்டி ஓட்டிக்கொண்டு சென்றான். அக்குதிரை மிகவும் இளைத்தும் கிழமானதாகவும் இருந்தது. அக்குதிரைக்கு முன்னே மூன்று பேர் நின்று கடி

1. கோளர்-கோள்சொல்வோர். கரவு-வஞ்சனை. மண்மாரி-மண் மழை.

2. வரை-மலை. தழல்கண்மாரி-நெருப்புமழை.

வாளத்தைப் பற்றி யிழுத்துக்கொண்டும் பின்னே யிருந்து இரண்டு பேர் தள்ளிக்கொண்டுஞ் சென்றனர். அக்காட்சி காளமேகப் புலவருக்கு நகைப்பை உண்டாக்கியது. அவர்,

முன்னே சடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்கொள்ள—எந்நேரம்
[1]வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மர்தம்போம் காத வழி

என்று நகைச்சுவை ததும்புமாறு பாடிக்கொண்டு சென்றார். நாகப்பட்டினத்தை யடைந்ததும் ஆங்கெழுந்தருளிய இறைவனை வணங்கிக்கொண்டு உணவின்பொருட்டு அங்கிருந்த அறச்சாலை யொன்றுக்குச் சென்றார். அது காத்தான் என்பவரால் கட்டிவைக்கப்பட்டமையின் காத்தான் சத்திரம் என்னும் பெயருடன் விளங்கிக்கொண்டிருந்தது. மாலை நேரத்தில் நடுப்பகலுணவு அங்கு அகப்பட்டது. காளமேகப்புலவர் அவ்வறச் சாலையைக் குறித்து,

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை யன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்

என்றொரு பாடல் பாடினார். உண்டுவிட்டுத் தெருவிற் சென்றுகொண்டிருந்தார். அஃது ஒரு கணிகையர் தெரு, அத்தெருவிலொரு கணிகைமிக மோசமான குரலில் தொண்டை வெடிக்கும்படி

1. வேதம்போம் வாயான்-பார்ப்பான்.

யாக ஓலமிட்டுப் பாடிக்கொண்டிருந்தாள். அவள் குரல் கழுதைக் குரல்போலிருந்தது. காளமேகப் புலவர் அக்கணிகையின் பாட்டைக் குறித்து,

வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்று
கழுதைகெட்ட வண்ணான் கண்டேன் கண்டேன் என்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார்.

என்றொரு வெண்பாப் பாடி நகைத்துச் சென்றார். திருவாரூர் சென்ற காளமேகப் புலவர் சிவபெருமானைக் கண்டு வணங்கினார். அப்போது இறைவனுடைய மார்பிலே வயிரப்பதக்க மணியப் பெற்றிருந்தது. அவ்வயிரப் பதக்கத்தை மார்பிற் கண்ட காளமேகப் புலவர்,

அன்னவயல் சூழ்ந்திருக்கும் ஆரூரர் நெஞ்சத்தில்
[1] இன்னம் வயிரம் இருப்பதா—முன்னமொரு
தொண்டன்மகனைக்கொன்றும் சோழன்மகனைக்கொன்றும்
சண்டன்மகனைக்கொன்றுந் தான்.

என்று பாடியருளினார். பின்னர் அவர் திருக்கோயிலைச் சுற்றிக்கொண்டு வந்தார். அப்போது இரட்டைப் புலவர்கள் என்பவர் அங்கு வந்திருந்தனர். அவர்கள்,

நாணென்றால் நஞ்சிருக்கு நற்சாபம் கற்சாபம்
பாணந்தான்............

என்ற வரையில் பாடிவிட்டு மேலே பாட முடியாமல் 'பாணந்தான் பாணந்தான்' என்று சொல்லிக்

1. தொண்டன் - சிறுத்தொண்டன். சோழன்மகன் - வீதிவிடங்கன். சண்டன் மகன் - ஞாயிற்றின் மகனாகிய யமன்.

கொண்டிருந்தனர். அதனைக் கேட்ட காளமேகப் புலவர், 'மண்தின்ற பாணமே' என்றார். அவ்வளவில் இரட்டைப் புலவர்கள்—தாணுவே, சீராரூர் மேவும் சிவனே நீ யெப்படியோ, நேரார் புரமெரித்த நேர்' என்று பாடிக்கொண்டு சென்றனர்.

காளமேகப் புலவர் கும்பகோணத்தில் ஒரு பார்ப்பன விருந்தில் இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் ஒரு சோழியப் பார்ப்பான் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய குடுமி யவிழ்ந்து அவனுடைய இலையில் வீழ்ந்தது. அவன் அதைக் கையிலெடுத்துப் பக்கத்தில் உதறினான். குடுமியில் இருந்த எச்சில் சோறு ஒன்று காளமேகப் புலவருடைய இலையில் வந்து விழுந்தது. உடனே காளமேகப் புலவருக்கு மிகுந்த சினம் எழுந்தது. அவர் அந்தச் சோழியனைப் பார்த்து,

> [1]சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
> பொருக்குலர்ந்த வாயா புலையா—திருக்குடந்தைக்
> [2]கோட்டானே நாயே குரங்கே யுனையொருத்தி
> போட்டாளே வேலையற்றுப் போய்

என்றொரு வசை கவியை விசையுடன் வீசினார்.

காளமேகம் திருவரங்கத்தில் ஒரு தெருவழியே

---

1 சுருக்கு - முடிச்சு.

2. நாயா நரியாஉன் நாய்முகமுஞ் சேய்வடிவும்
தாயார்தான் கண்டிலளோ தான்.

என்றும் பாடம் உண்டு.

சென்றுகொண்டிருந்தார். சில வைணவப் பார்ப்பனர்கள் அத் தெருவிலிருந்து ஒரு பிள்ளையாரின் நெற்றியில் பட்டை நாமத்தைச் சார்த்திவிட்டுக் காளமேகப் புலவரைப் பார்த்து, 'பிள்ளையார் கூடத் திருநாமம் போட்டுக்கொண்டு திருமாலின் சமயத்திற் சேர்ந்துவிட்டார் பார்த்தீரா?' என்ருர்கள். அதற்குக் காளமேகப் புலவர், 'அவர் வைணவரானது இறந்து பிறந்து உழலும் மாமனுடைய பொருள்களைக் கைப்பற்றவே என்னும் பொருளை யமைத்து,

தந்தை பிறந்திறவாத் தன்மையினுல் தன்மாமன்
வந்து பிறந்திறக்கும் வண்மையினுல்—முந்தொருநாள்
[1]வீணிக்கு வேளை எரித்தான் மகன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்

என்று பாடினர். வேறு சில வைணவர்கள் காளமேகப் புலவரைப் பார்த்து, 'திருமால் உலகத்தை யெல்லாம் தமது திருவயிற்றி லடக்கி யருளியபோது உங்களுடைய சிவபெருமான் எங்கிருந்தார்?' என்று கேட்டனர். அதற்குக் காளமேகப் புலவர், 'யானை தீனி தின்னும்போது அதன் மீதிருக்கும் பாகன் எவ்வாறிருப்பானே அவ்வாறிருந்தான்' என்னும் பொருளை யமைத்து,

அருந்தினன் அண்டமெலாம் அன்றுமா லீசன்
இருந்தபடி யேதென் றியம்பின்—பொருந்தி
பருங்கவளம் யானைகொளப் பாகனதன் மீதே
இருந்தபடி யீசனிருந் தான்

1. இக்குவேள் - காமன். காணி - நிலம்.

என்னும் பாவாற் பதிலளித்தார். புலவர் பெருமானாகிய காளமேகப் புலவர் அவ்வக்காலங்களிற் பாடிய பாடல்கள்தான் பல வழங்குகின்றனவே தவிர, அவர் செய்ததாகத் தனி நூல் எவையும் இல்லை.

காளமேகப் புலவர் இறைவியருள் பெற்றபின்பு திடீரெனக் கல்விப்பொருளை யடைந்தாராயினும், இஃது அவர் பல பிறப்புக்களிலும் வருந்திக் கற்ற கல்வியின் வரவேயாகும். சிலர் காளமேகப் புலவரை மிகக்கொடியவரென எண்ணுவர். காளமேகப் புலவர் அவ்வாறு கொடியவரல்லர். தமக்கு மிகுந்த சீற்றத்தை யுண்டாக்கியவர்களை மட்டுமே வசை பாடினார். காளமேகப் புலவர் பாடிய பாடல்கள் அவ்வளவும் எழுதி வைக்கப்பெறவில்லை. எழுதிவைக்கப் பட்டிருப்பின் நமக்கு இப்போது ஆயிரக்கணக்கான பாடல்கள் கிடைத்தல் கூடும். அகப்பட்டுள்ள வரையில் தனிப்பாடல் திரட்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

## கய. குமரகுருபரர்

திக்கெலாம் புகழூந் திருநெல்வேலி மாவட்டத்திலே, தாமிரபர்ணி யாற்றின் கரையில் வைகுண்டமென்று வழங்குகிற கைலாசபுரம் என்றோர் ஊர் இருக்கின்றது. அவ்வூரில் இற்றைக்கு ஏறக்குறைய முந்நூறு யாண்டுகட்கு முன்னர்ச் சண்முக சிகாமணிக் கவிராயர் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவருடைய குலம் வேளாளர் குலம்.

அவர் இல்லறவொழுக்கங்களிலே சிறிதுந் தவறாது வாழ்க்கை நடத்திவந்தார். அவருடைய வாழ்க்கைத் துணைவியின் பெயர் சிவகாம சுந்தரி. நீண்ட நாளாகியும் அவர்களுக்கு மக்கட்பே றில்லை. அதனால் வருந்தித் திருச்செந்திலில் எழுந்தருளிய செவ்வேளை மிகுந்த அன்புடன் வழிபட்டுப் போற் றிக்கொண்டிருந்தனர். முருகன் திருவருளால் ஒரு ஆண் மகவு பிறந்தது. தாய் தந்தைய ரிருவரும் அளவிலா மகிழ்ச்சியுடன் அவ் வருமருந்தன்ன புதல்வனைப் போற்றி வளர்த்துவந்தனர். அக்குழ விக்கு ஐந்தாண்டும் நிரம்பியது. ஆயினும் அக் குழந்தை வாய் திறந்து ஒரு மொழிகூட உரைக்க வில்லை. அதனால் அக்குழந்தை ஊமையென்று தாய் தந்தையர் எண்ணிப் பெரிதும் வருந்தினர். முருகக் கடவுளைக் குறித்துப் பலவகை வழிபாடு களும் நடத்தினர்.

ஒருமுறை குழந்தையுடன் அறுமுகவள்ளல் அமர்ந்தருளும் திருச்செந்தில் மாநகரை யடைந் தனர். அப் பெருமானை வழிபட்டுத் தம் புதல்வனின் ஊமைத்தன்மையை நீக்கிப் பேசவைத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அங் குள்ள சண்முக விலாசம் என்னும் மண்டபத்தில் தானே தங்கியிருந்தனர். கவிராயர் தமக்கு ஊமைப்பிள்ளை பிறந்திருப்பது இழிவு என்று எண்ணினார். ஆகையால் ஒரு மண்டலத்திற்குள் மைந்தனுக்கு ஊமைத்தன்மை நீங்கா தொழியு மாயின் மனைவியுடன் உயிர் விட்டுவிடுவேனென்று

உறுதி செய்துகொண்டு முருகக் கடவுளை முக்காலமும் போற்றிக்கொண்டிருந்தார்.

அவ்வாறிருக்கும்போது ஒரு மண்டலமும் ஆயிற்று. கவிராயர் உயிர் விடுவதாக எண்ணியிருந்த தினமும் நெருங்கியது. அந்நாளில் ஞாயிறு தோன்றுவதற்கு ஒரு சாமம் இருக்கையில் முருகக் கடவுள், பூசனை புரிபவர் வடிவுகொண்டு குழந்தையிடத்திற்கு எழுந்தருளினர். குழந்தையைக், 'குமாரகுருபரா!' என்று தட்டி யெழுப்பினர். குழந்தையும் விழித்தெழுந்தது. அதனுடைய நாவிலே ஆறெழுத்தை யெழுதிவிட்டு 'நம்முடைய வழிபாட்டிற்கு வருவாயாக' என்று கூறி மறைந்தருளினர். உடனே அக்குழந்தை தாய் தந்தையர்களைத் தட்டியெழுப்பி 'அம்மா! அப்பா!' என்று அழைத்து நடந்த செய்திகளையெல்லாம் நவின்றது. தாய் தந்தையாரிருவரும் தம் மைந்தனுக்கு முருகக் கடவுள் அருளிய பேரருளை யெண்ணி யெண்ணி வியந்து மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தனர். முருகன் திருவருளைப்பெற்ற குழந்தையோ அக்கடவுளைப் போற்றிக் 'கந்தர்கலிவெண்பா' என்னும் ஓர் அரிய புகழ்நூலை அப் பெருமான்மீது பாடியருளியது. மூவரும் உவர்நீர்க்கடலில் நீராடி முருகனைப் போற்றி இன்பக்கடலில் இனிது திளைத்து நின்றனர். அன்றுமுதல் அக் குழந்தையை 'குமரகுருபர அடிகள்' என்று அனைவரும் போற்றலாயினர். குமரகுருபர அடிகள் மெய்யறிவு மிகவும்

கூடப்பெற்றார். எனவே தக்க அறிவாசிரியரைப் பெறவேண்டுமென்று அப்பெருமானைப் போற்றி நின்றார். 'நீ பல இடங்களுக்கும் செல்வாயாக! உன்னுடைய வாக்கு எவரிடம் தடைபடுகிறதோ அவரிடத்தில் மெய்யறிவு பெறுவாயாக!' என்று முருகக்கடவுள் உடலற்ற வாக்காக உரைத்தருளினார். குமரகுருபரரும் முருகனைப்போற்றித் தாய் தந்தையர்களுடன் கைலாச புரத்தை யடைந்தார். சிலகாலஞ் சென்றபின் தாம் சிவப்பதிகளுக்குப் பயணஞ்செய்ய விரும்புதலைத் தாய் தந்தையர்களுக்குத் தெரிவித்தார். அவர்கள் மைந்தனைப் பிரிய வருந்தினர். குமரகுருபரர் அவர்களைத் தேற்றி மதுரையை நோக்கிப் புறப்பட்டார்.

புறப்பட்டு வரும் வழியில் தாமே மதுரையி லெழுந்தருளியுள்ள அங்கயற்கண் அம்மைமீது ஓர் அரிய பிள்ளைத்தமிழ் நூலைப் பாடிக்கொண்டு வந்தார். குமரகுருபரருக்குப் பிறகு மற்றுமோர் ஆண் குழந்தை சண்முக சிகாமணிக் கவிராயருக்குப் பிறந்தது. அக்குழந்தைக்குத் தந்தையார் தாமே இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தார். அச்சிறுவரும் இறைவனருள் பெற்ற ஒரு பெரியாரின் இளவலாகப் பிறந்த காரணத்தால் எளிதாகக் கல்வியைக் கற்றுப் புலமை யடைந்திருந்தார். அவருடைய பெயர் குமார கவிகளென விளங்கிநின்றது. அவரும் அடிகளாருடன் உடனுறைந்து அடிகள் பாடுவதை எழுதுவது படிப்பது முதலிய அரும்பணிகளைப் புரிந்துகொண்டிருந்தார்.

குமரகுருபரரும் குமார கவிகளும் திருப்பரங் குன்றத்தை யடைந்து ஆங்கெழுந்தருளியுள்ள பெருமானைப் போற்றி வழிபட்டுக்கொண் டிருந் தனர்.

அந்நாளில் மதுரைமா நகரைத் திருமலை நாயகர் என்பவர் அரசாட்சி செய்துகொண்டிருந் தார். அங்கயற்கண் அம்மையார் அவ் வரசருடைய கனவில் தோன்றி, 'நம்முடைய திருமகனாகிய திரு முருகனுடைய திருவருளைப்பெற்ற ஓரன்பன் நம் மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடிக்கொண்டு திருப்பரங் குன்றத்தில் வந்திருக்கின்றான். நீ நின் பரிவாரங்க ளோடு சென்று அவனை அழைத்துவந்து அப் பிள்ளைத்தமிழை நம் முன்னிலையில் அரங்கேற்றஞ் செய்யக்கடவாய்' என்று கட்டளையிட்டருளினர். திருமலைநாயகர், அம்மையார் தமக்களித்த கட்டளை கண்டு பெருங்களிப்படைந்தார். மறுநாட் காலையில் தாம் கண்ட கனவினை எல்லோருக்குந் தெரியப் படுத்தினார். அம்மையார் கட்டளைப்படி திருப்பரங் குன்றத்தை யடைந்தார். குமரகுருபரரைக் கண்டு பலவகையாகப் போற்றி வழிபட்டார். இறைவியி னுடைய கட்டளையைத் தெரிவித்து மதுரைக்கெழுந் தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். குமரகுருபரரையும் அவர் பாடியருளிய பிள்ளைத் தமிழையும் யானைமீ தேற்றிக்கொண்டு நகர் வல மாக மதுரையை அடைந்தார்.

குமரகுருபரர் அங்கயற்கண் ணம்மை திருக் கோயிலை யடைந்து இறைவனையும் இறைவியையும்

வணங்கிநின்றார். அப்போது அங்கயற்கண் அம்மையார் தம்முடைய இளந்திருக்கோலக் காட்சியைக் குமரகுருபரர்க்குக் காட்டியருளினார். குமரகுருபரர், இது பிள்ளைத்தமிழ் பாடியதற்குப் பரிசென் றெண்ணிப் பெருமகிழ்ச்சியடைந்தார்.

அம்மையினுடைய முன்னிலையில் பிள்ளைத் தமி ழரங்கேற்றுதலுக்கு வேண்டியன செய்யப்பட்டன. ஒரு சிவனடியார் பிள்ளைத்தமிழ் நூலினை ஓர் உயர்ந்த அணையில் வைத்துப் பூசனை புரிந்தார். குமரகுருபரரின் கட்டளைப்படி குமார கவிகள் பாட்டினைப் படித்தனர். குமரகுருபரர் பாட்டின் பொருளை அனைவரும் அறியுமாறு விரித்துரைத்துச் சொற்பொழிவு செய்தார். தினம் ஒவ்வொரு பருவமாக அரங்கேற்றுதல் நிகழ்ந்து வந்தது. முத்தப்பருவத்தில்,

"காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடல்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுள் மணியே உயிரால
வாலத்துணர்வின் நீர் பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த
மலர்க்கற் பகமே எழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக்கிளியே உயிர்த்துணையாந்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத

மூலத்தலத்து முளைத்தமுழு
முதலே முத்தந் தருகவே
.............................
.............................''

என்னும் பாட்டினைக் கூறிப் பொருள் விரிக்குங் கால் அங்கயற் கண்ணம்மையார் பூசகர் ஒருவருடைய மகளைப்போலத் திருக்கோலங்கொண்டு ஆங்கு வீற்றிருந்தார். பாட்டின் சொற்பொழிவு முடிவுறும் வேளையில் அவர் அரசர் கழுத்தி லணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றிக் குமரகுருபரர்க்குப் பரிசாக அவர் கழுத்தி லணிந்தருளினர். பின்னர் வருகைப் பருவத்திலே,

''தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்(து)
எடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமைய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில் அழ(கு)
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்தும்இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே''

என்னும் பாடலைப்பாடி முடித்ததும், பூசகர் மகளாகப் போந்திருந்த அங்கயற்கண்ணம்மையார் 'இப்பாடலை இன்னுமொரு தடவை கூறுக' என்று கூறிப் பாடச்செய்து மகிழ்ந்து பருவம் முடிந்தவுடன் மறைந்தருளினர். அப்பொழுதுதான் அங்கெழுந்தருளியிருந்தவள் அங்கயற்கண் அம்மையார் என்பது அனைவருக்கும் விளங்கிற்று. அனைவரும் குமரகுருபரரின் பெருமையை வியந்துகொண்டாடினர். பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம் முற்றுப் பெற்றது. திருமலை நாயகர் குமரகுருபரரை அரியணைமீது அமரச்செய்து செய்ய வேண்டிய சிறப்புக்களையெல்லாஞ் செய்து போற்றினர்.

பின், குமரகுருபரர் திருமலை நாயகர் விரும்பியபடி அந்நகரத்திலே சிலநாள் தங்கியிருந்தார். அப்போது, மீனாட்சியம்மை குறம், இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம் ஆகிய நூல்களைப் பாடியருளினர். ஒருநாள் நீண்ட நேரம் திருமலை நாயகர் நண்பகலுணவு கொள்ளாது ஆட்சிக் காரியங்களில் உள்ளத்தைச் செலுத்தியிருந்தார். அப்போது குமரகுருபரர், "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" என்னுந் திருக்குறளைக் கூறினர். நாயக்க மன்னர் அதன் பொருளை வினவினர். 'ஒருவன் கோடிக் கணக்கான பொருளைக் குவித்து வைத்துக்கொண்டு அதற்கு உரியவனைக விரும்பினும், இறைவனல் வகுக்கப்பட்ட அளவிற்குமேல் ஒரு சிறிதுதானும் அப்பொருளில் நுகர்தல் அருமையானது'

என்பதே அக்குறளின் பொருளென் றருளினார். திருமலை நாயக்கர் திருக்குறளின் கருத்துக்களை உணரவேண்டும் என்னும் எண்ணத்துடன் திருக்குறளிலுள்ள பொருளையமைத்து ஒரு சிறிய அறநூல் செய்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். குமரகுருபரரும் நாயக்கர் விரும்பியபடி நீதிநெறி விளக்கத்தைப் பாடி அதன் பொருளையும் அரசருக்கு விரித்துரைத்தருளினார்.

பின்னர் குமரகுருபரர் தம் இளவலாகிய குமார கவிகளைக் கைலாசபுரஞ் சென்று தாய் தந்தையர் விருப்பப்படி இல்லறத்தி லிருக்குமாறு பணித்துவிட்டுத் தாம் வடக்குத்திக்கை நோக்கிப் பயணப்பட்டார். அரசர் தமக்களித்த பொருள்களை ஒட்டகங்களின்மீது ஏற்றிக்கொண்டார். திரிசிரபுரம் என்னும் திரிசிராமலையை அடைந்து ஆங்கெழுந்தருளிய தாயுமானவரையும் அணித்தேயுள்ள திருவானைக்காவில் எழுந்தருளிய இறைவனையும் போற்றிக்கொண்டு திரிசிராமலையில் சின்னாள் தங்கியிருந்தார்.

அப்போது திருவரங்கத்திலிருந்த அட்டப்பிரபந்தம் பிள்ளைப்பெருமாளையங்கார் குமரகுருபரரைக் கண்டு உரையாடி மகிழ்ந்தார். திரிசிரபுரமன்னன் அறிஞர் இருவரையும், நோக்கி 'நாணயங்களிலே அச்சிடத்தக்க குறியாக எதனைக் கொள்ளலாம்' என்று கேட்டனன். ஐயங்கார்; 'கருடனைக் கொள்ளலாம்' என்றார். குமரகுருபரர் 'கருடனை நாணயங்களில் பதிப்பித்தால் பறந்து

விடும்; விடை அவ்வாறு பறவாது நிலைத்து நிற்கும்' என்றார். அரசன் விடையையே அச்சிடப் பணித்தான்.

குமரகுருபரர் பல சிவப்பதிகளையும் போற்றி வழிபட்டுக்கொண்டு, பிறப்பார்க்குப் பிறப்பறுக்கும் பெற்றிமிக்க திருவாரூரை யடைந்தார். அங்கு சில நாள் தங்கி இறைவனை வழிபட்டதுடன் 'திருவாரூர் நான்மணிமாலை' என்னும் அரிய புகழ் நூலினையும் ஆரூர்ப் பெருமான் மீது பாடியருளினர். தருமபுர ஆதீனத்தில் அக்காலை எழுந்தருளியிருந்த மாசிலாமணி தேசிகரென்னும் பெரியார், ஆசிலாத் திருவருளுடையார் என்னுஞ் செய்தி குமரகுருபரர்க்குத் தெரிந்தது. அப்பெரியாரைக் காண விழைந்து புறப்பட்டார். இடையிலுள்ள சிவப்பதிகளையெல்லாம் போற்றிக்கொண்டு திருத் தருமபுரத்தை யடைந்தார்.

சைவ சித்தாந்த நூல்களிலேயும் அவற்றின் உறுப்புக்களாகவமைந்த பிறநூல்களிலேயும் வல்லவரும் உண்மையறிவு கைவரப் பெற்றவரும், கற்றுங்கொழுகும் பெற்றி மிக்காருமாகிய மாசிலாமணி தேசிகர் குமரகுருபரர் வந்தபோது அறிஞர் கூட்டமும் மாணவர் குழாமும் புடைசூழக் கல்லாலமர்ந்த தட்சணாமூர்த்தியைப்போன்று தெற்கு முகமாக எழுந்தருளியிருந்தார். குமரகுருபரர் தம்முடைய பரிசனங்கள் பின்னேவர விருதுகளுடன் அத்திருமடத்திற்கு வந்து சேர்ந்தார். மாசிலாமணி தேசிகர் எழுந்தருளியுள்ள இடத்திற்குச்

சென்று அத்தேசிகருக்குமுன் தமக்களிக்கப்பட்ட ஓர் இருக்கையில் மேலாடையுடன் தாமும் அமர்ந்தார். அத்தேசிகர் வினவியவைகட்கெல்லாம் குமரகுருபரர் விடையளித்துவந்தார். மாசிலாமணி தேசிகர் புன்முறுவல்கொண்டு இறுதியில், பெரிய புராணத்தில் உள்ள,

'ஐந்துபேர் அறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆநந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்'

என்னும் திருப்பாடலின் அனுபவப் பயன் யாது?' என்று கேட்டருளினர். அவ்வளவில் குமரகுருபரருடைய வாக்குத் தடைபட்டது. உடனே இருக்கையைவிட்டு எழுந்தார். தாமிருந்த அணையையெடுத்து அப்பால் போட்டார். மேலாடையை இடையிலே கட்டிக்கொண்டார். தேசிகர் முன் உடலின் எல்லா உறுப்புக்களும் நிலத்தில் தோயும்படி வீழ்ந்து பணிந்தார். எழுந்து இருகைகளையும் தலைமேற் குவித்து வணங்கினர். எம்பெருமானே, ஆணவமலத்தால் மறைக்கப்பெற்ற அடியேனுடைய அறியாமையைப் பொறுத்து ஆட்கொண்

*ஐந்துபேர் அறிவு-மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐந்தின் அறிவு. கரணங்கள் நான்கு-மனம் புத்தி சித்தம் அகங்காரம். இந்து-திங்கள். மாறிலா மகிழ்ச்சி-கெடாத மகிழ்ச்சி.

டருளல் வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். 'நீ காசிப்பயணஞ் சென்று மீள்வையாகின் அருள் புரிவோ'மென்று மாசிலாமணி தேசிகர் திருவாய் மலர்ந்தருளினர். அதற்குக் குமரகுருபரர் காசி வரை சென்று மீளும் அளவும் இவ்வுடல் நிற்பதோ கிலேயில்லை. இறந்து பிறப்பினும் தேவரீருடைய திருவருளுக்கு உரியனாதல் ஐயமாம். ஆகலால் அடியேனுடைய குற்றத்தை உள்ளத்திற் கொள்ளாது உவந்தருள்புரிதல் வேண்டுமென்று இரந்து வேண்டிக்கொண்டார். மாசிலாமணிப் பெருமானும் திருவுள மிரங்கித் 'தில்லைவரையிலேனுஞ் சென்று ஒரு மண்டலம் தங்கி வருவாயாக' என்று அருள் சுரந்தார்.

குமரகுருபரர் தேசிகர் திருவாக்கைத் தலைமேற்கொண்டு பயணப்பட்டுத் திருப்புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயிலை யடைந்தார். அங்கெழுந்தருளியுள்ள இறைவனையும் இறைவியையும் முத்துக்குமரப் பெருமானையும் போற்றி, அப்பதியின் எல்லையைத் தாண்டினர். அப்போது முத்துக்குமாரசாமி பூசகர் ஒருவர் வடிவங்கொண்டு குமரகுருபரருக்கு முன்பாகத் தோற்றினர். திருநீறளித்துக் குமரகுருபரரைப் பார்த்து 'நம்மைக் குறித்தும் ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாயாக' என்று கட்டளையிட்டு மறைந்தருளினர். அவர் மறைந்தருளியதும் எழுந்தருளியவர் முருகக் கடவுளே என்று குமரகுருபரர் அறிந்தார். திரும்பித் திருக்கோயிலையடைந்து ஓரிடத்தில் அமர்ந்து பிள்ளைத்

தமிழைப் பாடத் தொடங்கினர். எவ்வாறு தொடங்கலாமென்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில், 'பொன் பூத்த குடுமி' என்று ஒரு வாக்கு வெளிப்பட்டது. குமரகுருபரர் அதனையே முதலாகக் கொண்டு பிள்ளைத்தமிழைத் தொடங்கினர். செங்கீரைப் பருவம் பாடும்போது, 'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்' எனவும், தேனூறு கிளவிக்கு என்று தொடங்குங்கால், 'வாயூறி நின்றவன்' எனவும் பல வாக்குகள் தோன்றின. அவைகளையெல்லாங் குமரகுருபரர் திருவருட் செயலாகக் கொண்டு பாட்டிலமைத்துப் பிள்ளைத்தமிழ் நூலை முடித்தார். பிறகு அந்நூலை அக்கடவுள் திருமுன்பே அரங்கேற்றஞ்செய்து, அங்குச் சில நாள் தங்கியிருந்தார்.

பிறகு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுச் சீகாழி முதலிய சிவப்பதிகளைப் போற்றி வழிபட்டுக் கொண்டு தில்லையை அடைந்தார். சிவகங்கையில் முக்காலமும் இனிது நீராடி, கூத்தப்பிரானை முக்காலமும் போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தார். அந்நாளில், சிதம்பர மும்மணிக் கோவை என்னும் ஒரு நூலைப் பாடியருளினர். குமரகுருபரர் தாம் தங்கியுள்ள விடத்திலிருந்து திருக்கூட்டத்தோடு அம்பலவாணன் அடிபிணை தொழுதற்குச் செல்லும் வழியில் ஒரு சைவாசாரியர் புராணச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். குமரகுருபரர் அவ்வழி செல்லும்போது, சொற்பொழிவாற்றும் சைவாசாரியரைத் தவிரப் புராணங் கேட்போர்

அனைவரும் தினந்தோறும் எழுந்து நின்று குமர குருபரர்க்கு வணக்கஞ் செய்வது வழக்கம். ஒரு நாள் ஒருவர் அச்சைவாசாரியரைப் பார்த்து, 'நீவிர் மட்டும் ஏன் எழுந்து திருவருட் பெரியா ராகிய குமரகுருபரர்க்கு வணக்கஞ் செலுத்துவ தில்லை ?' என்று வினவினர். அதனைக் கேட்ட சைவாசாரியார், 'அவர் இலக்கண கவியா வரகவி தானே' என்று இகழ்ச்சியாக இயம்பினர். அவர் அவ்வாறு கூறியதைப் பொறாத அன்பர் ஒருவர் குமரகுருபரரிடஞ் சென்று அச்செய்தியைக் கூறினர். அதனைக் கேட்ட குருபரர், 'வருந்திப் பெறுவது இலக்கணகவி; வருந்தாமலே எளிதாகப் பெறுவது வரகவி. இஃதை அவர் உணராது இயம்பினும் சொல்லளவில் நம்மைப் போற்றிய வரேயாகிறார். ஆயினும் அவர் ஐயத்தையும் அகற்றுவோம்' என்று கூறிச், 'சிதம்பரச் செய் யுட்கோவை' என்னுமோ ரரிய யாப்பிலக்கண நூலை இயற்றியருளினர். அந்நூலைப் பார்த்த சைவாசாரியர் குமரகுருபரரின் யாப்பிலக்கணப் புலமையையும் இனிதுணர்ந்து அவர்தம் அன் பராயினர். சிவகாமியம்மை இரட்டைமணிமாலை என்னும் நூலும் குமரகுருபரரால் சிவகாமியம்மை மீது செய்யப்பெற்றது.

இவ்வாறு கூத்தப்பிரானைப் போற்றுதலும் நூல் செய்தலும் ஆகியவற்றைச் செய்துகொண் டிருக்கும்போது ஒரு மண்டலம் ஆயிற்று. மாசிலா மணி தேசிகர்மீது, 'பண்டார மும்மணிக்கோவை'

என்னும் நூலைப் பாடிக்கொண்டு தில்லையை விட்டுப் புறப்பட்டுக் கருமபுரத்தை யடைந்தார். தாம் பாடியுள்ள மும்மணிக்கோவையினைத் தேசிகர் முன் அரங்கேற்றஞ் செய்தார். மாசிலாமணி தேசிகர் திருவுளம் மகிழ்ந்து, குமரகுருபரரைப் பார்த்து, 'நீ இயல்பாகவே துறவியாயினும் வரன் முறைப்படி துறவிக்குரிய காவியுடை முதலிய அடையாளங்களையும் அணிந்து கொள்வாயாக' எனக் கூறி அவற்றையளித்து, மெய்யறிவையும் கூறியருளினார். அவ்வாறு துறவுநிலையை அடைந்த அடிகள் தேசிகரை வழிபட்டுக்கொண்டு அவ்விடமே தங்கியிருந்தார். ஒருநாள் தமக்குத் திருமலை நாயக்கர் அளித்த பொருள்களைத் தேசிகர் திருமுன்பு வைத்து ஏற்றருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். மாணவர்க்கு மெய்யறிவைப் புகட்டும் அறிவாசிரியர் அம்மாணவரிடமிருந்து எத்தகைய பொருளுதவியையும் ஏற்றருளல் கூடாது. அதனை நன்குணர்ந்த தேசிகர், அடிகளை நோக்கி, 'நீ இப்பொருள்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு காசியம்பதியை அடைந்து அங்கிருந்து அறங்களைச் செய்வாயாக' என்று கட்டளையிட்டார்.

அடிகளுந் தேசிகருடைய கட்டளையைத் தலைமேற்கொண்டு தம்முடைய பொருள்களை யெல்லாம் ஒட்டகங்களின்மீது ஏற்றிக்கொண்டு காசியை நோக்கிப் புறப்பட்டார். வழியிலுள்ள திருத்தில்லை முதலிய சிவப்பதிகளை வணங்கிக்கொண்டு காஞ்சி

நகரையடைந்து அங்குச் சிலநாள் தங்கியிருந்தார். அப்போது பிள்ளைப்பெருமாளையங்கார் பல வைணவப் புலவர்களோடு வந்து சமயக் கோட்பாட்டைப் பற்றிச் சொற்போரிட்டார். தக்க நேர்மையான வழிகளை நன்கு எடுத்துக்காட்டி அடிகள் ஐயங்காரைத் தோற்கடித்தார். பின்னர் அவ்விடமிருந்து நீங்கித் திருக்காளத்தி முதலிய பதிகளைப் போற்றி வழிபட்டுக்கொண்டு இறுதியில் காசியை அடைந்தார். காசியின் எல்லையை அடைந்தவுடன் சிவிகையில் நின்றும் இறங்கிக் கங்கையை வணங்கி நீராடித் தினசரிக் கடன்களையெல்லாம் செய்து முடித்தார்.

அடிகள் காசியை அடைந்த காலத்தில் அம்மாநகர் மகமதியர்களின் ஆட்சியில் அகப்பட்டுக் கொண்டிருந்தது. எங்குப் பார்ப்பினும் காடுகளடர்ந்து மகமதியர் பள்ளியும் சமாதியுமே நிறைந்திருந்தன. அடிகளுள்ளத்தில் காசியம்பதியின் நிலைமை கவலையை அளித்தது. அடிகள் அன்றிரவு உறங்கும்போது, காடுகளால் மறைபட்டுள்ள கேதாரத்தி லெழுந்தருளிய இறைவன் கனவில் தோன்றி 'நாம் காடுகளால் மூடப்பட்டிருக்கிறோம்; காடு களைந்து நம்மைப் பூசிப்பாயாக என்று கட்டளையிட்டருளினர். அடிகள் மறுநாள் கேதாரத்தையடைந்து காடுகளை யழிக்கச்செய்து அதன் நடுவே எழுந்தருளிய இறைவனைப் பூசித்து வழிபட்டார். பின்னர் விசுவநாதரையும் விசாலாட்சி

யையும் போற்றி வழிபட்டார். காசிக் கலம்பகம் என்னும் நூலையும் பாடியருளினர்.

அடிகள் அங்கு தங்கியிருக்கும்போது டில்லி பாட்சா என்பவன் காசியை அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அடிகள் தாம் விரும்பிவந்த காரியத்தை செய்தற்கு ஓர் அறச்சாலையைக் கட்ட எண்ணினர். அதற்குரிய இடத்தைப் பெறுவதற்கு அரசனைக் கண்டு பேசவேண்டியது கட்டாயமாக விருந்தது. அவன் பேசுகிறமொழி இந்தி. அதனைத் தமக்குப் புலப்படுத்தியருளுமாறு எல்லா மொழி களிலும் நிறைந்தவளாகிய கலைமகளை நோக்கிச், 'சகலகலாவல்லிமாலை' என்னும் பத்துப் பாடல்க ளடங்கிய சிறிய புகழ் நூலைப் பாடியருளினர். கலை மகளும் இந்தி மொழியை அடிகளுக்கு விளக்கி யருளினள். பிறகு அடிகள் அரசன் அவைக்குச் சென்றார். அவனோ அடிகளின் பெருமையை அறி யாத புறச்சமயத்தானாதலின், அடிகட்கு எவ்வித சிறப்புஞ் செய்யாமலே அடிகள் யார் என்றும், எதற்காக வந்திருக்கிறார் என்றும் நிற்கவைத்த படியே கேட்டான். அடிகள் அரசனை நோக்கி, 'நம்மைப் பெருமைப்படுத்த வந்த எம்மை இவ்வாறு சிறுமைப்படுத்தி நிற்கவைத்துக்கொண்டே பேசு வது தக்கது அன்று' என்று கூறினர். அதற்கு அம் மகமதிய அரசன், 'நும்மிடம் ஏதேனும் சிறப் பைக் கண்டாலல்லாமல் யான் நும்மைச் சிறிதும் பெருமைப்படுத்தமாட்டேன்' என்று இறுமாப் புடன் பதிலளித்தான். அடிகள், அப்படியாயின்

னாளைக் காட்டுவோமென்று இயம்பி இருப்பிடத்திற்குத் திரும்பிவிட்டார். மறுநாள் இறைவியை வணங்கித் தமக்கு அவளுடைய ஊர்திகளில் அஞ்சத்தக்கதாகிய சிங்கத்தைச் சிறிது நேரம் தருதல் வேண்டுமென்று வேண்டினர். இறைவியும் அடிகள் விரும்பியவாறே தனது சிங்கத்தைக் குமர குருபர அடிகளிடம் அனுப்பினள். அடிகள் அச்சிங்கத்தின்மீது ஏறிக்கொண்டு அரசன் அவைக் களத்தை யடைந்தார்.

அடிகளைச் சிங்கத்தின்மீது கண்டதும் அவையினார் அஞ்சி நடுங்கி ஓட்டமெடுக்கத் தொடங்கினார். அரசனும் அலறினன். சிங்கத்தை அனுப்பி விடுமாறு வேண்டி அடிகளை வணங்கினன். அடிகள் அரசனைப் பார்த்து, 'நீர் இருப்பது உயிரற்ற சிங்கம்; நாமிருப்பது உயிருள்ள சிங்கம். ஆயினும் இதனை நீர் கண்டு அஞ்சவேண்டியதில்லை. இஃது உம்முடைய கண்களுக்கு மட்டும் ஆவாகத் தோன்றும்' என்று அருளினர். அதற்குப்பின் அரசன், அடிகள் அவைக்கு வரும்போதெல்லாம் தகுந்த இருக்கையளித்துப் போற்றி வணங்கினன். அடிகள் அரசனை மகிழச் செய்தற்பொருட்டுப் பல பொருள்களைப்பற்றி ஒவ்வொருநாளும் சொற்பொழிவு செய்து அனைவரையும் உவப்படையச் செய்துகொண்டிருந்தார். போரைக் குறித்து அடிகள் பேசின், கிழவர்கள்கூட மீசை துடிதுடிக்கப் போர்க்கருவிகளைத் தூக்கிக்கொண்டு ஆரவாரிப்பார்கள். சிற்றின்பத்தைப்பற்றிக் கூறினலோ

அரசனுடைய குரு முதலான துறவிகள்கூட விரக நோயால் மயங்கி விழுவார்கள். அடிகளின் சொல்லாற்றல் அவ்வாறு ஆற்றல் மிகுந்ததாக விருந்தது. அடிகள் பல பொருள்களைப்பற்றிப் பேசியிருந்தும் அரசனைச் சூழ்ந்துள்ள மகமதியர்கள் மற்றவைகளைப்பற்றி ஐயப்படலின்றி இன்பப் பொருளைப் பற்றி மட்டும் ஐயங்கொண்டார்கள். பயிற்சியில்லாமல் இவ்வளவு பேச முடியாது. ‘இவர் பகல் துறவி போலும்’ என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்கள். இச்செய்தி அடிகளுக்குத் தெரிய வந்தது. அவர் அம்மகமதியர்களுக்கு அறிவு புகட்ட வெண்ணினர். மிகவும் களிம்பேறிய ஒரு செப்புப் பாத்திரத்தைக் கொண்டுவரச் செய்தார். தம்மைப் பழித்துரைத்த மகமதியர்களைப் பார்த்து, ‘நாளைக்கு இதை மருந்தில்லாமலே பொன்னாக்குகிற ஓர் இரசவாதஞ் செய்வோம்’ என்றார். அக்கலத்தை அவர்கள் பார்க்கும்படியாக மலத்திலே புதைக்கச் செய்தார்.

மறுநாள் மன்னன் அவை கூடியது. அரசன் முதலிய அனைவரும் வந்து கூடினர். அடிகள் முதல் நாள் மலத்தில் புதைத்த கலத்தை யெடுத்துச் சுத்தஞ்செய்து அவையில் வைக்கச்செய்தார். அப்பாத்திரம் பொன்னாக விளங்கியது. முதல் நாள் அடிகளை இகழ்ந்த மகமதியர்கள், ‘அக்கலம் இவ்வாறு விளங்குவது இரச வாதத்தினால் அன்று. மலம் புளிப்பாதலின் இப்படி விளங்குகின்றது’ என்றார்கள். அடிகள் அம்மகமதியர்களை நோக்கி,

'மலம் புளிப்பென்கிறீர்களே ; நீங்கள் அதனையும் உண்டு பார்த்தீர்கள் போலும்'' என்றார். மகமதியர்கள் அடிகளைச் சூழ்ந்துகொண்டு சினந்தனர். அப்போது அடிகள் அவர்களை நோக்கி, 'இத்தகைய சினம் நேற்று எமக்கும் உண்டாகியிருக்குமன்றோ ?' என்று வினவினர். அறிவாளியான அரசன் முதலாயினோர் அம் மகமதியர்களை அடக்கி அமரச்செய்தனர். அடிகளின் அறிவுமாட்சியைக் கண்டு வியந்தனர்.

அரசன் அடிகள் மாட்டு மிகுந்த அன்புடையவனாகவிருந்த போதிலும், அரசனைச் சூழ்ந்திருந்த அரசனுடைய குரு முதலானோர் அழுக்காறுடையவர்களாக விருந்தார்கள். அவர்கள் அரசனைப் பார்த்து, 'உம்முடைய நண்பராகிய குமரகுருபரர் அறிவில் வல்லவராயினும் அவர் மேற்கொண்டுள்ள தெய்வம் பொய்' என்று கூறினார்கள். அரசன் அவர்கள் கூறியதை அடிகளுக்கு அறிவித்தான். அடிகள் சைவசமயத் தெய்வ உண்மை அனைவருக்கும் புலப்படுத்த விரும்பினர். நன்கு பழுக்கக் காய்ந்த இரும்பைக் கையிலே தாங்கிச், 'சைவசமயக்கடவுளாகிய சிவபெருமானே மெய்த்தெய்வம்' என்று கூறினர். செயற்கரும் அச் செய்கையைக் கண்ட அனைவரும் சிவபெருமானே மெய்த்தெய்வமென்று தெளிந்தனர். அழுக்காறு கொண்ட மகமதியர்களோ அடிகள் செய்தது கண்கட்டு வித்தை யென்று கூறி மழுப்பினர்.

மற்றொருநாள் அம் மகமதியர்கள் அரசனைப் பார்த்துத், 'துறவிகட்குக் குல வேறுபாடும் மத வேறுபாடுங் கூடாது. ஆதலின் குமரகுருபரரை நமது இல்லத்தில் உணவு கொண்டருளுமாறு உரைக்கவேண்டும்' என்றனர். அவர்கள் அவ்வாறு கூறியமைக்குக் காரணம் குமரகுருபரர் உண்பதற்கு மறுப்பார். அதனால் அரசருக்கும் அவருக்கும் வெறுப் பேற்படும் என்னும் கெட்ட எண்ணமேயாம். அரசனும் அவர்கள் கூறியதற்கு உடன்பட்டு ஒருநாள் அடிகளைப் பார்த்து, 'நமது அரண்மனையில் ஒரு நாளைக்கு உணவு உட்கொள்ள வேண்டு'மென்று வேண்டிக்கொண்டான். அரசன் வேண்டுகோளுக்கு அடிகளும் உடன்பட்டார். தம் ஆள் ஒருவனிடத்தில், ஒரு தட்டில் செவ்வரத்தம் பூக்களைவைத்து ஒரு வெள்ளைத் துணியினால் மூடிக் கொண்டு வரும்படி திட்டஞ் செய்தார். தாம் முன்னால் அரண்மனைக்குச் சென்றார். அங்கு தமக்குப் படைக்கப்பட்டுள்ள ஊன் வகைகளெல்லாம் எவ்வெவ் விலங்கின் ஊனென்று தனித் தனியே கேட்டுக்கொண்டுவந்தார். அரசனும் ஒவ்வொன்றாகக் கூறிவந்தான். இறுதியில் அடிகள் அரசனைப் பார்த்துப் 'பன்றியின் ஊன்மட்டும் இல்லையே; அஃது என்னிடமிருக்கிற' தென்று கூறித் தம் ஆள் கொண்டுவந்த தட்டினை வாங்குமாறு கையை நீட்டினார். மகமதியர்கள் பன்றியின் ஊனை உண்ணார். அதனை வாயினால்கூடச் சொல்லார். ஆதலின் அரசன், அடிகள் பன்றியின் ஊன்

தம்மிடம் இருப்பதாகக்கூறித் தட்டை வாங்கக் கையை நீட்டியதும் அதனை வாங்காது தடுத்தான்.

அடிகள் அரசனைத் தம் வழிப்படுத்த வெண்ணி அங்குப் படைக்கப்பட்டிருந்த ஊன் வகைகளை யெல்லாம் உற்று நோக்கினார். அவ்வளவில் அவைகளெல்லாம் உயர்ந்த கனிவகைகளாக மாறிவிட்டன. அரசன் முதலிய அனைவரும் மிகுந்த வியப்படைந்தனர். அரசன் அடிகளை வணங்கி, 'நான் செய்ய வேண்டிய கடமை யாது?' என்று வினவினான். அடிகள் தாம் ஓர் அறச்சாலை ஏற்படுத்தி அறங்கள் செய்வதற்குத் தகுந்த இடம் வேண்டுமென்று கூறினார். அரசனும், 'அப்படியே தங்கட்கு விருப்பமான இடத்தைத் தருகிறேன்' என்று கூறினான். அடிகள் எவ்விடத்தில் இடங் கேட்கலாமென்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். அன்றிரவில் கேதாரத்தி லெழுந்தருளிய இறைவன் அடிகளின் கனவில் தோன்றி, 'இரட்டைக் கருடன் வட்டமிடும் இடத்தைக் கே'ளென்று கூறி மறைந்தருளினர்.

மறுநாள் அடிகள் கேதாரநாதரை வணங்கிக் கொண்டு வெளியில் வரும்போது அரசனுடைய பள்ளிவாசலில் இரட்டைக் கருடன் வட்டமிடுதலைக் கண்டார். அரசனிடத்திற் சென்று தமக்கு வேண்டிய இடத்தைக் கேட்டார். அரசனும் எவ்விதமான தடையுங் கூறாது அடிகள் கேட்ட இடத்தில் ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டித் தனது அறி

குறியும் வைத்துக்கொடுத்தான். அந்த இடத்தில் எழுந்தருளி யிருந்துகொண்டு அடிகள் தமக்குத் திருமலை நாயக்கர் அளித்த பொருளைக் கொண்டு பலவகையான அறங்களைச் செய்யலானார். அந்த இடந்தான் இன்றுங் **குமாரசாமி மடம்** என்னும் பெயருடன் வழங்குகின்றது.

அடிகள் கேதாரத்தில் எழுந்தருளிய இறைவனுக்குந் திருக்கோயில் அமைத்துப் பூசனை முதலியவற்றிற்கும் ஏற்பாடு செய்தார். அவ்வாறு பலவகைத் திருப்பணிகள் செய்துகொண்டிருக்கும் போது இடை யிடையே தருமபுரத்திற்குச் சென்று தம்முடைய அறிவாசிரியரையுங் கண்டு வழிபட்டுக் கொண்டு வந்தார். அந்நாளையில் அடிகள் பனி மலையின்மீது திருமடமொன்று ஏற்படுத்த எண்ணினார். வாகீச முனிவர் என்னுந் தம்பிரானை அப் பணி புரிய அமர்த்தினார். அவர் நேப்பாள நாடு சென்று முகரங்கி என்னுமிடத்தில் ஒரு திருமடம் அமைத்தார். அங்கிருந்து சைவர்களுக்கு வேண்டிய சிவமணிகளைக் காசிக் கனுப்பினார். அது முதல் சிவ கண்மணிகள் தென்னாடெங்கும் மிகுதியாகப் பரவின. அடிகள் நான்காவது முறையாகத் தருமபுரஞ் சென்று தம்முடைய அறிவாசிரியரைக் கண்டு வணங்கியபோது இனிமேல் தமக்குத் தேசிகரைவிட்டுப் பிரிந்திருக்க விருப்பமில்லை யென்று தெரியப்படுத்தினார். தேசிகர் மாணவராகிய அடிகளை நோக்கி,

*காட்டிருந் தாலு மலையிருந் தாலுங் கருதரிய
நாட்டிருந் தாலு நமக்கென்ன காணல்ல தோர்கமலை
வீட்டிருந் தாண்டருள் ஞானப்ர காசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே

என்னும் பாட்டை யருளிச்செய்ததுடன் மீனாட்சி யம்மையையும் சொக்கலிங்க மூர்த்தியையும் பூசனை புரியப் பணித்து விடையளித்தார். அடிகள் மீண்டுங் காசியை யடைந்து பல அறங்களைப் புரிந்து கொண்டிருந்து வைகாசித் திங்களிலே கிருட்டிண பக்கத் திருதியையில் வீடுபேற்றை யெய்தினார்.

## கக. சிதம்பர அடிகள்

பாண்டிமா நாட்டின் தலைநகராக விளங்குவதும் பன்னிரு திருப்பெயர்களையுடையதும் ஆகும் மதுரைமா நகரம். அந்நகரிற் சங்கப்புலவர்கள் வழியில் தோன்றினவரும் அங்கயற்கண் ணம்மையை வழிபடு கடவுளாகக் கொண்டவருமாகிய ஒருவர் ஏறக்குறைய இருநூற்றெண்பது யாண்டுகட்கு முன்னர் இருந்தார். அவருடைய பெயர் முன்னர்ச் சிதம்பர கவிராயர் எனவும் பின்னர்ச் சிதம்பர சுவாமிகள் எனவும் வழங்கியது. அவர் இலக்கண இலக்கிய நூல்களிலே மிகவும் வல்லவராக விளங்கினார்.

அந்நாளில் குமார தேவர் என்னும் பெரியார் ஒருவர் விருத்தாசலம் என்னும் பழமலையிலே

1. கமலை - திருவாரூர். விரை - மணம்.

மணிமுத்த ஆற்றின்கரையில், உள்ள ஓர் அரசமர நிழலில் அமர்ந்து பலநாள் நிட்டை புரிந்துகொண்டிருந்தார். அப்பெரியார் உண்மை அறிவு கைவரப்பெற்றவர். அவர் ஆறு திங்களுக்கொரு முறை கொங்கு நாட்டிலுள்ள அவிநாசிக்குச் சென்று தம்முடைய ஆசிரியராகிய சாந்தலிங்க தேசிகரைக்கண்டு வழிபாடு செய்துகொண்டு வரும் வழக்கமுடையவர். பழமலையிலிருந்து அவிநாசிக்குச் செல்லும் வழியில் ஓரூரில் ஓர் இரெட்டியார் இருந்தார். அவருக்கு நீண்ட காலமாகப்பிள்ளைப்பேறில்லாதிருந்தது. குமார தேவரின் திருநீற்றுப் பலனாலே இரண்டு பிள்ளைகள் பிறந்து வளர்ந்து கல்விகற்கும் காலத்தை யடைந்தனர்.

இரெட்டியார் முற்கூறிய சிதம்பர கவிராயரை மதுரையில் நின்றும் வரவழைத்துத் தம் மக்களுக்குக் கல்வி கற்பிக்கச் செய்தார். குமார தேவர் அவிநாசிக்குச் செல்லும் காலங்களில் அந்த இரெட்டியார் இல்லத்திற்குச் சென்று உணவு கொண்டு செல்வர். ஒரு முறை குமார தேவர் அவ்வாறு சென்றார். அப்போது முற்கூறிய சிதம்பர கவிராயர் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார். அக் கவிராயர் குமார தேவரைக் கண்டும் வந்தனை வழிபாடுகள் செய்து போற்றாதிருந்தார். அவர் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆற்றலைக் கண்டு மகிழ்ந்த குமார தேவர், அவரை ஆட்கொள்ள வேண்டுமென்று திருவுள்ளத்தில் எண்ணினார். சிதம்பர கவிராய

ரைப் பார்த்துச் சில சொற்களுக்குப் பொருள் வினவினர். சிதம்பர கவிராயருக்கு எவ்வளவோ ஆற்றலிருந்தும் குமாரதேவருடைய திருமுன்பு பதில் கூறும் ஆற்றல் உண்டாகவில்லை. எனவே, அவர் குமார தேவருடைய அடிகளில் வீழ்ந்து வணங்கித் தம்மை ஆட்கொண்டருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். குமாரதேவரும் அவருடைய வேண்டுகோட் கிணங்கிச் சிதம்பர கவிராயரை உடனழைத்துச் சென்றார்.

குமார தேவரும் சிதம்பர கவிராயரும் சாந்த லிங்கசாமிகளைக் கண்டு போற்றி வழிபட்டனர். சாந்தலிங்கசாமிகள் சிதம்பர கவிராயரின் ஆற்றலை யறிந்து மகிழ்ந்தார். தாமியற்றிய கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் முதலிய நான்கு நூல்களையும், காழிக்கண்ணுடைய வள்ளலார் இயற்றிய ஒழிவிலொடுக்கத்தையும் கொடுத்து அவைகளுக்கு உரையெழுதுமாறு கட்டளையிட்டருளினர். சிதம்பர கவிராயரும் அக்கட்டளையை உச்சிமேற்கொண்டு வணங்கினர். பின்னர் இருவரும் பழமலையை அடைந்தனர். குமார தேவர் சிதம்பர கவிராயருக்கு அறிவுத் தீக்கை முதலியன செய்து திருவருள் புரிந்தார். அதுமுதல் சிதம்பர கவிராயர் சிதம்பர சுவாமி என்று வழங்கப்பெற்றார்.

சிதம்பர அடிகள் ஒருநாள் ஞானசமாதி கூடியிருந்தார். அப்போது மயிலொன்று தோன்றி வடிவத்தைச் சிறகால் மறைத்து ஆடிநின்றது.

அதன் பொருளை யுணராத சிதம்பர அடிகள் தம் ஆசிரியராகிய குமாரதேவரிடஞ் சென்று நிகழ்ந்ததைக் கூறினர். அவர் கூறியதைக் கேட்ட குமாரதேவர், 'நமக்கு இங்கு உயிர்த்துணையாய் நிற்கும் பெரியநாயகியார் நமக்கு எல்லாவற்றையும் புலப்படுத்துவதைப்போல, உனக்கு உயிர்த்துணையாய் நிற்கும் அங்கயற்கண்ணம்மை அதனைப் புலப்படுத்தும். நீ மதுரைக்குச் சென்று அம்மையை வழிபடுவாயாக' என்று கட்டளையிட்டருளினர். சிதம்பர அடிகளும் ஆசிரியர் உரைப்படி மதுரைக்குச் சென்றார். நாற்பத்தைந்து தினங்கள் வரையில் நாடோறும் பொற்றாமரையில் நீராடினர். நண்பகற்போதில் ஒரு பிடி பச்சையறுகை மட்டும் உணவாகக் கொண்டார். மூன்று வேளையும் அம்மையைத் தொழுதுகொண்டு கடுமையாக நிட்டை சாதித்துக்கொண்டிருந்தார்.

அங்கையற்கண் அம்மையார் சிதம்பரவடிகளை ஆராயும் பொருட்டுச் சுரம் கைகால் பிடிப்பு முதலிய நோய்களை உண்டாக்கினர். சிதம்பர அடிகள் அவற்றிற்கெல்லாம் அஞ்சாமலும் நிலை கலங்காமலும் இருந்ததுடன் மீனாட்சி கலிவெண்பா என்னும் நூலையும் பாடிப் போற்றினர். அங்கயற்கண் அம்மையார் எதிர்வந்து திருவருள் புரிந்தார். "இவ்வூருக்கு வடபால் முப்பது யோசனை தூரத்தில் போரூர் என்னும் அறுமுகன் திருப்பதி ஒன்று இருக்கிறது. அது, முன்பு ஆறுதரம் நன்கு விளங்கியிருந்து இப்போது மறைந்திருக்கிறது.

அஃது ஏழாந்தடவையாக இப்போது உன்னுலே பழுது பார்க்கப்பட்டு நிலைபெற்று விளங்கவேண் டியதாக விருக்கிறது. அதன்பொருட்டே முருகன் மயில் வடிவாய் வந்து வடிவத்தை மறைத்து நின்ற னன். அவனே நினக்கு ஆசிரியனுகை எழுந்தருளிப் பின் உண்மையை விளக்குவான். நீ உடனே அப்பதிக்குச் செல்வாயாக'' என்று கூறி மறைந் தார். சிதம்பர அடிகளும் அம்மையார் கட்டளை யைத் தலைமேற்கொண்டு திருப்போரூரை நோக்கிப் புறப்பட்டார்.

அந்நாளில் திருப்போரூர் ஆறுமுகப் பெரு மான் திருக்கோயில் பழுதாகிப் பலவகைக் கொடி செடிகளாலும் பனைமரங்களாலும் சூழப்பெற்றுக் காடாக விளங்கியிருந்தது. மதுரையில் நின்றும் புறப்பட்ட சிதம்பர அடிகள் பழமலையை அடைந்து குமாரதேவரைப் போற்றி வழிபட்டு அங்கயற்கண் அம்மை அருளியதைக் கூறினர். குமார தேவரும் சிதம்பர அடிகளைத் திருப்போரூர் சென்று திருப் பணியியற்றக் கட்டளையிட்டருளினர். சிதம்பர அடிகள் திருப்போரூரை நோக்கிப் புறப்பட்டுச் செல்லுகையிற் பொம்மையபாளையம் என்னும் ஊரிலே சதுரக்கள்ளிப் பாலையே உணவாகக் கொண்டிருந்த மெய்யறிவுச் செல்வராகிய பாலைய அடிகள் என்னும் பெரியாரைக் கண்டார். அப் பெரியார் முன்பே சிதம்பர அடிகளின் பெருமை யைக் கேட்டு அவரைப் பார்ப்பதற்கு விரும்பியிருந் தார். இருவரும் எட்டுநாட்கள்வரை அளவளாவி

யிருந்தனர். பின் அப்பெரியாரிடம் விடைபெற்றுக் கொண்டு இளியனூர் என்னும் ஊரை யடைந்தார். அப்போது அவ்வூரில் செங்குந்தர் மரபில் தோன்றிய ஒரு அகவை முதிர்ந்த பெண்மணி முற்பிறப்பின் நல்வினைப்பயனால் அடிகளைக் கண்டு போற்றி வழிபட்டார். அவ்வம்மையார் வேண்டுகோளின்படி அங்குச் சிலநாள் தங்கியிருந்தார். பின்னர் அவ்வம்மையாரைத் திருப்போரூருக்கு வருமாறு பணித்துத் தாம் திருப்போரூரை யடைந்தார்.

அப்போது அங்கு வள்ளைப்பூண்டால் நிறைந்திருந்த ஓடையில் நீராடி நாட்கடன்களைக் கழித்து ஒரு பிள்ளையார் கோவிலில் தங்கியிருந்தார். மூன்றாம் நாள் மாலைப்போதில் ஓடைக்கு வரும்போது சில கள்வர்கள் சிதம்பர அடிகளிடமிருந்த சில பொருள்களைக் கவர எண்ணினர். சிதம்பர அடிகளை யணுகியவளவில் அக்கள்வர்களுடைய கண்கள் குருடாயின. அவ்வளவில் அக்கள்வர்கள் அஞ்சி நடுநடுங்கி அடிகளைப் பார்த்துத் தாங்கள் இன்னாரென்றும் இன்னது கருதி அவ்விடம் வந்தோமென்றும் முறையிட்டுத் தங்களுடைய பிழையைப் பொறுத்து அருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அடிகள் அக்கள்வர்களை நோக்கி, ‘இதுவரையில் நீங்கள் இவ்வழியில் தேடிய பொருள்களில் மிகுந்திருப்பதை முருகப்பெருமானுக்குக் கொடுத்துவிடுவீர்களாயின், அப்பெருமான் உங்கள் கண் தெரியுமாறு திருவருள்புரிவாரென்று’ திருவாய்

மலர்ந்தருளினர். அக்கள்வர்களும் மெய்யாகவே அவ்வாறு செய்வதாக உடன்பட்டனர். அவர் கள் கண்களும் தெரிந்தன. அவர்கள் ஒப்புக் கொண்டபடி தங்களிடமிருந்த பொருள்களைக் கொண்டுவந்து கொடுத்துச் சென்றனர்.

சிதம்பர அடிகள் பனைமரத்தடியில் எழுந்தருளி யிருந்த முருகக்கடவுளைக் கண்டு தினமும் வணங்கிக் கொண்டு பிள்ளையார் கோவிலில் தங்கியிருந்தார். ஒரு நாள் முருகப்பெருமான் குமாரதேவரைப் போலச் சிதம்பர அடிகள் இடத்திற்கு எழுந்தருளி வந்தார். சிதம்பர அடிகள் விரைந்து சென்று வணங்கினர். சிதம்பர அடிகள் குமாரதேவரைப் போலுள்ள முருகப்பெருமானை நோக்கி, 'முதலில் இவ்விடத்தில் முருகப்பெருமானுடைய திருக்கோ யில் முதலியன எவ்வாறு இருந்தன?' என்று வினு வினர். இருவரும் பனங்காட்டை யணுகினர். குமார தேவர் சிதம்பர அடிகளின் நெற்றியில் திருநீறு பூசித், 'திருக்கோயில் முதலியவற்றைப் பார்ப்பா யாக' என்றருளினர். அவ்வளவில், சிதம்பர அடி கள் திருக்கோயில் திருமதில், கோபுரம், கொடித் தூண், மாடவீதி மடாலயம், நன்னீர்ப்பொய்கை முதலியன சிற்ப நூன் முறைப்படி சிறப்புடன் விளங்குவதைக் கண்டார். குமார தேவராகிய முருகப்பெருமான் அக்கோயிலுட் புகுந்து மூல வடிவத்தின் முன்நின்று சிதம்பர வடிகளுக்குத் திருவருள்புரிந்து தம்மைத் தாமே வணங்கிப் பணிந்து மறைந்தருளினர். சிதம்பர வடிகள்

எல்லாம் பழையபடி பலாங்காடாக விளங்குவதைக் கண்டு இது முருகப்பெருமான் திருவருளே என்று உணர்ந்தார்.

பின்னர்ச் சிதம்பர அடிகள், 'நெஞ்சு விடு தூது' என்னும் நூலை இயற்றிப் பழமலையிலுள்ள தம்மாசிரியராகிய குமார தேவருக்கு அனுப்பி விட்டு வழக்கப்படி பிள்ளையார் கோயிலில் தங்கியிருந்தார். அப்போது பக்கத்தூரிலிருந்த ஒரு குயவன் நீணாளாகக் கண் குருடாக இருந்தான். அவன் சிதம்பர அடிகளின் பெருமையைக் கேட்டு அடிகளிடம் வந்து அடிகளின் அடிகளைப்பற்றிக் கொண்டு தன் குறையை முறையிட்டான். அடிகள் அவனுடைய கண்கள் தெரியுமாறு அருளினார். மற்றும் தம்மிடம் வந்து சேர்ந்த நொண்டி, கூன், குட்டம், சுரம், பெருவயிறு முதலிய பலவகை நோயாளர்களின் நோய்களையும் தீர்த்து அருள் புரிந்தார். அவ்வடியார்களும் தங்களாலியன்ற காணிக்கையைச் செலுத்திச் சென்றனர்.

அவ்வாறு சேர்ந்த காணிக்கைப் பொருள்களையும், முன்பு கள்வர் தந்த பொருளையும் கொண்டு திருக் கோயில் திருப்பணியை நடத்தத்தொடங்கினார். அவ்வூர்க் குடிகள் அவ்வூரை ஆண்டவர் பெயருக்கு எழுதிச் செப்பேடு செய்து தந்தனர். திருக்கோயிலின் திருப்பணி தொடங்கப்பெற்றது. பலருடைய பொருளுதவியையுங்கொண்டு திருப்பணி நன்கு நடைபெற்றது. அடிகள் திருப்

போரூர்ச் சந்நிதிமுறை என்னும் நூல் கோவையை முருகப் பெருமான்மீது பாடியருளினர். அப்போதே முன்பு சாந்தலிங்க அடிகள் கட்டளையிட்டருளிய நூல்களுக்கு அரும்பெரும் உரையியற்றியருளினர். திருப்பணி நன்கு முடிவு பெற்றுக் குடமுழுக்குஞ் செய்யப்பெற்றது. நாள் வழிபாடு திருவிழா முதலியவற்றை இனிது நடத்திக் கொண்டிருந்தார். அப்போது தம்மை வந்தடைந்த சிவசங்கர அடிகளுக்கு அருள்புரிந்தார்.

அந்நாளில் சோணசல தேவர் என்பவர் முப்பதாமாண்டு முதல் தொண்ணூறு மாண்டளவும் திருவண்ணமலையை வலம் வந்து தமக்கு வீடு பேற்றை அளிக்கவேண்டுமென்று அண்ணமலையாரை வழிபட்டுக் கொண்டிருந்தார். அச்சோண சல தேவர்முன் அருணசலப் பெருமான் ஆதி சைவரைப்போல் தோன்றித் 'திருப்போரூர்க்குச் செல்க' என்று கட்டளையிட்டருளினர். அச் சோணசல தேவர் போரூரை யடைந்து,

*எடுத்தசன னங்கடொறும் ஈன்றெடுத்த தாய்மார
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில்—அடுத்துவளர்
பன்ன கணை துயிலும் பாலாழி யுஞ்சிறிதாம்
மன்ன சிதம்பரதே வா.

என்று பாடிக்கொண்டு சிதம்பரவடிகளின் திருவடிகளிற் பணிந்தார். அவர் வருகையை எதிர்பார்த்திருந்த சிதம்பர அடிகள் அவருக்குத் திரு

*சனனம் - பிறப்பு. பன்னகணை - பாம்புப்படுக்கை. துயிலும் உறங்கும். பாலாழி - பாற்கடல்.

வருள் புரிந்து வைகாசித் திங்கள் விசாக பௌர்ணமியிற் பேரானந்தப் பெருவாழ்வை யடைந்தார். சிதம்பர வடிகளுக்குப் பின் சிவசங்கர அடிகள் திருப்பணிகளை இனிது புரிந்துகொண்டிருந்தார்.